விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை (15.12.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 361

# இராணுவ அதிகாரியை உடன் விசாரியுங்கள்!

## ஆதாரத்துடன் தகவல் வழங்கிய சகோதரி





*(யாழ்ப்பாணம்) எனது சகோதரனை சனல் 4 வெளியிட்ட புகைப்படத்தில் உயிருடன் பார்த்தேன். எனது சகோதரனுக்கு அருகில் இருந்தவரை இராணுவம் அழைத்துச் செல்வது தொடர்பான புகைப்படம் அதில் காணப்படுகின்றது. எனவே அவ் இராணுவ அதிகாரியை விசாரித்தால் எனது சகோதரனின் விபரம் தெரியவரும் என பெண் ஒருவர் ஆதாரத்துடன் சாட்சியமளித்துள்ளார். அதேபடத்தில் தனது கணவரும் காணப்படுவதாகவும் மற்றொரு பெண் சாட்சியமளித்துள்ளார்.*

(23ஆம் பக்கம் பார்க்க)

## வேலைநிறுத்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்று மேற்கொள்ளப்படவிருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடவுள்ளதாக, தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட யோசனை தொடர்பில் எதிர்ப்பை வெளியிடும் வகையில் இன்று நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடந்த சனிக்கிழமை இரவு பிரதமருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியளிக்காமையால், அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனை அறிவித்தனர்.

இந்தநிலையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், ரயில்வே உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் குறித்த திட்டத்தை கைவிட்டுள்ளன.

24ஆம் பக்கம் பார்க்க....

## நஷ்டஈடு வழங்குவதிலேயே குறியாக இருக்கும் ஆணைக்குழு

### உறவுகள் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் தாய்மார்களில் அதிகமானோர் தமது பிள்ளைகள் காணாமல் போனமைக்கான நஷ்டஈட்டினை நிராகரித்து தமது மகன்களை கண்டுபிடித்து தருமாறே கோரிவருகின்றனர்.

எனினும் ஜனாதிபதி ஆணைக்குழுவினர் தாம் விசாரணை மேற்கொள்ளும் அனைவரிடமும் நஷ்டஈடு வேண்டுமா? வீடு வேண்டுமா? காணி வேண்டுமா? என்ற கேள்விகளை கேட்டு வருகின்றனர்.

நேற்றையதினம் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நஷ்டஈட்டினை நிராகரித்து தாயொருவர் இவ்வாறு சாட்சியமளிக்கின்றார்.

தோட்ட வேலைக்கு சென்ற எனது மகனையும் அவருடன் இருந்த ஏனைய இருவரையும் இராணுவத்தினர்

24ஆம் பக்கம் பார்க்க....

## எரிபொருட்களின் விலை குறையும்?

(கொழும்பு)

எரிபொருட்களுக்கான விலைகள் குறைவடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக சந்தையில் எரிபொருளுக்கான விலைகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலையின் அடிப்படையில் இலங்கையிலும் எரிபொருள் விலை

## ‘தீக்குளிப்போம்’

### பிள்ளைகளை பறிகொடுத்த தாய் கதறல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரியிடம் சொல்லுங்கள் எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு கிடைக்காவிட்டால் நாங்கள் அனைவரும் தீக்குளித்து



## நேற்றைய விசாரணையில் 159 பேர் சாட்சியம்!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்டவர்களில் நேற்றையதினம் 159 பேரின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதி

24ஆம் பக்கம் பார்க்க....

# ஆதாரத்துடன் தகவல் வழங்கிய சகோதரி




(யாழ்ப்பாணம்) எனது சகோதரனை சனல் 4 வெளியிட்ட புகைப்படத்தில் உயிருடன் பார்த்தேன். எனது சகோதரனுக்கு அருகில் இருந்தவரை இராணுவம் அழைத்துச் செல்வது தொடர்பான புகைப்படம் அதில் காணப்படுகின்றது. எனவே அவ் இராணுவ அதிகாரியை விசாரித்தால் எனது சகோதரனின் விபரம் தெரியவரும் என பெண் ஒருவர் ஆதாரத்துடன் சாட்சியமளித்துள்ளார். அதேபடத்தில் தனது கணவரும் காணப்படுவதாகவும் மற்றொரு பெண் சாட்சியமளித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# நஷ்டஈடு வழங்குவதிலேயே குறியாக இருக்கும் ஆணைக்குழு

## உறவுகள் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் தாய்மார்களில் அதிகமானோர் தமது பிள்ளைகள் காணாமல் போனமைக்கான நஷ்டஈட்டினை நிராகரித்து தமது மகன்களை கண்டுபிடித்து தருமாறே கோரிவருகின்றனர்.

எனினும் ஜனாதிபதி ஆணைக் குழுவினர் தாம் விசாரணை மேற்கொள்ளும் அனைவரிடமும் நஷ்டஈடு வேண்டுமா? வீடு வேண்டுமா? காணி வேண்டுமா? என்ற கேள்விகளை கேட்டு வருகின்றனர்.

நேற்றையதினம் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நஷ்டஈட்டினை நிராகரித்து தாயொருவர் இவ்வாறு சாட்சியமளிக்கின்றார்.

தோட்ட வேலைக்கு சென்ற எனது மகனையும் அவருடன் இருந்த ஏனைய இருவரையும் இராணுவத்தினர் 24ஆம் பக்கம் பார்க்க....

# எரிபொருட்களின் விலை குறையும்?

(கொழும்பு)

எரிபொருட்களுக்கான விலைகள் குறைவடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.


உலக சந்தையில் எரிபொருளுக்கான விலைகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலையின் அடிப்படையில் இலங்கையிலும் எரிபொருள் விலைகள் குறை 23ஆம் பக்கம் பார்க்க....

# 'தீக்குளிப்போம்'

## பிள்ளைகளை பறிகொடுத்த தாய் கதறல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரியிடம் சொல்லுங்கள் எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு கிடைக்காவிட்டால் நாங்கள் அனைவரும் தீக்குளித்து இறந்து போவோம் என, ஜனாதிபதி ஆணைக்குழுவினரிடம் தனது இரு பிள்ளைகளை பறிகொடுத்த தாயொருவர் விரக்தியுடன் தெரிவித்துள்ளார்.



நாட்டில் கடந்த காலத்தில்தான் பிரச்சினை இருந்தது, இப்போது இல்லைத்தானே, பிறகு என்னத்துக்கு எங்கள் 24ஆம் பக்கம் பார்க்க....

# நேற்றைய விசாரணையில் 159 பேர் சாட்சியம்!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்டவர்களில் நேற்றையதினம் 159 பேரின் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதி 24ஆம் பக்கம் பார்க்க....

# அமெரிக்காவுக்குச் செல்ல பொன்சேகாவுக்கு விசா மறுப்பு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயக கட்சியின் தலைவருமான பீல்ட் மார்ஷல் சரத் பொனசேகாவின் நுழைவிசைவு விண்ணப்பத்தை அமெரிக்கா இடைநிறுத்தி வைத்துள்ளது.

அமெரிக்கா செல்வதற்கு பீல்ட் மார்ஷல் சரத் 24ஆம் பக்கம் பார்க்க....

# சுஸ்மா விரைவில் இலங்கைக்கு

(சென்னை)

இந்திய வெளிவிவகார அமைசசர் சுஸ்மா சுவராஜ் விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்தவாரம் பாகிஸ்தா 23ஆம் பக்கம் பார்க்க....

# 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவிலிருந்து 2000 ரூபாய் அடிப்படையுடன் இணைப்பு

## பிரதமர் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவில் 2 ஆயிரம் ரூபாய் அடுத்த வருடம் முதல் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மையில் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாயினால் உயர்த்தப்பட்டது. இந்த கொடுப்பனவில் இரண்டாயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படவுள்ளது.

அரச ஊழியர்களின் ஓய்வூதியம் ரத்து செய்யப்படாது. நிதி ஒதுக்கத்துடன் கூடிய புதிய ஓய்வூதியத்திட்டமொன்று 23ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்தவின் சொத்தை கண்டறிய இந்தியா சென்றது இலங்கை குழு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள பணம் மற்றும் சொத்துக்களை மீட்பதற்கு இலங்கை அதிகாரிகளுக்கு இந்தியா உதவிகளை வழங்கியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினரால் பல்வேறு நாடுகளில் பதுக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பது குறித்த ஆலோசனைகளைப் பெறுவதற்காக இலங்கை அதிகாரிகள் இந்தியா சென்றுள்ளனர்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் மூத்த அதிகாரிகளும், சட்டவாளர்களும் தற்போது இந்தியாவில் தங்கி 23ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இராணுவம் ஏற்றிச்சென்ற எனது கணவன் எங்கே?

## ஆணைக்குழுவிடம் மனைவி கேள்வி

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு கைவேலியில் உள்ள காணியை அரசுடைமையாக்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுப்பதாக கடற்புலி உறுப்பினர் ஒருவரின் மனைவி ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கடற்புலி படையணியில் இருந்த எனது கணவரை இராணுவத்தினர் பஸ்ஸில் ஏற்றிச்சென்றார்கள். அவர்கள் எங்கே எனவும் அவர் ஆணைக்குழுவினரிடம் கேள்வி எழுப்பினார்.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் சுமன் என்று அழைக்கப்படும் வைரமுத்து ரதீஸ்வரன் உட்பட ஏனைய கடற்புலியினரை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தோம். இராணுவத்தினரிடம் ஒப்படைத்த கடற்புலியினர் எங்கே? முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் வைத்து இராணுவத்தினர் 3 பஸ்களில் ஏற்றிச் சென்றார்கள். 7 வருடங்கள் ஆகியும் காணவில்லை. பார்க்க வேண்டிய முகாம்கள் அனைத்திலும் பார்த்து விட்டோம் ஒரு இடத்திலும் இல்லை.

எங்கே எனது கணவர். இராணுவத்தினரிடம் ஒப்படைத்தவர்கள் உயிரோடு இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், இராணுவத்தினர் என்ன செய்துவிட்டார்கள் என்றும் ஆணைக்குழுவினரிடம் மனைவி கேள்வி எழுப்பினார். இரண்டு பிள்ளைகளுடன் மிகவும் கஷ்டப்பட்டு இருக்கின்றேன். எனது பிள்ளைகளை படிப்பித்துக்கொண்டிருக்கின்றேன் என்றும் கூறியுள்ளார்.

கணவனை கண்டு பிடிப்பதற்கான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதுடன் நட்டஈடு மற்றும் வாழ்வாதார உதவிகள் தருவதாக ஆணைக்குழுவினர் கூறியுள்ளனர். வாழ்வாதார உதவிகள் எதுவும் வேண்டாமென கூறிய அவர், கணவனை கண்டு பிடித்து தருமாறும். கணவனின் பெயரில் வாங்கிய காணியை, காணி விற்றவர் பிரச்சினை தருவதாகவும் கூறியுள்ளார்.

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் 5 ஏக்கர் காணியை அரச சொத்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றதாகவும் கூறினார்.

அதற்கு தனது கணவரை கண்டுபிடித்து தந்தால், அந்த காணி கூட தனக்கு வேண்டாமென்றும் அவர் ஆணைக்குழுவிடம் கூறியுள்ளார். இராணுவத்தினர் கொண்டு சென்றவர்கள் தொடர்பில் இராணுவ அதிகாரிகளிடம் விசாரணை மேற்கொண்டு பதில் தருவதாக ஆணைக்குழுவினர் கூறியுள்ளனர். (எ-4)

## 20 வங்கிகள் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள 20 வங்கிகள் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

நாடளாவிய ரீதியில் இன்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளவிருந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உரையையடுத்து சில தொழிற்சங்கங்கள் தற்காலிகமாக கைவிட்டுள்ள நிலையில் 20 வங்கிகளைச் சேர்ந்த 30 ஆயிரம் ஊழியர், திட்டமிட்டப்படி இன்று வேலைநிறுத்தப்போராட்டத்தில் குதிக்கவுள்ளனர் என்று இலங்கை வங்கி சேவையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (எ-11)

# தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் எவ்வாறு காணாமல் போயினர்

## சகோதரி கேள்வி

(யாழ்ப்பாணம்)

இறுதிப்போரில் இராணுவத்திடம் சரணடைந்து முகாமில் தடுத்துவைக்கப்பட்ட தனது இரு சகோதரர்கள் மற்றும் மைத்துனனை காணவில்லை என பெண்ணொருவர் சாட்சியமளித்துள்ளார். நேற்றைய தினம் பருத்தித்துறையில் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாகவே இவ்வாறு சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

முகாமில் இம்மூவரும் தடுத்து வைக்கப்பட்ட போது தான் நேரில் சென்று பார்வையிட்டதாகவும் அவர் கூறினாா. மந்திகையை சேர்ந்த நாம் அங்கிருந்து இடம்பெயர்ந்து வன்னிக்கு சென்றிருந்தோம். அங்கு இறுதி யுத்தம் நடைபெற்ற போது இராணுவ கட்டுப்பாட்டிற்குள் நாம் சென்றபோது எனது சகோதரர்கள் மற்றும் மைத்துனனை முகாமிற்குள் அழைத்து சென்றனர்.

அப்போது இராமநாதன் முகாமிலிருந்த எனது தம்பியான சின்னத்துரை செந்தில்நாதன் மற்றும் மைத்துனனான உருத்திரன் குணாகர் ஆகிய இருவரும் 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தியொராம் திகதி அன்று காணாமல் போய்விட்டார். இதே போல் சைவப்பிரகாச முகாமிலிருந்த எனது தம்பியான சின்னத்துரை லோகநாதன் யூலை மாதம் இருபத்து நான்காம் திகதி இரு நாட்களின் பின்னர் காணாமல் போயுள்ளார்.

இந்த முகாம் இரண்டும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே அந்த காலத்தில் இருந்தது. எனது சகோதரர் மற்றும் மைத்துனன் ஆகியோர் முகாமில் இருந்தபோது பலர் கண்டுள்ளனர். முகாமில் இருந்த இவர்கள் எவ்வாறு காணாமல் போயினர்? என கேட்கும் அவர்கள் இருவரின் சகோதரி, அவர்களை இப்போதும் இராணுவம் முகாமில் வைத்துள்ளதாகவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு பலர் இடம்பெயர்ந்து முகாம்களில் இருந்த போது காணாமல் போயுள்ளதாகவும், முகாமில் இருந்த காலத்தில் வாகனங்களில் வரும் சீருடை அணிந்த இராணுவத்தினர் ஆண்கள் மற்றும் பெண்களை தமது வாகனங்களில் ஏற்றிச்சென்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும், அவ்வாறு ஏற்றிச்செல்லப்படுபவர்கள் திரும்பி வருவதில்லை என்ற சாட்சியங்களும் நேற்றைய தினம் பதிவு செய்யப்பட்டுள்ளன. (எ-4)

# அமைதி மர நினைவுப் பரிசை பாப்பரசர் வழங்கி கௌரவிப்பு

## வத்திக்கான் சென்ற ஜனாதிபதிக்கு

(கொழும்பு)

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான பாப்பரசர் முதலாவது பிரான்சிசை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று வத்திக்கானில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பு வழக்கமானதாக இருந்தது என்றும், கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு தாம் மேற்கொண்ட பயணத்தை பாப்பரசர் நினைவு கூர்ந்ததாகவும் வத்திக்கானில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் அண்மைய நிலைவரங்கள், அமைதி மற்றும் நல்லிணக்க முயற்சிகளின் நிலைமை குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் முடிவில், பாப்பரசருக்கு, ஜனாதிபதி வெள்ளிப் பரிசு ஒன்றை வழங்கினார்.

அதேவேளை ஜனாதிபதிக்கு ஒலிவ் கிளைகளில் தயாரிக்கப்பட்ட அமைதி மர (Tree of Peace) நினைவுப் பரிசை பாப்பரசர் வழங்கினார்.



பாப்பரசரின் அழைப்பின் பேரில் அவரைச் சந்திப்பதற்காக ஜனாதிபதி நேற்று முன்தினம் வத்திக்கானுக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


**விற்பனைக்கு**

1)லிஸ்ரர் டீசல் ஜெனரேற்றர்
Lister Disel Generator
10KVA
2)YAMAHA Organ
(2785)

தொடர்புகட்கு: T.P : 077 224 2394

**விற்பனைக்கு**

அரியாலை நெடுங்குளம் வீதியில் அமைந்திருக்கும் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு
(சர்வோதயத்துக்கு அருகாமையில்)
(2787)

தொடர்புகளுக்கு: 0772912551

**கண்ணீர் அஞ்சலி**

தோற்றம் 19-11-1925
மறைவு 12-12-2015
**அம்பலவாணர் தம்பு**



எமது நிறுவனத்தில் கணக்குப் பதிவாளராக பணிபுரிந்த **அம்பலவாணர் தம்பு** அவர்கள் மறைந்த செய்தி அறிந்து துயரடைகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!
(C-2969)

ஸ்ரீ அமலா ஜுவலர்ஸ்
ஸ்ரீராம் ஜுவலர்ஸ்
இல 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர், ஊழியர்கள்
தொடர்பு : 021 222 8334

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி**

இன்று 15/12/2015 கொழும்பில் ஜனாதிபதியினால் கலாபூசண அரசு விருது பெறுகின்ற அயல் கிராமத்தவரும், அன்புத் தொண்டனும், கந்தபுராண போதகருமாகிய திரு.சிதம்பரப்பிள்ளை பசுபதி (குடாநீரூரான்) அவர்களை மனதார வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளும் பெருமைகளும் பெறவேண்டும் என நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகப் பெருமானை வேண்டிப் பிரார்த்தித்து அவரது மகிழ்வில் நாமும் கலந்து பெருமை சேர்த்து இன்புறுகின்றோம்.
(C-2968)

நாகர்கோவில் வடக்கு
அருள்மிகு முருகமூர்த்தி தேவஸ்தான பரிபாலன சபை - நாகர்கோவில்

# மனித உரிமை விவகாரங்களில் அரசுக்கு முழு ஆர்வம் இல்லை

## ஐ.நா.நிபுணர் கருத்து

(யாழ்ப்பாணம்)

**போர்க் காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை விவகாரங்களை கையாளுவது ஊக்கமளிக்கும் சமிக்ஞையாகத் தென்படுகின்ற போதிலும், இலங்கையின் புதிய அரசாங்கம் இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை என்று ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ்ரோப் ஹெய்ன்ஸ் தெரிவித்துள்ளார்.**

நீதிக்குப் புறம்பான, எதேச்சதிகார அல்லது பலவந்தமான படுகொலைகள் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளரான கிறிஸ்ரோப் ஹெய்ன்ஸ் இதுகுறித்து மேலும் கருத்து வெளியிடுகையில்,

"2015இல் வழங்கப்பட்ட ஆணையை இலங்கை நிறைவேற்றும் போது அதுவே என்னைப் பொறுத்தளவில் மிகவும் முக்கியமான ஒரு தருணமாக இருக்கும்.

என்னைப் பொறுத்தளவில் இலங்கையில் நிலைமை முன்னேற்றகரமாகவுள்ளது.

இலங்கையில் பாரியளவில் படுகொலைகள், வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே இவை அனைத்தையும் அரசாங்கமானது 'விசாரணை செய்து தீர்வு காண்பதில் ஆர்வம் காண்பிக்க வேண்டும்.

பல்வேறு மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கான ஆரம்ப கட்டத்தில் தற்போதுள்ளது. இந்த நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் எவ்வாறு இலங்கையில் கொண்டு செல்லப்படவுள்ளது என்பதை எவரும் அறியமாட்டார்கள்.

இலங்கை தனது நாட்டில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறுகின்ற போதிலும் புதிய அரசாங்கம் முழு அளவில் இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்னமும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. குறிப்பாக இலங்கையில் இது முற்றிலும் அமுல்படுத்தப்படவில்லை.

எல்லா விவகாரங்களுக்கும் பொருத்தமில்லாத ஒரு முறைமையை இலங்கை அரசாங்கம் ஊக்குவிக்கிறது.

பொறுப்புக்கூறல் என்பது மிகவும் முக்கியமானதாகும். பொறுப்புக்கூறல் என்பது எல்லாப் பிரச்சினைகளுக்கும் மையமாகவுள்ளது. ஆகவே முதலில் பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்பட வேண்டும்.

பொறுப்புக்கூறல் செயற்படுத்தப்படாதவிடத்து ஏனைய எந்தவொரு பிரச்சினைகளையும் நிறைவேற்ற முடியாது. பொறுப்பளித்தல் என்பது ஒருவரது வாழ்வுரிமைக்கு உத்தரவாதமளிக்கிறது.

எவ்வாறெனினும், அரசாங்கம் என்னை அழைத்தால் நான் நிச்சயமாக இலங்கை செல்வேன். இதற்கு அரசாங்கத்தின் அனுமதி மிகவும் முக்கியமானது. இதனை நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

இலங்கை சில கட்டளைகளை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் என்னால்வழங்கப்பட்ட ஆணையை இலங்கை இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனாலும் இலங்கைக்கு நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிவதற்கு அந்நாட்டு அரசாங்கம் என்னை அழைக்க வேண்டும் என்பதே எனது விருப்பாகும்.

அவர்கள் என்னை அழைத்தால் நான் எல்லா வேலைகளையும் ஒதுக்கிவிட்டு உடனடியாக இலங்கைக்கு விரைந்து செல்வேன்." என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

## மகிந்தவுக்கு என்னைவிட சலுகை அதிகம்



### ஜனாதிபதி கடும் விசனம்

ஒரு நாட்டில் இரண்டு ஜனாதிபதிகள் இருக்க முடியாது. நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்ற நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகளவான வாகனங்களையும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் பயன்படுத்தி வருகின்றார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியான நான் பயன்படுத்துவதை விட அதிகமான வாகனங்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அமைச்சர்கள் மட்டத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தா.

இந்தக் கூட்டத்தின் போது மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை மற்றும் வாகனங்களின் எண்ணிகை தொடர்பான அறிக்கையொன்றை நிதி அமைச்சர் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். (இ-10)

## சவுதியிலிருந்து 44 பேர் திருப்பி அனுப்பி வைப்பு

தொழில் நிமித்தம் இலங்கையில் இருந்து சவுதி அரேபியா மற்றும் கட்டார் நாடுகளுக்குச் சென்றவர்கள் நேற்றுக் காலை இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் அந்நாடுகளில் பல துன்பங்களை அனுபவித்து வந்ததை தொடர்ந்தே அவர்கள் அந்நாடுகளில் உள்ள இலங்கை தூதரகத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 6.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இலங்கை விமானச் சேவைக்குசொந்தமான UL-266 என்ற விமானத்தில் சவுதி அரேபியாவில் இருந்து 44 பேரும், குவைட் விமானச் சேவைக்கு சொந்தமான ku-361 என்ற விமானத்தில் கட்டாருக்கு சென்ற சிலரும் வந்தடைந்தனர். அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, பொத்துவில் மற்றும் பொலநறுவை இடங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு திருப்பிஅனுப்பப்பட்டுள்ளனர். (இ-10)

### மாணவி மீது தாக்குதல்

## பொலிஸ் பரிசோதகருக்கு எதிராகக் குற்றப்பத்திரம்

கொழும்பு-7, வோட் பிளேஸில் உள்ள இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு முன்பாக வைத்து உயர்தொழில்நுட்ப கணக்கியல் டிப்ளோமா மாணவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது மாணவியொருவர் மீது தாக்குதல் நடத்திய பொலிஸ் பரிசோதகருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்த குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு ள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-10)

## சுகாதார அமைச்சுக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு மருத்துவ கல்லூரி மாணவர்கள் சுகாதார அமைச்சுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நேற்றுக் காலை முன்னெடுத்துள்ளனர்.

மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவக் கல்லூரியினை தடைசெய்ய வேண்டும் என வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவ கல்லூரியினை சட்டரீதியானதாக மாற்றியமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், மருத்துவபீட மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, இந்த ஆர்ப்பாட்டத்தினால் கொழும்பு நகர மண்டபம் மற்றும் வோட் பிளேஸ் ஆகிய வீதிகளில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது. (இ-10)

## மகனை விடுவிக்கக் கோரிய தாயை தாக்கியது ராணுவம்

### ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம்

எனது மகன் கடத்தப்பட்ட மறுநாள், எனது மகன் சென்ற துவிச்சக்கரவண்டி மந்திகை இராணுவ முகாம் முன்பாக கிடந்தது என ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்துள்ள தந்தை ஒருவர், கடத்திய தனது மகனை விடுவக்குமாறு இராணுவத்திடம் கேட்ட போது, தனது மனைவியை தாக்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் நான்காம் நாள் விசாரணைகள் நேற்றைய தினம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன் போதே தந்தை ஒருவர் மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார். அன்றைய காலகட்டம் நாங்கள் வாய் திறக்க முடியாத காலகட்டமாக இருந்தது. அதானால்தான் எமது பிள்ளையை வேறு எங்கும் தேடாமல் மனதிற்குள்ளேயே அழுது கொண்டிருந்ததாக கவலையுடன் தெரிவித்தார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பன்னிரண்டாம் திகதியன்று எங்களுடைய வீடு உள்ள இடமான மந்திகை இந்திரம்மன் கோவிலடியிலிருந்து தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு போய் வரும் போது மந்திகை இராணுவ முகாமில் நின்ற இராணுவம் கடத்தி சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

எனது மகனோடு வேறு மூன்று இளைஞர்களும் கடத்தப்பட்டதாக கண்டவர்கள் கூறுகின்றனர். பின்பு எனது மகனை மந்திகை இராணுவம்தான் கடத்தியது என்று தெரிந்து கொள்வதற்காக மந்திகை முகாமருகில் சென்ற போது எனது மகன் சென்ற துவிச்சக்கரவண்டி இராணுவ முகாமின் முன்னால் வீழ்ந்து கிடந்தது.

ஆகையால் எமது மகன் இராணுவ முகாமிற்குள் தான் உள்ளார் என்பதனை நாம் உறுதிப்படுத்திக் கொண்டு, இராணுவத்திடம் எமது மகனை விடுதலை செய்யுமாறு கோரினோம். இவ்வாறு எனது மனைவியே இராணுவத்திடம் சென்று கேட்டிருந்தார். அப்போது எங்களது மகனை தாம் பிடிக்கவில்லை என்றும், வேறு எங்காவது தேடிப் பார்க்குமாறும் இராணுவம் எனது மனைவியிடம் கூறியிருந்தது.

இதனை அடுத்து எனது மனைவி இராணுவ முகாம் முன்னால நின்று அழுத போது எனது மனைவியையும் இராணுவம் தாக்கி அங்கிருந்து செல்லுமாறும் அச்சுறுத்தியிருந்தது. எனது மகனின் பெயர் பரஞ்சோதி தரன்சயன் (கடத்தப்படும் போது வயது-19) எனது மகனை மந்திகையில் இருந்த இராணுவம் தான் கடத்தியது.

எங்களது மகன் இப்போதும் உயிரோடுதான் உள்ளார். அன்று எமது மகனை தேடமுடியாத நிலையில் காணப்பட்டோம். இன்று தேடுகின்றோம், ஆனால் இப்போதும் எனது மகன் கிடைக்கவில்லை. காலம் மாறி செல்கின்றது. நாட்டை ஆள்பவர்களும் மாறுகின் றனர். ஆனால் எம் கண்ணீர் மட்டும் இன்னும் நிற்கவில்லை என்றார். (இ-4)

# லா லிகா கால்பந்து தொடர் வில்லாரியலிடம் வீழ்ந்தது ரியல் மட்ரிட்



கால்பந்து கழக அணிகளுக்கு இடையே நடைபெறும் பிரபலமான தொடர்களில் லா லிகாவும் ஒன்று. இந்தத் தொடரின் லீக் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு லீக் போட்டி போட்டியில் முன்னணி கழக அணியான ரியல் மட்ரிட், வில்லாரியல் அணியை நேற்று முன்தினம் எதிர் கொண்டது.

இதில் ரியல் மட்ரிட் அணி 1:0 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தது. இந்த தோல்வியின் மூலம் 15 போட்டிகள் முடிவில் புள்ளிகள் பட்டியலில் ரியல் மட்ரிட் 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஆட்டம் தொடங்கிய 8ஆவது நிமிடத்தில் வில்லாரியல் அணியின் ரொபர்ட்டோ சோல்டடோ முதல் கோலை பதிவு செய்தார். அதன் பின் அந்த அணி ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

முதல் பாதி நேரத்தில் மேலும் கோல்கள் அடிக்காவிடிலும் ரியல் மட்ரிட் அணியை கோல் போட விடாமல் தடுத்தது. 2ஆவது பாதி நேரத்திலும் ரியல் மட்ரிட் அணியை கோல் போடவிடாமல் சிறப்பான தடுப்பு ஆட்டத்தில் ஈடுபட்டதால் 1:0 என ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தியது. (க)



# சிங்களப் புலிக்கு எதிரான வாக்குமூலம் யாழ்.மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தகவல்கள்ளை விடுதலைப் புலகளுக்கு 50 ஆயிரம் ரூபாயற்கு விற்பனை செய்ததாக கூறி சிங்களப் புலி என அழைக்கப்பட்ட முன்னாள் இராணுவதளபதிக்கு எதிராக பெறப்பட்டகுற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை யாழ்.மேல் நீதிமன்று நேற்றையதினம் நிராகரித்துள்ளது.

கடுவெல பகுதியை சேர்ந்த முன்னாள் இரா ணுவ கப்டனான அத்துறு கங்காநந்கே இந்திக்க சஞ்சீவ (வயது44) 2005 ஆம் ஆண்டு போர் நிறுத்த காலப்பகுதியில் ஏ9 வீதியூடாக தனது குடும்பத்துடன் நல்லூர் கந்த சுவாமிகோவிலுக்கு வந்து விட்டுசென்ற வேளை ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவர் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளை சந்தித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு 3 நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார். இராணுவத்தில் இருக்கும்போதே தன்னை சந்தேகப்பட்டதன் காரணமாகஅவர் இராணுவத்திலிருந்து விலகி தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு மலேசியாவிற்கு வேலைதேடி சென்றபோது அவரது கடவுச்சீட்டில் சந்தேகமிருப்பதாகக் கூறி மலேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இலங்கை புலனாய்வுத்துறையினரிடம் கையளிக்கப்பட்டார். 2014ஆம் ஆண்டுகொழும்பு 6 ஆம் மாடிமற்றும் பூசாதடுப்புமுகாமில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

பின்னர் இவர் மலேசியாவில் விடுதலைப் புலிகளை மீள் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் ஈடுபட்டார் எனக்கூறி யாழ்.மேல் நீதிமன்றில் இந்தவருடம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இவருக்கெதிரான குற்றச்சாட்டில் இவர் 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவ தகவல்களைவிடுதலைப்புலிகளுக்கு 50 ஆயிரம் ரூபாயிற்கு விற்பனை செய்தார் என கடந்த 2015ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 19 ஆம் திகதிகுற்ற ஒப்புதல் வாக்குமூலம் சான்றாக முன்வைக்கப்பட்டது.

அதன்போது சந்தேகநபர் சார்பாக வாதாடிய சட்டத்தரணி ரெமிடியாஸால் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று நேற்றையதினம் அது தொடர்பான கட்டளை இடப்பட்டது.

இவ் வழக்கு தொடர்பாக கட்டளையிட்ட யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைய பதிவு செய்யப்படவில்லை என்றும் சுயேட்சையாக இந்த வாக்குமூலம் வழங்கப்படவில்லை எனவும் இவ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டமை தொடர்பில் நம்பகத்தன்மை குறைந்து காணப்படுவதாக கூறி இக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிபதி நிராகரித்து கட்டளையிட்டதுடன் வேறுசான்றுகள் இருப்பின் மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டு இந்த வழக்கை எதிர்வரும் 18ஆம் திகதிவரை ஒத்தி வைத்துள்ளார். (எ-9)

# கரப்பான் பூச்சியை ருசித்து சாப்பிட்ட ஹோலி

இந்திய டெஸ்ட் அணித் தலைவர் விராட் ஹோலி கரப்பான் பூச்சியை சாப்பிட்டது பற்றிய தகவலை வெளியிட்டுள்ளார்.

டெஸ்ட் அணித் தலைவர் பதவியில் கலக்கும் ஹோலி இலங்கை, தென்னாபிரிக்கா என்று 2 அடுத்தடுத்த டெஸ்ட் தொடரை கைப்பற்றி அசத்தி உள்ளார்.

இந்நிலையில் மும்பையில் நடந்த ஒரு ஆடை தயாரிப்பு நிறுவனத்தின் விளம்பர நிகழ்ச்சியில் ஹோலி கலந்து கொண்டார். அப்போது ரசிகர்களின் பல கேள்விகளுக்கு அவர் ஜாலியாக பதிலளித்தார்.

அந்தசமயம் மலேசியாவில் நடந்த ஒரு



நிகழ்வை அவர் நினைவு கூர்ந்தார். அவர் கூறுகையில், நான் மலேசியாவுக்கு சென்றிருந்தபோது ஊறுகாய் என்று கரப்பான் பூச்சியை ருசித்து சாப்பிட்டு விட்டேன்.

பின்னர் ஒருவர் கூறிய பிறகே அது கரப்பான் பூச்சி என்று எனக்கு தெரிந்தது என்று கூறியுள்ளார். (க)

# எந்த அணியில் தோனி இன்றைய ஏலத்தில் தெரியவரும்

2013ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் தொடரின்போது மேட்ச் பிக்சிங்கில் ஈடுபட்டதாக சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி உரிமையாளர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டது.

இதனடிப்படையில் இரு அணிகளுக்கும் தலா இரண்டு ஆண்டுகள் போட்டியில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

இதனால் அந்த இரண்டு அணிகளுக்கும் பதிலாக புனே, ராஜ்கோட் ஆகிய அணிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான ஏலம் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது.

இந்த இரண்டு அணிகளும் 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. சென்னை மற்றும் ராஜஸ்தான் அணியில் உள்ள 10 பேரை இந்த இரண்டு அணிகளும் தக்கவைத்துக் கொள்ளலாம். இதற்கான நடைமுறை இன்று மும்பையில் உள்ள மும்பை கிரிக்கெட் சபையின் பொழுதுபோக்கு மையத்தில் நடக்கிறது.

இந்த நடைமுறை நிகழ்ச்சியின்போது புனே, ராஜ்கோட் அணிகள் எந்த வீரர்களை தக்கவைத்துக் கொள்ளப்போகிறது என்பது தான் தற்போதைய பெரிய செய்தியாக உள்ளது. இரண்டு அணிகளும் தலா ஐந்து



நபர்களை தக்கவைத்துக் கொள்ளலாம்.

இரண்டு அணிகளிலும் தோனி, ரெய்னா, ஜடேஜா, அஸ்வின், பிரண்டன் மக்கலம், வெயின் பிராவோ, டு பிளசிஸ், ரஹானே, வோட்சன், ஸ்மித் போன்ற முன்னணி வீரர்கள் உள்ளனர்.

இந்த நடைமுறையில் முதல் வீரரை தக்கவைத்துக்கொள்ள முடிவு எடுக்கும் உரிமை புனே அணிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அந்த அணி தோனியை முதல் நபராக தக்கவைத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. அப்படி தக்கவைத்துக் கொண்டால் வீரர்களை ஏலம் எடுக்க தங்களுக்கு ஒதுக்கியிருக்கும் 66 கோடி ரூபாய் சலுகையில் 12.5 கோடி குறைந்து விடும்.

அடுத்த நபராக தன்னுடைய முதல் வீரராக ராஜ்கோட் அணி ஜடேஜாவை தக்கவைத்துக்கொண்டால் அவருக்காக ரூ. 12.5 கோடியை ராஜ்கோட் அணி இழக்கும்.

இந்த இரண்டு அணிகளும் தற்போதைய சென்னை, ராஜஸ்தான் அணிகளில் இருந்து தலா ஐந்து நபர்களை தக்கவைத்துக்கொண்டால் சுமார் 39 கோடியை தனது ஏலத் தொகையில் இருந்து இழக்க நேரிடும். பின்னர் பெப்ரவரி மாதம் நடக்கும் பொது ஏலத்தில் மீதமுள்ள ரூ. 25 கோடியில்தான் மற்றைய வீரர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இதனால் இரண்டு அணிகளும் 39 கோடி ரூபாய்க்கு ஐந்து வீரர்களையும் தக்கவைத்துக்கொள்ளுமா? என்பது இன்று தெரியும்.

இதற்கிடையே தற்போதுள்ள ஐ.பி.எல். அணிகள் தங்களது வீரர்களை வெளியேற்றுவது, அணிகளுக்கிடையே வீரர்கள் மாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தையும் இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதிவரை நடக்கிறது. (க)

# பரீட்சையில் ஆள்மாறாட்டம்

(கிளிநொச்சி)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் போது ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்ட தனியார் பரீட்சார்த்தி ஒருவரை கல்வி அதிகாரிகள் பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் கணித பாடம் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் பூநகரி கோட்டத்திற்கு உட்பட்ட பூநகரி மத்திய கல்லூரியின் நடைபெற்ற பரீட்சையில் தனியர் பரீட்சார்த்தி ஒருவர் ஆள் மாறாட்டம் செய்தமை தெரியவந்தது.

இதனையடுத்து கடமையில் இருந்த கல்வி அதிகாரிகள் கடமையில் இருந்த பொலிஸாரின் உதவியுடன் குறித்த நபரை பூநகரி பொலிஸில் ஒப்படைத்தனர்.

இவ்வாறான ஆள்மாறாட்ட நடவடிக்கைகள் மாணவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-277)

# ரோம் நகரை சென்றடைந்தார் ஜனாதிபதி மைத்திரி









பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரோம் சென்றுள்ளார். ஜனாதிபதி நேற்று முன்தினம் பியூயும்சினோ விமான நிலையத்தை சென்றடைந்தார். விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதி மற்றும் அவரது பாரியார் உள்ளிட்ட பிரதிநிதிகளை வத்திக்கான் பிரதான அதிகாரி ஜோஸ் பேடர்ன்கோட், இத்தாலிக்கான இலங்கையின் தூதுவர் தயா பெல்பொல, வத்திக்கானுக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோர் வரவேற்றனர். ஜனாதிபதியை வரவேற்க இத்தாலியில் வசிக்கும் இலங்கையர்கள் சிலரும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். ஜனாதிபதியுடன் அமைச்சர் ஜோன் அமரதுங்க, ராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் ரோசி சேனாநாயக்க ஆகியோர் ரோம் சென்றுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.


## ஆத்ம சாந்தி பிரார்த்தனை

திருமதி **நவமணி சந்திரமௌலீசன்**

அவர்கள்



நம் திருத்தல இறைவனிடம் பக்தி பூண்ட கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளரும் பிரபல சைவத்தமிழ் பேச்சாளருமான திரு. ச.லலீசன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி ச.நவமணி அவர்களின் ஆத்மா கதிர்காம முருகன் திருமலரடிகளில் நிலையான சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம். (2763)

ஆலய சிவாச்சார்யர்களும், அறங்காவலர் சபையினரும்,
செல்லக்கதிர்காம ஸ்வாமி திருக்கோயில், நீர்வேலி.


## தேசிய உணவுத்திட்டம் மூலம் இறக்குமதியை குறைக்கலாம்

### விவசாய அமைச்சர் நம்பிக்கை

தேசிய உணவு திட்டத்தினை அறிமுகம் செய்வதன் ஊடாக இறக்குமதி செய்யப்படும் உணவு பொருட்களின் எண்ணிக்கைகளை குறைக்கலாம் என விவசாய இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிஹார தெரிவித்துள்ளார். 2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் விவசாயத்துறைக்கான நிதி ஒதுக்கீடு குறித்த நேற்றைய குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் உணவு பாதுகாப்பு தொடர்பில் சர்வதேசம் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மூன்று வருடங்களுக்கு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். எனவே, விவ சாயத் துறைக்காக தேசிய திட்டம் மற்றும் கொள்கை என்பன அவசியம் என அமைச்சர் வசந்த அலுவிஹார வலியுறுத்தியுள்ளார். (இ-10)


### விற்பனைக்கு

புதிய லெனோவா ரப் (I.Pad) பாவித்த டெல் மடி கணனி (Lap Top) (2762)

தொடர்புகளுக்கு: 076 801 6448, 071 418 2469

### வாடகைக்கு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554A, 554B எனும் இலக்கமுடைய கடைகள் வாடகைக்கு விடப்படும்.

(2755) விபரங்களுக்கு நேரில் வரவும்

தொடர்புகளுக்கு :- நா.தயாளன்
இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## ராசி பலன்

**15.12.2015**

(கார்த்திகை 29, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15மணிக்கு,
சதுர்த்தி பிற்பகல் 2.42மணிவரை
திருவோணம் பின்னிரவு 2.01 மணிவரை
இராகுகாலம் 3.21-4.51மணிவரை
சுபநேரம் 10.51-12.21 மணிவரை
சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம் | | |
| சந் | | | குரு |
| புத | சனி சூரி | சுக் | ராகு செவ் |

**மேடம்**: தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்,புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்**: பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்,வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மிதுனம்**: தொழில் வளர்ச்சியில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்,பயணத்தை தள்ளி வைக்க நினைப்பீர்கள், உடல்நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**கடகம்**: எண்ணியது நிறைவேறும் நாள், உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி**: இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,தொட்ட காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**துலாம்**: புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்,வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஆனந்தமான நாள்.





**விருச்சிகம்**: வருமானம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு ,புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு, சுபதகவல்கள் வந்து சேரலாம்.




**தனுசு**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்,சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**மகரம்**: திடீர் பயணங்கள் ஏற்படலாம், மன அமைதி கூட வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும் ,அந்நிய தேசத் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பணியாளர்களை மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்**: பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல் வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு,போசன சுகமுண்டு.

காணாமல்போனோர்தொடர்பில் விசாரணை மேற்கொளளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் நான்காம் நாள் விசாரணை நேற்று காலை ஒன்பது மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது. இதன் போது புதிய பதிவுகள் நேற்றைய தினம்அதிகமாக காணப்பட்டதோடு. இராணுவத்திற்கு எதிரான முறைப்பாடுகளே அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(படங்கள்-உ.சாளின்)

# நல்லாட்சி அரசின் நிலைப்பாடானது மக்களின் மனநிலைக்கு மாறானது

## வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் விசனம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திக் குழுவிற்குத் தலைமை தாங்குவோர் தொடர்பில் நல்லாட்சி அரசு என்று கூறும் அரசு கொண்டிருக்கும் நிலைப்பாடு தமிழ்மக்களின் மன நிலைக்கு மாறானது என வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

ஏழாலை கண்ணகியம்மன் சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற கலைவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்மக்கள் மிகப்பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் தமிழ் மக்களுடைய அபிவிருத்தி சார்ந்த நிர்வாகம் சார்ந்த செயற்பாடுகளை கண்காணித்து ஒழுங்குபடுத்தி விரைவுபடுத்துகின்ற பொறுப்புமிக்க சபை மாவட்ட அபிவிருத்திக்குழு ஆகும். இதற்குத் தலைமை தாங்குவதென்பது மிகவும் முக்கியம் வாய்ந்த, மக்களின் வாழ்வில் முடிவெடுக்கும் தகுதிவாய்ந்த பொறுப்புள்ள பதவியாகும்.

இன்று நல்லாட்சி என்ற போர்வைக்குள் மறைந்திருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கம் இவ் அபிவிருத்திக் குழுவின் தலைமை குறித்து நடந்து கொள்கின்ற முறை பல்வேறு விடயங்களிலும் குறிப்பாக வாக்குறுதியளித்தபடி அரசியற்கைதிகள் விடுவிக்கப்படாமை, வலி.வடக்கு உட்பட்ட உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்ச்சியாக அப்படியே இருக்கின்றமை முதலியன இவற்றுள் சிலவாகும்.

இவையாவும் தமிழ்மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தையே தந்திருக்கின்றது. கடந்த அரசாங்கங்கள் நடந்துகொண்ட விதத்திலும் பார்க்க , நல்லாட்சி போர்வையிலான அரசு தமிழ்மக்களின் விருப்பங்களுக்கு எதிராக நடந்து கொள்கிறதோ எனும் சந்தேகம் தோன்றும் வகையிலான செயற்பாடுகளில், இறுதியாக நடைபெற்றுக் கொண்டிருப்பது தான் யாழ்.கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைமை விவகாரமாகும்.

மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவர்களாக, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் , நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருடன் இணைந்து எமது வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனையும் நியமித்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இது இணைத்தலைமை என்ற போர்வையில் மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்ற எமது முதலமைச்சரை அவமானப்படுத்தும் ஓர் விடயமாகும். இந்த அபிவிருத்திக் குழுவின் தலைமைப்பதவி விடயத்தில் முதலமைச்சருடன் சேர்த்து, தமிழ்மக்களின் பேராதரவைப் பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் ஆலோசனையின்படி நியமிக்கப்படும் இன்னொருவருடன் தான் இவ்விணைத் தலைமை பகிரப்பட்டிருக்க வேண்டும். இதுதான் நியாயமானது. ஆனால் இந்த அரசாங்கத்திடம் நியாயங்களை எதிர்பார்க்க முடியாது போலுள்ளது. அது கடந்த ஒரு வருடகாலமாக நடந்துகொள்கின்ற முறை இதற்குச்சான்று பகன்று வருகிறது.

இந்த விடயத்தில் நல்லாட்சி போர்வையிலான இந்த அரசாங்கம் எடுக்கப்போகும் இறுதிமுடிவு தான் இந்த மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டங்கள் எதிர்காலத்தில் எப்படி இடம்பெறும் என்பதை தீர்மானிக்கும் என்பதை இவ்விடத்தில் இன்றைய நல்லாட்சி போர்வையிலான அரசாங்கம் உணர்ந்து கொள்வது நல்லது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தாதியர் சங்கம் ஆதரவு தெரிவிப்பு

நாடு தழுவிய ரீதியில் அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் இணைந்து இன்றையதினம் முன்னெடுக்கவுள்ள ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அரச தனியார் சங்கம் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அனைத்து தாதிய உத்தியோகத்தர்களும் மேற்படி போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தாதியர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறையில் இல்லாத நலன்களைப் பெற்றுத்தர அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்களால் நாடு தழுவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒருநாள் வேலை நிறுத்தப்போராட்டம் இன்று நடைபெறவுள்ளதாக அனைத்து அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்கள் இணைந்து அறிவிப்பு ஒன்றை ஏற்கனவே விடுத்திருந்தன.

இப்போராட்டத்தின்மூலம் வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறையில் இல்லாத நலன்களை பெற்றுக்கொள்ளமுடியும் என அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் நம்பிக்கை கொண்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமையவே இவ் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு யாழ். அரச தாதியர் சங்கம் தமது ஆதரவைத் தெரிவித்ததுடன் தாமும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

எனினும் வைத்தியசாலையில் நோயாளர் நலன்கருதி அவசர உயிர்க்காப்பு நடவடிக்கைகளுக்காக தாதிய சங்கத்தைச்சேர்ந்த தாதிய உத்தியோகத்தர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனவும் அச்சங்கம் அறிவுறுத்தல் ஒன்றையும்விடுத்துள்ளது. (இ-5)


# சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்

தேடும் சிட்டுக்கள் சிறுவர் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம்திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.


யாழ்ப்பாணம் சுகவாழ்வு நிலைய இயக்குநர் அருட்பணி யா.றமேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் அமலமரித் தியாகிகள் சபை மாகாண முதல்வர் அருட்பணி செ.எட்வின் வசந்தராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பரதீபன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ க.மு. சோம சுந்தரக்குருக்கள், , அமல மரித்தியாகி ச பை சிறுவர் பணியக இயக்குநர் அருட்பணி வே. அன்ரன் ஜெஸ்ரின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


சஞ்சிகை மதிப்பீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்தவுள்ளார். (இ-5-51)



குருநகர் பேர்கன் ஒஸ்லோ கல்விப் பணியகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான பரிசுத் தின விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.




கருவி மாற்றுக் திறனாளிகளின் சமூக வள நிலையத்தில் அதன் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் இக் கொடுப்பனவுகளை வழங்கி வைத்துள்ளார்.




அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 55 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவநாதம் -5 மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்ற போது...



பாடசாலைகளிடையே கடத்தப்பட்ட சிறுவர் நாடகப் போட்டியில் யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை கோட்டம், வலயம் மற்றும் மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. நாடகப் போட்டியில் பங்கு பற்றியிருந்த மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம்.



சுவிஸ் வாழ் புங்குடுதீவு மக்களால் யாழ். புங்குடுதீவு றோமன் கத்தோ லிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு சமையலறை உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்ட போது...



தேசிய வாசிப்பு மாத நிகழ்வை யொட்டி நெல்லியடி பொது நூலகம் நடத்திய வாசிப்பு மாத நிகழ்வுகள் அண்மையில் வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபையில் நடைபெற்ற போது...

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# விவசாயிகள் நெல்சந்தைப்படுத்தும் சபையின் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி ஒப்படைக்குக

## ஓலுமடு, துணுக்காய், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர்கள் அறிவிப்பு

(மல்லாவி)

**ஓலுமடு, துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் 2015-2016 ஆம் ஆண்டுக்குரிய காலபோக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நெல் அறுவடையின் பின்னர் நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு விற்பனை செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை தங்கள் பகுதி கமநல சேவை நிலையங்களில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்குமாறு ஓலுமடு, துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

மேற்படி கால போகத்தின் போது அறுவடை செய்யப்படும் நெல்லை அரசின் கட்டுப்பாட்டு விலையில் நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளிடம் இருந்து தரவுகளை சேகரிக்கும் முகமாக நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கமநல சேவை நிலையங்கள் ஊடாக விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக் கப்படுகின்றன.

குறித்த விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பூரணப்படுத்தி கமநல சேவை நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள விவசாயிகள் வருகை தருகின்ற போது தேசிய ஆள் அடையாள அட்டை, மானியம், உரம் பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சீட்டு, கமக்கார ஆள் அடை யாள அட்டை ஆகியவற்றுடன் உரிய விவசாயி மட்டும் கமநல சேவை நிலையத்திற்கு வருகை தரவேண்டுமென அவர்கள் கேட்டுள்ளனர். (2-15)




# வீடு புகுந்து நகைகள் திருட்டு

(குருமன்காடு)

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் வீடு ஒன்றில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த நகைகளை திருடிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா, வேப்பங்குளம், மெதடிஸ் சேர்ச் வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் கடந்த 11 ஆம் திகதி இரவு உள் நுழைந்த திருடர்கள் அவ்வீட்டில் இருந்த இரண்டு இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பான முறைப்பாடு ஒன்று மறுநாள் சனிக்கிழமை கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாம் விசாரணைகளை தொடர்ந் தும் மேற்கொண்டு வருவதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# இவ்வாண்டு கலாபூஷணம் விருதுக்கு தெரிவான தமிழ் கலைஞர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(குருமன்காடு)

இவ்வாண்டு கலாபூஷணம் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் கலைஞர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக கலைஞர்கள் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டும் பல்வேறு துறைகளிலும் சிறப்பாக பணியாற்றிய 100 தமிழ் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இவ் ஆண்டு நாடளாவிய ரீதியில் இருந்து 70 தமிழ் கலைஞர்களே விருது வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


இதனால் இவ்வாண்டு கலாபூஷணம் விருது பெறுவதற்காக விண்ணப்பித்த பெரும்பாலான தமிழ் கலைஞர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

இதேவேளை கடந்த ஆண்டு வன்னி பெருநிலப்பரப்பை உள்ளடக்கிய வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து 12 தமிழ் கலைஞர்கள் கலாபூசஷணம் விருது பெறுவதற்கு தெரிவு செய்யப் பட்டிருந்த போதிலும் இவ் ஆண்டு 5 கலைஞர்கள் மட்டுமே விருது பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போதியளவு தகைமைகள் இருந்தும் குறித்த விருதுக்கு விண்ணப்பித்த தமக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த கலைஞர்கள் இவ் விடயம் தொடர்பில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தில் இருந்து முதன் முறையாக 18 கலைஞர்கள் கலாபூஷணம் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் சுவாமி அலங்காரம் மற்றும் சமூக சேவை எனும் புதிய துறைகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் எமது பகுதி தமிழ் கலைஞர்களை புறம் தள்ளியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (2-250)

# 200 மாணவர்களுக்கு குறிப்பு நூல்கள் புலம்பெயர் வாழ் அன்பரினால் உதவி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு ரூபா 50 ஆயிரம் பெறுமதியான குறிப்பு நூல்கள் வழங்கப்பட்டன.

பிரான்சில் வசிக்கும் புலம்பெயர் வாழ் அன்பர் ஒருவரினால் வழங்கப்பட்ட உதவியின் ஊடாக அண்மையில் முள்ளியவளை மாமூலைப் பகுதியில் வைத்து மேற்படி உதவி கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனினால் வழங்கப்பட்டன.

இதற்கான ஏற்பாடுகளை "துளிர்களிற்கு மழையாய்" என்ற கருப்பொருளுடன் முல்லைத்தீவில் செயற்பட்டு வரும் "வெளிச்சம்" அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

அங்கு ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டிற்கான கல்விச் செயற்பாடுகள் பாடசாலைகளில் தற்பொழுது நிறைவு பெற்றுள்ளன.

அடுத்தாண்டில் புதிய தரத்திற்கு நுழையவிருக்கும் மாணவர்களுக்கான குறிப்பு நூல்களை வாங்கிக் கொடுக்கும் நிலை அனைத்து பெற்றோருக்கும் இலகுவானதாக அமைவதாயில்லை.

வறுமைக்குட்பட்ட நிலையில் கல்வியைத்தொடரும் மாணவர்களுக்கான ஒரு ஊக்குவிப்பாகவே இச்செயற்பாடு அமைகிறது.

தொடர்ந்தும் இவ்வாறான உதவிகள், மாணவர் ஊக்குவிப்புகள் என்பன ஈழமண்ணில் தொடர வேண்டும் என்று தெரிவித்தார்.

இநநிகழ்வில் வெளிச்சம் அமைப்பின் தலைவர், நிர்வாகிகள், பொது மகள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250-281)

# மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு 3,400 வீடுகளை அமைக்கும் திட்டம்

ஜரோப்பிய ஒன்றியம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு 3 ஆயிரத்து 400 வீடுகளை நிர்மாணித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற அபிவிருத்தி கருத்திட்டத்தினை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமைத்துவத்திலும் வழிகாட்டலி லும் முன்னெடுப்பதற்கான திட்ட அமுலாக்கல் ஒப்பந்தத்தினை Habitat for Humanity நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இக்கருத்திட்டம் ஜரோப்பிய ஒன்றியத்தின் யூரோ 14 மில்லியன் நன்கொடைநிதிப்படுத்தலின் கீழ் 2016 - 2018 மூன்று வருடகாலப் பகுதியில் கிளிநொச்சி, முல்லைத் தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அமுலாக்கப்படுவதுடன் இதன் கீழ் 15 ஆயிரத்து 345 இடம் பெயர்ந்த மக்கள் நிரந்தரமான வீடுகளைப் பெறுவதுடன் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கட்டட நிர்மாண பயிற்சி மற்றும் நுண்பாக கடன்கள், சமூக உட்கட்டமைப்புகள் மற்றும் வாழ்வாதார பலாபலன்களையும் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இக்கருத்திட்டத்தின் கீழ் கட்டட நிர்மாணத்திற்கான மூலப் பொருட்கள், ஊழியம் என்பன உள்நாட்டில் பெறப்படுவதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினைச் செய்யும் கருத்திட்டமாக இது அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கருத்திட்டம் தழிழ்நாடு உட்பட வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கை அகதிகளுக்கும் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கும் நிலைத்து நிற்கக் கூடியதும் நிரந் தரமானதுமான ஒரு தீர்வினை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)



கிளி/பளை மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்ற போது...

# அரபுக் கல்லூரியில் மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமாரபுரம் கிராம சேவகர் பிரிவில் மூன்றாம் கட்டை தோட்டப்பகுதியில் புதிதாக அமையவிருக்கும் அல் - பாஹிமிய்யா அரபுக் கல்லூரியின் 2016ஆம் ஆண்டுக்கான 'ஹிப்ழ்' பிரிவுக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எனவே, விண்ணப்பதாரிகள் அல்குர்ஆனை சரளமாகவும், திருத்தமாகவும் ஓதக்கூடியவராக இருத்தல் வேண்டும்.. பாடசாலையில் நான்காம் ஆண்டை அடைந்திருப்பதுடன், நேர்முகப்பரீட்சை நடைபெறும் போது 12 வயதை அடைந்திருத்தல் வேண்டும். தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

மேல் குறிப்பட்ட தகைமையுடைய மாணவர்கள் சுயமாக தயாரிககப்பட்ட தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 18.12.2015 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தபால் மூலமாகவோ கல்லூரி நிர்வாகத்தினரிடம் நேரடியாகவோ ஒப்படைக்கலாம்.

அத்துடன், தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் தமது வருகையை உறுதிப்படுத்த முடியும்.

அத்துடன், புதிய-மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை முல்லைத்தீவு ஹிஜ்ரா புரம் ஜும்ஆ பள்ளிவாசலில் இடம் பெறவுள்ளது.

குறித்த நேர்முகத் தேர்வின் போது பிறப்பு அத்தாட்சிப் பத்திர பிரதி மற்றும் பாடசாலையில் இறுதியாகக் கிடைக்கப்பெற்ற பரீட்சைப் பெறுபேற்றுப் பிரதி என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற எம்.ஐ. பரீத் மௌலவி (தலைவர் அல்பா ஹிமிய்யா அரபுக் கல்லூரி) 071 516 8647, 071 425 4194 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை ஏன் மறுக்கப்படுகின்றது

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி பொதுச் செயலாளர் கேள்வி

(வவுனியா)

ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாது இருந்து வருவது விசனத்திற்கும் கண்டனத்திற்கும் உரியதாகும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனிசக்கட்சி பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரி வித்துள்ளார்.

வவுனியா நகரில் கடந்த பத்தாம் திகதி சர்வதேச மனிதவுரிமைகள் தினத்தன்று தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரியும் காணாமற் போனோருக்கு உரிய பதில் கேட்டு இடம்பெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின் முத்தையா மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது புதிய ஜனநாயக மாக்சிச லெனிசக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோரை தேடிக் கண்டறியும் அமைப்பும் வவுனியா பிரஜைகள் குழுவும் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி கூட்டத்தில் சி.கா. செந்திவேல் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நல்லாட்சியும் நல்லிணக்கமும் கொண்ட அரசாங்கம் என்று கூறிச் சில கட்சிகள் இணக்க அரசியலுக்கு முன்னிற்கிறார்கள்.

ஆனால் அதே ஆட்சியின் ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாது இருந்து வருவது விசனத்திற்கும் கண்டனத்திற்கும் உரியதாகும்.

முன்பு ஜே.வி.பியின் தலைமையில் சிங்கள இளைஞர் யுவதிகள் ஆயுதக் கிளர்ச்சிகளில் இரண்டு தடவைகள் ஈடுபட்டு அரசியல் கைதிகளாக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

அவர்களில் பத்து பேருக்குத் தூக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அவ்வேளை அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற பெரும் மக்கள் இயக்கம் முன்னெடுக்கப்பட்டது.

அவ்வியக்கத்தில் எமது கட்சியும் இணைந்து அரசியல் கைதிகளின் விடுதலைக்கு போராடி வந்தமை இவ்வேளை நினைவு கூர வேண்டியதாகும். அதன் மூலம் அன்றைய அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனை இன்றி விடுவிக்கப்பட்டனர். அவ்வாறெனில் ஏன் இன்று தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மறுக்கப்படுகிறது என்பதே எமது கேள்வியாகும்.

இங்கேதான் பேரினவாதத்தின் உட்கிடக்கை வெளிச்சமாகிறது.

எனவே எமது கட்சி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் காணாமற் போனோருக்குப் பதில் வேண்டியும் நடத்தப்படும் மக்கள் இயக்கங்களில் முன்னின்று வருகிறது என்று கூறினார். (2)

# மதுபோதையில் அட்டகாசம் புரிந்த இளைஞர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

வவுனியாவில் மது போதையில் அட்டகாசம் விளைவித்த இளைஞர் குழுவொன்றை ஊர் மக்கள் மடக்கிப் பிடித்துக் கட்டி பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மகாறம்பைக்குளம், சாந்தசோலை, 4ஆம் ஒழுங்கைப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் இளைஞர் குழு ஒன்று மது அருந்தி அட்டகாசம் செய்யும் செயற்பாடு தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் 5 இளைஞர்கள் மது அருந்தி விட்டு அப்பகுதி மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமையால் அருகில் இருந்த வீட்டு உரிமையாளர் ஒருவர் குறித்த அவ் இளைஞர்களை அவ்விடத்தில் இருந்து வெளியேறுமாறு கோரியுள்ளார். இதனையடுத்து அவர் மீது தாக்குதல் நடத்திய இளைஞர்கள் அக் குடிமனையில் இருந்த வீடு ஒன்றின் கேற் மீதும் தமது மூர்க்கத்தைக் காட்டினர்.

இதனால் ஆத்திரமடைந்த ஊர் மக்கள் ஒன்று திரண்டு குறித்த இளைஞர்களை விரட்டியுள்ளனர். இதன்போது இரு இளைஞர்களை பிடித்து கட்டி வைத்ததுடன் பொலிஸாரையும் அழைத்து அவர்களை ஒப்படைத்துள்ளனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக இளைஞர்கள் மது அருந்திவிட்டு அட்டகாசம் செய்வதாகவும், பதின்ம வயது பிள்ளைகள், சிறுவர்கள் உள்ள வீடுகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாகவும் இப் பகுதி மக்கள் கூறுகின்றனர். இது தொடர்பில் வுவுனியா பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள கோரியுள்ளனர். (2-250)

# குடும்பஸ்தர் கைது

வவுனியாவில் 5 வயது சிறுமி ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 55 வயது குடும்பஸ்தர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா பகுதியில் வீட்டில் தனிமையில் இருந்த 5 வயது சிறுமியே துஷ்பிரயோகத்திற்கு உள்ளக்கப்பட்டுள்ளார். கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை சிறுமியின் பெற்றோர் வீட்டில் இல்லாதவேளை குறித்த வீட்டிற்குச் சென்ற அப்பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சிறுமியிடம் தகாத முறையல் நடந்து துஷபிரயோகம் செய்ததாக தெரிய வருகிறது.

இதனையடுத்து குறித்த விடயம் குறித்து வவுனியா பொலிஸ் நிலையத்தின் பெண்கள், சிறுவர் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்ட தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சந்தேக நபரான 55 வயது குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார். (2-250)



*வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் 15000 கிராமங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவின் சிவபுரம் கிராம சேவையாளர் பிரிவில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொது மண்டப திருத்த பணிகள் நிறைவடைந்துள்ளன. இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவின் மேலும் பல வேலைகள் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (படம்: பனிக்கன்குளம் செய்தியாளர்)*

# மாணவிகளுக்கான மலசலகூடங்களின் கட்டுமானப் பணிகளில் தரக்குறைவு

## மேற்பார்வையாளர்களும் வருகை தருவதில்லையென பெற்றோர் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

மத்திய கல்வி அமைச்சின் 19 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் வடக்கு மாகாணத்தின் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பாடசாலைகளில் அமைக்கப்பட்டு வரும் மாணவிகளுக்கான நவீன வசதி கொண்ட மலசல கூடங்களின் கட்டுமானப் பணிகளில் சில பாடசாலைகளில் தரக்குறைவான கட்டடப் பொருட்கள்பயன்படுத்தப்படுவதாகவும் அத்துடன் மேற்பார்வை செய்யும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பார்வையிடுவதற்கு வருவதில்லை யெனவும் மாணவர்களின் பெற்றோர் கட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி வேலைத்திட்டத்தை பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் ஊடாக பல பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் ஊடாக பல பாடசாலைகள் அமைத்து வருகின்ற நிலையில் சில பாடசாலைகளில் தனியார் ஒப்பந்தகாரர்களிடம் கட்டுமானப் பணிகள் ஒப்படைக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபாவிற்கு 5 ஆயிரம் ரூபா தரகுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வேலைகளைத் தனியாரிடம் ஒப்படைத்துள்ளது.

இன்னும் சில பாடசாலைகளில் அதிபர்களே ஒப்பந்த வேலைகளைச் செய்கின்றனர். இவ்வாறான நிலையில் உள்ள பாடசாலைகளின் மலசலகூட சுட்டுமானப்பணிகளிலேயேகுறைபாடுகள் காணப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வேலைத்திட்டத்தை மேற்பார்வையிடுவதற்கு கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பல பாடசாலைகளுக்கு மேற்பார்வை செய்வதற்கு வருகை தருவதில்லையென குற்றம் சாட்டப்படுகின்றது.

எனவே வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண கல்விப் பணிப்பாளர் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

# மாங்குளத்தில் பேருந்து நீண்டநேரத்திற்கு தரித்து நிற்பதால் அவசர வேலைகள் தாமதம்

## பாதிக்கப்பட்ட பயணிகள் குற்றச்சாட்டு

(மல்லாவி)

யாழ்ப்பாணத்தில் இருந்து துணுக்காய் நோக்கி பிற்பகல் 1.50 மணிக்கு புறப்படும் முல்லைத்தீவு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்திற்குட்பட்ட பேருந்து மாங்குளத்தில் ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள் தரித்து நின்று பயணத்தை தொடர்வதால் தாம் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாக பாதிக்கப்பட்ட பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து மல்லாவி, துணுக்காய் நோக்கி பிற்பகல் 1.50 மணிக்கு புறப்படும் தனியார் பேருந்தானது மாங்குளத்தை பிற்பகல் 4 மணிக்கு சென்றடைகின்றது.

அங்கிருந்து ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்களுக்கு மேல் தரித்து நின்றதன் பின்னர் துணுக்காய் நோக்கி பயணத்தை தொடர்கின்றது.

இதனால் வயோதிபர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், சிறுவர்கள் உட்பட பல தரப்பட்ட பயணிகளும்பொது மலசலகூட வசதிகள் இல்லாத மாங்குளத்தில் இயற்கைக் கடன்களைத் தீர்க்கமுடியாது உள்ளதுடன் அவசர வேலைகள் நிமிர்த்தம் பயணிக்கின்ற பயணிகள் உரிய நேரத்திற்கு தமக்கான இடங்களுக்கு செல்ல முடியாது அல்லற்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இது தொடர்பில் கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பாதிக்கப்பட்ட பயணிகள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (2-15)

# பசில் தேர்தல் சட்டத்தை மீறியதாக குற்றச்சாட்டு




முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், முன்னாள் ஜனாதிபதியின் இளைய சகோதரருமான பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தல் சட்டத்தை மீறியதாக கொழும்பு மேல் நீதிமன்றத் தல்சுப்மாஅதிர்திணைக்களத் தால்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

திவிநெகும நிதியில் 29 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாக சட்டமா அதிபர் திணைக்களம் அவர் மீது கடந்த வெள்ளிக்கிழமை குற்றஞ்சாட்டியுள்ளது. தேர்தலுக்கு முன்னர் வாக்காளர்கள் மத்தியில் இந்தப் பணம் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவுடன், திவிநெகும நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஆர். ஆர். கே. ரணவக்கவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

கையூட்டல்களை வழங்கி வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சித்ததாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. திவிநெகும நிதியம் தொடர்பாக பசில் ராஜபக்ஷ கடந்த ஏப்ரல் மாதம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)




# அரசியல் கைதிகளை விடுவிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை

(கொழும்பு)

**அரசியல் கைதிகளை விடுவிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் இல்லையென, பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

நிட்டம்புவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கைதிகள் குறித்து பலர் பல தகவல்களை வெளியிட்டு வந்தாலும், அரசியல் கைதிகள்என எவரும்இல்லையென அவர் இதன்போது தெரிவித்தார். தமிழ் அரசியல்வாதிகள் கூறி வருவதைப் போன்று அவர்கள் தமிழ் அரசியல் கைதிகள் அல்லர் எனவும், குண்டுகளை வெடிக்கச் செய்து மனித கொலைகளுக்கு உதவிய குற்றவாளிகள் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அவ்வாறானவர்களை நீதிமன்றின் முன் நிறுத்தி அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மட்டுமே முடியுமென்றும், மாறாக அவர்களை விடுவிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் தான் கடந்த காலத்தில் சிலருக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டதென சுட்டிக்காட்டிய அவர், நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சட்டங்களின் பிரகாரம் கைதிகளை விடுதலை செய்வதற்கு யாருக்கும் உரிமையில்லையென பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# உகண்டா, சீஷெல்லில் உள்ள தூதரகங்களை மூடத்திட்டம்

உகண்டாவிலும், சீஷெல்லிலும் உள்ள தூதரகங்களை மூடி விட, புதிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த இரண்டு தூதரகங்களும் அமைக்கப்பட்டதற்கான தேவைப்பாடுகள் குறித்து தற்போது கேள்வி எழுந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உகண்டாவின் ஆதரவைப்பெறுவதற்காகவே கம்பாலாவில்தூதரகம்ஒன்றை இலங்கை அமைத்திருந்தது.

அதுபோன்று முன்னைய ஆட்சியின் உயர்மட்டப் பிரமுகர்களின் இரகசிய செயற்பாடுகளுக்காகவே, சீஷெல்லில் இலங்கை தூதரகம் அமைக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ இந்த நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது இந்த தூதரகங்கள் நிறுவப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிவிவகார அமைச்சின் செலவுகளைக் குறைப்பதற்காக, வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் சிலவற்றை மூடிவிடவும், வதிவிடமற்ற தூதுவர்களை நியமிக்கும்நடைமுறையை கொண்டுவரவும் உத்தேசித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு தற்போது வெளிநாடுகளில், 68 தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# பொன்சேகாவுக்கு எதிராக ஊடக யுத்தத்துக்கு முடிவு!

## அவன்கார்ட நிறுவனம் தயாராகிறது

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக பாரிய ஊடக யுத்தமொன்றை முன்னெடுக்க அவன்கார்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.



அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதிக்கும், நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு நிலவுவதாக சரத் பொன்சேகா அண்மையில் அம்பலப்படுத்தியிருந்தார்.

இதற்கு ஆதாரமாக அவர்கள் இருவரும் தமது குடும்பத்தினருடன் 2006ஆம்ஆண்டு அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட புகைப் படங்களையும் அவர் வெளியிட்டிருந்தார்.

இதற்குப்பதிலடியாக சரத் பொன்சேகா இராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் தொடர்பு வைத்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்த அவன்கார்ட் தரப்பு முடிவெடுத்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் இது தொடர்பான ஊடக மாநாடு ஒன்றை நடத்தவும் அவன்கார்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது. (இ-10)

# விபத்தில் சிக்கிய இருவர் மரணம்

மஹியங்கனை கிராதுருகோட்டை பிரதான வீதியி லில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரி ழந்துள்ளனர். கிராதுரு கோட்டையில் இருந்து மஹியங்கனை வரை பயணித்த கெப் வாகனம் ஒன்று. அதற்கு எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட வேளை. அதில் இருவர் பலியாகியுள்ளனர்.

இவர்கள் கிராதுருகோட்டை - பஹலரத்கிய பிரதேசத்தைச் சேர்ந்த 20மற்றும்22 வயதான இருவர் எனத் தெரியவந்துள்ளது.(இ-10)

# விசேட தூதுவராக ரவீந்திரன் நியமனம்

சர்வதேச ரோட்டரி கழக தலைவர் கே.ஆர்.ரவீந்திரனை இலங்கைக்கான வெளிநாட்டு முதலீட்டுக்கான விசேட தூதுவராக நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

ரோட்டரி கழக நிகழ்வு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு பங்கேற்ற அவர், இதன்படி ரவீந்திரனின் பணி இலங்கைக்கு முதலீடுகளை கொண்டு வருவதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

தாம் உட்பட இலங்கையின் தலைவர்களுக்கு அல்ல. நாட்டுக்கு முதலீடுகளை கொண்டு வருமாறு ரவீந்திரனுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ரணில் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசியல் ரீதியாக சாஸ்திரக்காரர்களை நம்பியோர் தோல்வியடைந்ததாக ரணில் இதன்போது தெரிவித்தார்.

சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராக இருக்கும் போது பொதுத் தேர்தலுக்கான திகதியை சாஸ்திரக்காரரை கொண்டு நிர்ணயித்தார்.

அதில் அவர் தோல்வி கண்டார். அதேபோன்று முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் சாஸ்திரக்காரரைக் கொண்டே பொதுத்தேர்தல் திகதியை அறிவித்தார். அவரும் தோல்வி கண்டார் என்று ரணில் தெரிவித்தார். (இ-10)

# உலக முடிவுக்கு சென்றவர் உயிரைத் துறந்தார்


இஸ்ரேல் நாட்டை சேர்ந்த சுற்றுலா பயணி ஒருவர் நுவரெலியாவில் மாரடைப்பு காரணமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் டெல்அவிவ் பிராந்தியத்தை சேர்ந்த 55 வயதுடைய பிரிவேல் யோஹால் என்பவர் தனது குடும்பத்தாருடன் இலங்கைக்கு சுற்றுலா பயணியாகக் கடந்த 7ஆம் திகதி வருகை தந்துள்ளார். அவர் கொழும்பில் இரண்டு நாட்கள் தங்கியிருந்த பின்பு கண்டி ஊடாக நுவரெலியாவிற்கு கடந்த 10 ஆம் திகதி சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் வாடகை வாகனம் ஒன்றில் தனது குடும்பத்தாருடன் உலக முடிவு பகுதியை பார்வையிடுவதற்காக சென்றுள்ளார்.

அங்கு சென்று பார்வையிட்ட பின்பு 11.30 மணியளவில் நுவரெலியா நோக்கி புறப்பட்ட இதன்போது. அவருக்கு மார்பு பகுதியில் வலி ஏற்படவே அவரை உடனடியாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொணடு சென்றுள்ளனர். ஆனால் அவர் வைத்தியசாலைக்கு கொணடு செல்லும் பொழுதே உயிரிழந்துள்ளார்.

பின்பு இவருடைய உடல் பிரேத அறையில் வைக்கப் பட்டு பிரேத பரிசோதனை நடைபெற்றுள்ளது. இதன்போது மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாக அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தற்பொழுது அவருடைய உடல்பிரேத்அறையில்வைக கபபட்டுள்ளதோடு அவருடைய நாட்டிற்கு கொண்டு செலவதற்கான ஏற்பாடுகளை அவருடைய உறவினர்கள் மேற்கொண்டு வருகின்றனர். நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(இ-10)



# மனிதரும் தெய்வமாகலாம் என வாழ்ந்து காட்டியவர்

## சேர்.பொன்.இராமநாத வள்ளலார்

### இன்று அவரது குருபூசை தினம்

மன்னா உலகத்து
மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்
மாய்த்தனரே.

என்பது புறநானூறு. நிலையில்லாத இவ்வுலகில் தன் புகழை நிறுவிச் சென்றவர் சேர்பொன்இராமநாதவள்ளலார். அவர் இவ்வுலகத்திற்கென விட்டுச் சென்ற பணிகள் இவ்வுண்மையை உணர்த்தும். பெண் கல்வியில் பண்பாட்டு மறு மலர்ச்சியின் சின்னமாக விளங்கும் மருதனார் மடத்தில் பாரிய நிலப்பரப்பில் அமைந்த இராமநாதன் கல்லூரி, ஆண்களுக்கென திருநெல் வேலியில் அமைந்த பரமேஸ்வராக் கல்லூரி இவைகளோடி ணைந்து காணப்படும் ஆலயங்கள், கொச்சிக்கடை கொழும்பில் அமைந்த பொன்னம் பலவாணேச்சரம் சமாதி ஆலயம் இவை யாவும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவாலயங்களாகும்.

16.04.1851 ஆம் ஆண்டு மானிப்பாயைச் சேர்ந்த புகழ் பூத்த சைவக்குடும்பத்தில் அவதரித்தவரே சேர்.பொன் இராமநாதன். 80 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து செயற்கரிய பணிகளை இலங்கை வாழ் மக்களுக்கு ஆற்றியவர். நாவலரின் வழிகாட்டலில் நிலைத்தவர் இளம் வயதிலேயே தாயை இழந்துதந்தையின் அரவணைப்பில் வாழ்ந்தவர். கொழும்பு இராணிக் கல்லூரியிலும் சென்னை இராசதானிக் கல்லூரியிலும் கல்வி கற்றார். இவரது கல்விவழிகாட்டல்களாக சி.வை.தாமோதரம்பிள்ளை, சேர். முத்துக்குமார சுவாமி சேர்.ரிச்சாட் மோகன் என்போர் விளங்கினர். சட்டக்கல்வியில் துலங்கிய இவர் 1873 இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞரானார். அப்பொழுது இருந்த ஆட்சி முறையால் இலங்கைவாழ் மக்கள் தம் பண்பாடு, பாரம்பரியம் எல்லாம் சீர்குலைய மெல்ல மெல்ல கிறிஸ்தவ சமயத்திற்கு ஈர்க்கப்பட்டனர். இதனை வன்மையாகக் கண்டித்த ஆறுமுக நாவலர் இராமநாதனே அரசியலுக்குகந்தவர் என்று கண்டு அவரை அரசியலில் ஈடுபடுத்தினார். இதன்பிரகாரம் 1879ஆம் ஆண்டு படித்த இலங்கையர் என்ற பெருமையோடு தமது 28 ஆவது வயதில் சட்ட நிருபண சபையில் அங்கம் வகித்தார். இன,மத, மொழி, வேறுபாடுகள் இன்றி இலங்கை வாழ் மக்களுக்குச் சேவையாற்றினார். அரை நூற்றாண்டு காலம் அரசியல் ஞானியாகப் பிரகாசித்தார்.

இலங்கை வாழ் மக்களின் ஒற்றுமைக்காக, உயர்வுக்காகத் தன் முழு ஆற்றலையம் பயன்படுத்தினார். பட்டங்கள், பதவிகள், அவருக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. ஏழை மக்களுக்கு அரசு செய்யும் அநீதிகளை எடுத்துக் காட்டி அரசியலில் மக்களின் குரலாக ஒலித்தவர் சேர்.பொன். இராமநாதன். தனது ஆளுமையாலும் விடாமுயற்சியாலும் செயற்கரிய சாதனைகளை செய்து முடித்தவர். அப்பொழுது இருந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பேச உயிருக்கு அஞ்சி யாரும் முன்வரமாட்டார்கள். அந்த நிலையில் அஞ்சா நெஞ்சத்துடன் தலை நிமிர்ந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர்.

1915 இல் சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்கும் நடந்த கலவரத்தின் போது பல அரசியல் தலைவர்கள் கண்டபடி சிறையில் அடைக்கப்பட்டனர். சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கேட்பாரின்றி வாடிய சமூகத்திற்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வாதாடியதோடு, போர்க்கப்பல்கள் நிறைந்த கடலினூடு தனது வயோதிபத்தையும் பாராது இங்கிலாந்து சென்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் வாதிட்டு வென்று திரும்பினார். மக்களும் அரசியல் தலைமைகளும் நன்றியுடன் பாராட்டினர்.


இவரது முயற்சியால் இலங்கையில் உருவானதே சட்ட சபையும் , சட்டக்கல்லூரியுமாகும். மேலும் காங்கேசன்துறை வரை புகையிரத வீதி அமைத்தமை, ஏழைமக்களிடம்சந்தைக் குத்தகைப்பணம்அறவிடாமை, மலையக மக்களின் உழைப்பாலுயர்ந்த முதலாளித்துவம் அம் மக்களுக்கு ஏற்படும்.


கல்வி, மருத்துவச் செலவீனங்களை ஏற்பிக்கச் செய்தமை, விவசாயத்திற்காகக் குளங்கள் திருத்தியும் காட்டு நிலங்களை ஏழை மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டமை போன்ற மனிதநேய விழுமியச் செயல்கள் பலவற்றைச் செய்துள்ளார். இதனால் இலங்கை வாழ் குடிமக்கள் ஒவ்வொருவரின் நெஞ்சங்களிலும் இடம்பிடித்தார். நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயிற் படமாடுங் கோயிற் பகைவற் கதாமே என்ற திருமந்திர வாக்குப்படி நடந்துள்ளார். இதனால் அவர் மக்களுக்கு ஆற்றிய பணி மகேசன் சேவையாயிற்று. கல்விச் சமூகத்திற்காகச் செய்த சேவை மகத்தானது. ஒரு ஆணுக்குக் கொடுக்கும் கல்வியிலும் பார்க்க ஒரு பெண்ணுக்குக் கொடுக்கும் கல்வி சமூகத்தையே வாழ வைக்குமென நம்பினார். கட்டம் கட்டவோ, செலவீனங்களைப் பொறுக்கவோ முடியாத மக்கள் கூட்டத்தில் காலத்தின் தேவையறிந்து கட்டப்பட்டதே இராமநாதன்மகளிர்கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியுமாகும்.

இவரது பணிகள் இதோடு நின்று விடவில்லை. கடல் கடந்த நாடுகளிலும் பரவிற்று. உள்ளத்தால் உடலால் உயிரால் பரிசுத்தமான சேர். பொன் இராமநாதன் அவர்களின் பக்குவநிலை கண்டு அருட்பரானந்த சுவாமிகள் குருவாக வாய்க்கப் பெற்றார். இவரது வாழ்வில் நினைக்க முடியாத திசை திருப்பம் ஏற்பட்டது. ஆத்ம ஞானத்தில் மேலோங்கிக் காணப்பட்டார். சுவாமி விவேகானந்தருக்குப்பின் மேலை நாட்டில் ஞானமுழக்கம் செய்தவர் சேர்.பொன் இராமநாதன் அவர்களே. பெரும்பாலும் தனது வயோதிபத்தை ஞான நூல்கள் வாசிப்பதிலும் இறை தியானத்திலுமே கழித்தார். தனது பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து யாவும் பரமேஸ்வரன் சொத்து என்று பற்றற்று வாழ்ந்த ஞானி 1930 ஆம் ஆண்டு கார்த்திகைத் திருவோணத்தில் சமாதியடைந்தார். நால்வகை ஆச்சிரமங்களையும் கடந்த ஞானி தெய்வமானார். அவரது சமாதி ஆலயம் கல்லூரியின் முன்றலில் அமைந்துள்ளது. இன்று 15.12.2015 செவ்வாய்க்கிழமை அவரது குருபூசை நன்னாளாகும். இன்றைய தினம் கல்லூரிச் சமூகம் நன்றியுணர்வோடு சமாதி ஆலயத்தில் அமைந்த இராமநாதேஸ்வரருக்கு விசேட பூசை, ஆராதனை வழிபாடுகளை நடத்துகின்றனர். மனிதப் பிறவி மேலானது என்பதை சேர். பொன் இராமநாதன் வாழ்ந்து காட்டித் தெய்வீக முற்றுள்ளார். சைவத்தமிழ் உலகம் என்றும் அவரை நினைவு கூரும்.

கலாபூஷணம், பண்டிதை
வை.கணேசபிள்ளை
ஓய்வுநிலை ஆசிரியர்
இராமநாதன் கல்லூரி

# ஆரோக்கியமான 5 உணவுப் பழக்கங்கள்






**காய்கறி**

காய்கறிகளில் நார்ச்சத்து அதிக அளவு உள்ளது. சில காய்கறிகளைப் பச்சையாகவே எடுத்துக்கொள்ளலாம். காய்கறிகளைப் பிடித்தவை, பிடிக்காதவை எனப் பிரிக்கக் கூடாது. எல்லா காய்கறிகளையும் சாப்பிடப் பழகிக்கொள்ள வேண்டும். தட்டில் சாதத்தைவிட காய்கறிகள்தான் அதிகமாக இருக்க வேண்டும். காய் கறிகளைத் தொடர்ந்து சாப் பிட்டு வந்தால், நீரிழிவு நோய், உடல் பருமன் பிரச்சினைகள வருவதைத் தடுக்க முடியும்.

**தண்ணீர்**

நமது உடலில் 60 சதவிகிதம் நீர் உள்ளது. ரத்த ஓட்டம் சீராக இருக்க, மூளை சுறுசுறுப்பாகச் செயற்பட, சிறு நீரகச் செயற்பாடு மேம்பட, சருமம் பொலிவு பெற தண் ணீ ரின் தேவை இன்றி யமையா தது.

'அனைவரும் தினமும் இரண்டு முதல் இரண்டரை லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும்' என்கின்றனர் மருத்துவர்கள். எனவே, தாகம் எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் தினமும் சுமார் இரண்டு லீற்றர் தண்ணீ ராவது அருந்த வேண்டும்.



**நட்ஸ்**

நட்ஸ் வகையைத் தினமும் சாப்பிடுவதால், உடலுக்கு புரதச் சத்து கிடைக்கிறது. நட்ஸ்களில் நல்ல கொழுப்பு அதிகம இருக்கிறது. எனவே, தொடர்ந்து சாப்பிட்டுவரும் போது, இதயம் பலம் அடையும்.

நட்ஸ் சிறந்த ஸ்நாக்ஸ். இதனால்பசி அடங்கும் எனவே, உணவு அருந்தும் போது அதிகமாகச் சாப்பிடுவதைத் தவிர்க்க முடியம்.

**பழங்கள்**

பழங்களை அனைவருமே சாப்பிடலாம். பழங்களில் அனைத்து விதமான ஊட்டச்சத்துக்களும் நிறைந்துள்ளன. தினமும் ஏதாவதொரு பழம் சாப்பிட்டுவந்தால், எந்த நோயும் அண்டாது. பழங்களைப் பொறுத்தவரையில் நன்றாகக் கடித்துச் சாப்பிட வேண்டும். தினமும் ஒரே வகை பழத்தைச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஒரு வாரத்துக்கு நான்கைந்து விதமான பழங்களை உண்பது நல்லது. நீரிழிவு நோயாளிகள் மருத்துவர் பரிந்துரையின்பேரில் பழங்களை உண்ணலாம்.




**சிறுதானியம்**

அரிசி, கோதுமை போனற தானியங்களைத்தான் இந்தியாவில் பெரும்பாலான மக்கள் உண்கிறார்கள். இவற்றில் மாவுச்சத்துதான் நிறைந்திருக்கிறது. ஊட்டச்சத்துக்கள் குறைவு. சிறுதானியங்களைப் பயன்படுத்திச் செயயப்படும் உணவுகளைத் தினமும் ஒரு வேளையாவது சாப்பிட வேண்டும்.

சிறுதானியங்களில் கார்போஹைட்ரேட், புரதம், நார்ச்சத்து, விற்றமின்கள், தாது உப்புக்கள் நிறைவாக உள்ளன.

# பாராளுமன்ற தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி

## மோடி– சோனியா பங்கேற்பு



2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற தாக்குதலில் பலியானவர்களுக்கு பிரதமர் மோடி, சோனியா காந்தி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்துக்குள் புகுந்த 5 தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டதில் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அவர்களில் டில்லி பொலிஸார் 5 பேரும், மத்திய ரிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த ஒரு பெண் மற்றும் பாராளுமன்ற ஊழியர்கள் 3 பேரும் அடங்குவர்.

எனினும் தீவிரவாதிகள் பாராளுமன்ற கட்டடத்துக்குள் நுழையும் முன்பாக பாதுகாப்பு படை வீரர்களால் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலின் 14 ஆவது ஆண்டு நினைவு தினம் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி உயிர்த்தியாகம் செய்தவர்களின் புகைப்படங்கள் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு தீவிரவாதிகளின் தாக்குதலில் பலியானவர்களின் நினைவாக மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதில் பாராளுமன்ற சபாநாயகர் சுமித்ரா மகாஜன், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், பா.ஜனதா மூத்த தலைவர் எல்.கே.அத்வானி, சிறுபான்மையினர் நல அமைச்சர் நஜ்மா ஹெப்துல்லா, டில்லி மேல் சபை துணைத் தலைவர் பி.ஜே.குரியன், காங்கிரஸ் தலைவர்கள் குலாம்நபி ஆசாத், ஆனந்த் சர்மா, பா.ஜனதா எம்.பி. சத்யாநாராயணன் மற்றும் எம்.பி.க்கள் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

நினைவஞ்சலி நிகழ்ச்சியில் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்த தியாகிகளின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். அவர்களை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். (இ-10)

# விபத்தில் உயிரிழந்தவரை இழுத்துச்சென்ற பொலிஸ்

## அதிர்ச்சியில் பொதுமக்கள்

பஞ்சாப் மாநிலத்தில் பேருந்து மோதி உயிரிழந்தவரின் உடலை பொலிஸார் இழுத்துச் சென்ற சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாபின் சண்டிகர் பகுதியில் அர்ஷ்தீப் கவுர் என்ற 14 வயது மாணவி வீடு திரும்பும் வழியில் தனியாருக்கு சொந்தமான பேருந்து ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், சம்பவ இடத்திலேயே அந்த மாணவி உயிரிழந்துள்ளார்.

விபத்து குறித்து தகவல் அறிந்து அப்பகுதியில் கூடிய பொதுமக்கள் உடலை அங்கிருந்து அப்புறப்படுத்த மறுப்பு தெரிவித்ததுடன்,

சம்பந்தபட்ட பேருந்து மீது வழக்கு பதிய வலியுறுத்தி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவலறிந்து வந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை விடுத்து,

அங்கிருந்து அவர்களை கலைக்கும் பொருட்டு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மக்கள் கலைந்து சிதறி ஓடியுள்ளனர். இந்த நிலையில் விபத்துகுள்ளான மாணவியின் உடலை கைப்பற்றிய பொலிஸார், வீதி வழியே உடலை இழுத்து சென்றுள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

இதனைத் தொடர்ந்து ஆத்திரம் அடைந்த பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த பேருந்துக்கு நெருப்பு வைத்துள்ளனர்.

இதனிடையே சமரசத்தில் ஈடுபட்ட அரச அதிகாரிகள் இழப்பீட்டுத் தொகையாக மேலும் 10 இலட்ச ரூபாய் வழங்க உறுதியளித்த பின்னர் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய பேருந்து பஞ்சாப் மாநிலத்தை ஆளும் அகாலிதள் கட்சி பிரமுகர் ஒருவருக்கு சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

பாரதச் செய்தி

# மும்பையில் இருவர் வெட்டிப் படுகொலை

காந்திவிலியில் பெண் ஓவியர் மற்றும் சட்டத்தரணி ஆகியோர் துண்டு, துண்டாக வெட்டிப்படுகொலை செய்யப்பட்டனர். அவர்களது உடற்பாகங்கள் அட்டைப்பெட்டியில் அடைத்து சாக்கடையில் வீசப்பட்டு கிடந்தன.

மும்பை காந்திவிலி மேற்கு, தானுக்கர்வாடி பகுதியில் உள்ள சாக்கடையில் நேற்று முன்தினம் இரவு இரண்டு அட்டைப்பெட்டிகள் மிதந்து கொண்டிருந்தன. அதில் இருந்து சகிக்க முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசியது. இதுபற்றி அந்த பகுதியை சேர்ந்தவர்கள் காந்திவிலி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் தீயணைப்பு படையினருடன் சென்று சாக்கடையில் மிதந்த அட்டைப் பெட்டிகளை மீட்டனர். அந்த அட்டை பெட்டிகளை திறந்து பார்த்த போது பொலிஸார் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

அந்த அட்டைப்பெட்டிகளில் ஆண் மற்றும் பெண்ணின் உடற்பாகங்கள துண்டு, துண்டாக வெட்டி வைக்கப்பட்டு இருந்தன. கை, கால்கள் கட்டப்பட்டிருந்தன. இருவரும் அரை நிர்வாண கோலத்தில் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து மீட்கப்பட்ட உடற்பாகங்கள் பிரேத பரிசோதனைக்காக பகவதி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த சம்பவம் குறித்து பொலிஸார் நடத்திய விசாரணையில், கொலை செய்யப்பட்டது ஜுகு பகுதியை சேர்ந்த பெண் ஓவியர் ஹேமா (வயது40) என்பதும், மற்றொருவர் அண்டாப்ஹில் பகுதியை சேர்ந்த சட்டத்தரணி ஹரிஷ் பம்பானி என்பதும் தெரிந்தது. (இ-10)

# தெரு உணவை ருசித்த ராகுல்

டில்லி ஜவகர்லால் நேரு மைதானத்தில் தேசிய தெரு உணவு திருவிழா நேற்று முன்தினம் நடந்தது.

இந்த திருவிழாவில் காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி, மதிய நேரத்தில் வந்து கலந்து கொண்டார்.

அவர் தெரு உணவுகளை ருசித்து சாப்பிட்டார். தெரு வியாபாரிகளுடனும், அவர்களது குடும்பத்தினருடனும் சகஜமாக பேசி மகிழ்ந் ர்.

அவருடன் பலரும் 'செல்பி' படங்கள் எடுத்துக்கொண்டனர்.

உணவு திருவிழாவில் பங்கேற்றது தொடர்பாக ராகுல் காந்தி, 'டுவிட்டர்' வலைத்தளத்தில் பதிவிடவும் தவறவில்லை.

அதில் அவர், "ஜவகர்லால் நேரு மைதானத்தில் நாஸ்வி ஏற்பாட்டில் நடந்த 'நாஸ்வி தேசிய தெரு உணவு திருவிழா 2015 இன் போது சுவையான தெரு உணவுகளை ருசித்து சாப்பிட்டேன்" என தெரிவித்தார். (இ-10)

# சிறுபான்மையினரின் நிலை பற்றி பிரதமர் மோடியிடம் பேசினேன்

## இம்ரான் கான் தெரிவிப்பு

(லாகூர்)

கடந்த சில தினங்களுக்கு முன் பிரதமர் மோடியை சந்தித்து பேசிய இம்ரான் கான், இந்தியாவில் சிறுபான்மையினரின் நிலை பற்றி அவரிடம் விவாதித்ததாக தெரிவித்தார்.

இந்தியாவுக்கு வருகை தந்த பாகிஸ்தானின் தெக்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான கான் பிரதமர் மோடியை கடந்த 2 தினங்களுக்கு முன் டில்லியில் சந்தித்து பேசினார்.

அப்போது, பாகிஸ்தானுக்கு வருமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட இம்ரான் கான் கூறுகையில், "இந்தியாவில் சிறுபான்மையினரின் நிலை குறித்து பிரதமர் மோடியிடம் பேசினேன்.

சிறுபான்மையினரின் மோசமான நிலையின் தாக்கம் பாகிஸ்தானிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை மோடியிடம் கூறினேன். சிறுபான்மையின மக்களுக்கு எதிராக காட்டப்படும் பாரபட்சத்திற்கு முடிவு கட்ட தெளிவான செய்தியை இந்திய தலைவர் கள் வெளியிட வேண்டும் என்றும் மோடியிடம் வலியுறுத்தினேன் என்றார். (இ-10)

# விண்ணில் பாயவுள்ளது பி.எல்.எஸ்.வி. ரொக்கெட்

சிங்கப்பூரில் உருவான 6 செயற்கைக்கோள்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ விண்ணில் செலுத்த உள்ளது. நாளை மாலை 6 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி ரொக்கெட் மூலமாக இந்த செயற்கைக்கோள்களை அனுப்புகிறது. இந்த 6 செயற்கைக்கோள்களும் 625 கிலோ எடை கொண்டதாகும். இந்த ரொக்கெட் விண்ணில் பாய்வதற்கான 59 மணி நேர கவுண்டவுன் நேற்று காலை 7 மணிக்கு துவங்கியது.

சிங்கப்பூரின் இந்த 6 செயற்கைகோள்களில் TeLEOS-1 என்ற முதன்மை செயற்கை கோளானது 400 கிலோ எடை கொண்டதாகும். மீதமுள்ள ஐந்து செயற்கைக் கோள்களில் 2 மைக்ரோ வகையையும் 3 நானோ வகையை சேர்ந்த செயற்கைக்கோள்களாகும்.

நடப்பு ஆண்டில் இதுவரை இஸ்ரோ 3 இந்திய செயற்கைக்கோள்கள், 11 வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் என மொத்தம் 14 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியுள்ளது.

இதல், 13 செயற்கைக் கோள்கள் பி.எஸ.எல்வி ரொக்கெட் மூலமாகவும் 1 செயற்கைக்கோள் ஜி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலமாகவும் ஏவப்பட்டுளளது. இந்நிலையில், தற்போது ஏவப்பட உள்ள இந்த 6 சிங்கப்பூர் செயற்கைக்கோள்களும் இஸ்ரோவின் இந்த ஆண்டின் கடைசி சாதனையாகும். (இ-10)

# காஷ்மீரில் உறைநிலை

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் கடும் குளிர் வாட்டியெடுக்கிறது. லே, லடாக் பகுதிகளில் குறைந்த பட்ச தட்பவெப்ப நிலை உறைநிலைக்கும் கீழே சென்று மைனஸ் 12.1 டிகிரி செல்சியஸாக உள்ளது.

வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறும்போது, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பள்ளத் தாக்கு பகுதி முழுவதும் குறைந்த பட்ச தட்பவெப்பநிலை உறை நிலைக்கும் கீழே சென்று விட்டது. அடுத்த மூன்று நான்கு நாட்களுக்கு இரவில் மேலும் குறையும் என எதிர்பார்க்கிறோம் என்றார். (இ-10)

# நடிகர் சிம்பு, அனிருத் மீது வழக்கு; சைபர் கிரைம் பொலிஸ் விசாரணை

நடிகர் சிம்பு, இசையமைப்பாளர் அனிருத் இருவரும் ஆபாசமாக பாடல் இயற்றியதாக மாதர் சங்கத்தினர் கொடுத்த புகாரின் பேரில் கோவை ரேஸ்கோர்ஸ் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மேலும், இணையத்தில் பாடல வெளியிடப்பட்டது தொடர்பாக சைபர கிரைம் பொலிஸாரும் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

சிம்பு, அனிருத் இருவரும் 'பீப்' என்ற பாடலை இணையத்தளத்தில் வெளியிட்டதாகக் கூறப்பட்டது. அதில், பெண்களை ஆபாசமாக சித்திரித்துள்ள வார்த்தைகள் இருநததாகக் கூறி பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு நிலவுகிறது. இருவர் மீதும் நட வடிக்கை எடுக்க பெண்கள் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

கோவையில் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தினர் சிம்பு, அனிருத் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொலிஸாரிடம் மனு அளித்து, போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து கோவை மாநகரக் காவல் ஆணையர் அமல்ராஜ் உத்தரவின் பேரில் இருவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மாதர் சங்க மாவட்டச் செயலாளர் ராதிகா கொடுத்த புகாரின் பேரில், சிம்பு, அனிருத் மீது பெண்களை ஆபாசமாக சித்திரிப்பதற்கு எதிரான சட்டம் பிரிவு 4, பெண்களை இழிவுபடுத்துவதற்கு எதிரான சட்டம் (509), தகவல் தொழில்நுட்பச் சட்டம்(67) ஆகியவற்றின் கீழ் கோவை பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-10)

# பிலிப்பைன்ஸை நெருங்கும் சூறாவளியால் 7இலட்சத்து 50 ஆயிரம் பேர் வெளியேற்றம்

**மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டைத் தாக்க நெருங்கிவரும் கடும் சூறாவளியின் விளைவாக மத்திய பிலிப்பைன்ஸ் பகுதியில் வசிக்கும் சுமார் ஏழரை இலட்சம் மக்கள் தங்களது வாழ்விடங்களை விட்டு வெளி யேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.**

"மெலான்" என பெயரிடப்பட்டுள்ள இந்த சூறாவளியின் விளைவாக, பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள 20 மாகாணங்களில் கடுமையான புயல்காற்றுடன் சுமார் 12 அங்குலம் வரையிலான கனமழையும், அதனால், ஆங்காங்கே நிலச்சரிவும் ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. 4 மீற்றர் உயரத்துக்கு வெள்ளப்பெருக்கும் உண்டாகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பீதியில் உறைந்துப்போயுள்ளனர்.

இதையடுத்து, 40 உள்நாட்டு விமானச் சேவைகள் நேற்று இரத்து செய்யப்பட்டுள்ளன. 73 பயணிகள் படகுகளும், நூற்றுக் கணக்கான மீன்பிடி படகுகளும் கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மத்திய கிழக்கு பிலிப்பைன்ஸ் பகுதியில் படகுச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் சுமார் 8 ஆயிரம் மக்கள் வெவ்வேறு தீவுகளில் நிற்கதியாக தவிப்பதாக உள்ளூர் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸில் ஆண்டு தோறும சுமார் 20 சூறாவளிகளும், புயல்களும் கோரத்தாண்டவம் ஆடிவருகின்றன. கடந்த 2013 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டை தாக்கிய ஹயான் புயலுக்கு சுமார் 8 ஆயிரம் பேர் பலியானதையடுத்து, ஆபத்தான பகுதிகளில் வசித்துவரும் சுமார் ஏழரை இலட்சம் மக்களை அந்நாட்டின் பேரிடர் மீட்புக் குழுவினர் வெளியேற்றி, பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்துள்ளனர். (இ-10)

## ரஷ்ய மனநல வைத்தியசாலையில் பயங்கர தீவிபத்து

### 23 பேர் இதுவரை பலி

(மொஸ்கோ)

ரஷ்ய நாட்டில் உள்ள மனநல வைத்தியசாலை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் சிக்கி 23 நோயாளிகள் பலியாகியுள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவின் Voronezh நகருக்கு அருகில் Alferovka என்ற கிராமப் பகுதி உள்ளது.

சுமார் 700 குடிமக்கள் மட்டுமே வசித்து வரும் இந்த பகுதியில் 140 மனநல நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலை அமைந்துள்ளது.

இந்நிலையில், கடந்த சனிக் கிழமை இரவு இந்த வைத்திய சாலையில் திடீரென தீவிபத்து ஏற்பட்டதாக தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

தகவலை பெற்று விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வர கடுமையாக போராடியுள்ளனர்.

வைத்தியசாலையின் கூரை மீது ஏறி தீயை அணைக்க முயன்ற போது, கூரை உடைந்து விழுந்து தீய ணைப்பு வீரர்களுக்கு காயம் ஏற் பட்டது.

எனினும், முயற்சியை கைவிடாமல் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தபோதிலும், மனநல வைத்தியசா லையில் இருந்த சுமார் 23 நோயாளிகள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

பலத்த தீக்காயங்கள் அடைந்திருந்த எஞ்சிய நோயாளிகளை வீரர்கள் பாதுகாப்பாக வெளியேற்றி வேறொரு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் Novgorod நகரில் உள்ள மனநல வைத்தியசாலையிலும், மொஸ்கோ நகரில் உள்ள மனநல வைத்திய சாலையிலும் தீவிபத்து ஏற்பட்டு 75 நோயாளிகள் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நெகிழ்ச்சி சம்பவம்

சீனாவில் பறக்கும் விமானத்தில் ஊனமுற்ற முதியவர் ஒருவருக்கு விமான பணிப்பெண் ஒருவர் உணவூட்டிய நெகிழ்ச்சி சம்பவம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சீனாவின் ஜெங்ஷோ பகுதியில் இருந்து ஹைக்கோ பகுதிக்கு விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது.

இந்த நிலையில் Niu எனும் 71 வயதான முதியவர் தளர்வாதம் காரணமாக சக்கர நாற்காலியில் அமர்ந்து பயணம் செய்து வந்துள்ளார்.

அவரது அருகில் வந்த Fan அவருக்கு உணவூட்டிவிட அனுமதிக்க முடியுமா என கேட்டுள்ளார். தளர்வாதத்தினால் பாதிக்கப்பட்ட அந்த முதியவர் இதை கேட்டதும் கண்களில் நீர் வழிய அந்த பணிப் பெண்ணுக்கு நன்றி தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

முதியவரின் அனுமதியுடன் அவருக்கு உணவூட்டிய Fan அரிசி உணவு அவருக்கு கடினமாக இருக்கும் என்பதால் நூடில்ஸ் உணவை அவருக்காக வழங்கியுள்ளார். (இ-10)

# கடவுள் உங்களை விரைவில் அழிப்பார்

## சிரியாவின் ஜனாதிபதிக்கு குழந்தைகள் சாபம்

(டமாஸ்கஸ் )

சிரியாவில் கொடுங்கோல் ஆட்சி செய்துவரும் ஜனாதிபதியை கடவுள் விரைவில் அழிப்பார் என வறுமையில் வாடி வரும் அந்நாட்டு குழந்தைகள் கடுமையாக சாடியுள்ள வீடியோ வெளியாகியுள்ளது.

சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்திற்கும், அந்நாட்டில் உள்ள போராளிகளுக்கும் இடையே உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது.

சிரிய ஜனாதிபதியான பஷார் அல்-அசாத்தை பதவி விலகக் கோரி போராளிகள் மட்டுமன்றி, உள்நாட்டு மக்களும் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், Eastern Ghouta பகுதியில் வசிக்கும் 6 முதல் 7 வயதுள்ள குழந்தைகள் ஜனாதிபதியை கடுமையாக சாடியுள்ள வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறுமி ஒருவர் பேசுகையில், 'ஜனாதிபதியே, உங்களுக்கு பசி எனறால் என்னவென்று தெரியுமா? அதை எப்போதாவது உணர்ந்து இருக்கிறீர்களா?

ஆனால், இங்கு நாங்கள் தினந்தோறும் பசியோடு தான் வசித்து வருகிறோம். பசியால் எத்தனை குழந்தைகள் இங்கு இறக்கிறார்கள் என உங்களுக்கு தெரியுமா?

சரியான உணவு இல்லாமல் அசுத்துமான தண்ணீரையும், அழுகிப்போன ரொட்டித் துண்டுகளை தான் நாங்கள் உணவாக சாப்பிட்டு வருகிறோம்.

சில மாதங்களுக்கு முன்னர் தொலைக்காட்சியில் செய்தியை பார்த்தபோது, நீங்கள் மக்கள் மீது இரசாயன தாக்குதலை நடத்தியதை கண்டு அதிர்ச்சி அடைந்தோம். ஆனால், கடவுள் எங்களை காப்பாற்றி விட்டார்.

உங்கள் இரசாயன குண்டுகள் எங்களை கொல்லவில்லை. ஆனால், உங்களுடைய கோபம் உங்களை கொன்று விடும். கடவுள் உங்களை விரைவில் அழித்து விடுவார்" என கடுமையாக பேசியுள்ளார்.

இதே பகுதியில் வசிக்கும் சில குழந்தைகளும் சிரிய ஜனாதிபதி பஷாருக்கு எதிராக கடுமையாக பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# அரச படைகள் கூட்டுத்தாக்குதல் சிரியாவில் 31 அப்பாவிகள் பலி





(டமாஸ்கஸ்)

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கமுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் 31 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 4 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கமும் அதிகரித்து வருகின்றன.

இதன் காரணமாக பல்வேறு நாடுகளும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த உள்நாட்டு போர் காரணமாக 2 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர், 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கமுள்ள டமாஸ்கஸ் பகுதியில் ரஷ்யா மற்றும் அரச படைகள் நடத்திய தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏராளமானோர் படுகாயமடைந்தனர். வான்வெளி மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சிரியாவின மனித உரிமைக்கான கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. டோமா, சக்பா உள்ளிட்ட நகரங்களில் இந்த வான்வெளித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மேலும் இந்த தாக்குதல் ரஷ்யா மூலம் நடத்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. (இ-10)




# பிரிட்டனில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த தீவிரவாதிகள்

(லண்டன்)

பிரிட்டனில் தாக்குதல் நடத்த வேண்டிய இடங்கள் என்பது தொடர்பான புகைப்படங்களை தீவிரவாதி அப்தெலகமத அபாவுட் தனது தொலைபேசியில் வைத்திருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த மாதம் பிரான்ஸ் நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 130 பேர் பலியாகினர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலின் போது தீவிரவாதி அப்துலகமது அபாவுட் என்பவர பலியாகினார்.

இந்நிலையில், பிரிட்டனின் பர்மின்ஹாம் பகுதியில் தாக்குதல் நடத்த வேண்டிய இடங்கள் தொடர்பான புகைப்படங்கள் அவரது தொலைபேசியில் இருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், பாரீஸ் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர் சலீம் அப்தெஸ்லாம். இவர் இப்போது பெல்ஜியம் நாட்டிற்குள் தப்பி சென்றிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பாரீஸ் நகரில் தாக்குதல் நடத்துவதற்கு முன்னரே பிரித்தானியாவின் பர்மின்ஹாமில் உள்ள முக்கிய இடங்களை நேரில் பார்வையிட்ட தீவிரவாதி அப்துலகமது தனது தொலைபேசியில் அவற்றை புகைப்படம் எடுத்து வைத்திருந்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

அதன்படி Edgbaston மைதானம், தேசிய கண்காட்சி மையம், உதைபந்தாட்ட விளையாட்டு திடல் போன்றவற்றை அவர் தனது தொலைபேசியில் புகைப்படம் எடுத்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

மேலும் இந்த இடங்களில் தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. (இ-10)




# பறக்கும் குதிரை!

ராஜ துரோக குற்றச்சாட்டு சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவன் அரசன் முன் நிறுத்தப்பட்டான்.

அவன் தன்னை மன்னர் விடுவித்தால் அவருடைய குதிரையை பறக்க வைப்ப தாகக் கூறினான்.

அரசருக்கு ஆச்சர்யம்!

எப்படி குதிரை பறக்கும்?

வீணாக புளுகாதே! என்று அதட்டினார்.

அந்த கைதியோ பணி வுடன், மன்னா! குதிரைக்கு முறையாக பயிற்சி கொடுத்தால் ஒரு வருடத்தில் பறக்கும். எனக்கு அந்த வித்தை தெரி யும் என்றான்.

ஒரு வருடத்தில் குதிரை பறக்குமா?

கண்டிப்பாக மன்னா!

அப்படி பறக்கவில்லை என்றால் உன் மரணம் நிச்சயம்!

குதிரை பறந்து விட்டால் எனக்கு விடுதலை அளிப்பது உறுதி அல்லவா? தைரியமாக கேட்டான் கைதி.

கண்டிப்பாக குதிரை மட்டும் பறந்துவிட்டால் உனக்கு விடுதலை அளிப்பேன்!

நன்றி மன்னா! இன்று முதல் நான் குதிரைக்கு பயிற்சி அளித்து இன்னும் ஒரு வருடத் தில் பறக்க வைக்கிறேன்!

அரசன் ஒப்புக் கொண்டான்.

கைதி விடுவிக்கப்பட்டு அவனிடம் அரசனின் குதிரை ஒப்படைக்கப்பட்டது.

அதை பராமரித்து பயிற்சி அளிக்கத் தொடங்கினான் கைதி.

கைதியிம் பின்னர் யாரோ கேட்டார்கள். என்ன முட்டாள் தனம் செய்கிறாய்?

குதிரை எங்காவது பறக்குமா? இது உன்னால் சாத்தியப்படுமா?

கைதி சொன் னான்.

ஒரு வருடம் இருக்கிறது!

அதற்குள் அரசன் சாகலாம்!

இல்லை நான் சாகலாம்!

இல்லை இந்த குதிரை சாகலாம்!

ஏன் இந்த ஒரு வருடத்தில் அந்த குதிரை பறந்தாலும் பறக்கலாம் யார் கண்டது?

கைதியின் சமயோசித புத்தியை நினைத்து வியந்



தான் கேள்வி கேட்டவன்.

இந்த கதையை படித்ததும் நமது நீதித்துறைதான் நினைவுக்கு வந்தது.

உடனே நீதிபதிகள் நீதி மன்ற அவமதிப்பு என்று போக வேண்டாம்.

தாமதப்படுத்தப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு சமம்.

ஆனால் இன்று குற்றம் செய்து மாட்டிக் கொண்டவர்கள் தான் அரசுக் கொட்டிலில் இருக்கிறார்கள்.

ஒரு ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியவன் பதவி இழந்து அந்தஸ்து இழந்து பலவற்றையும் இழந்து சிறையில் இருக்க கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளை யடித்தவர்கள் அரசை நடத்து கிறார்கள்.

இந்த நிலையில்தான் நமது நீதித் துறை உள்ளது.

சாத்தியம் இல்லாத ஒன்றுக்கு அந்த மன்னன் குற்ற வாளியை விடுவித் தானோ அதே போல்தான் இன்றும் குற்றவாளிகளை விடுவித்துக் கொண்டு இருக்கிறது நீதி மன்றங்கள்.

காட்சிகள் மாறுகையில் ஆட்சிகள் மாறி அவர்களே கோலோச்சுகிறார்கள்!




- 1256 - மொங்கோலியப் பேரரசன் குலாகு கான் அலாமுட் (இன்றைய ஈரானில்) என்ற இடத்தைக் கைப்பற்றி அழித்தான்.
- 1799 - முற்றிலும் உள்ளூர் மக்களைக் கொண்ட முதலாவது ஆங்கில செமினறி கொழும்பில் அமைக்கப்பட்டது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளை டென்னசியில் முற்றாகத் தோற்கடித்தனர்.
- 1891 - ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப்பந்தாட்டத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தினார்.
- 1905 - அலெக்சாண்டர் புஷ்கினின் கலாசாரப் பழமைகளைப் பேணும் பொருட்டு சென் பீட்டர்ஸ்பேர்க்கில் புஷ்கின் மாளிகை அமைக்கப்பட்டது.
- 1914 - முதலாம் உலகப் போர்: சேர்பிய இராணுவம் பெல்கிரேடை மீண்டும் கைப்பற்றியது.
- 1941 - பெரும் இன அழிப்பு: உக்ரேனின் ஆர்க்கிவ் நகரில் 15,000 யூதர்கள் நாசிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1960 - மன்னர் மகேந்திரா நேபாளத்தின் அரசைக் கலைத்து நாட்டின் முழு அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்டார்.
- 1965 - த சவுண்ட் ஒஃப் மியூசிக் திரைப்படம் வெளியானது.
- 1967 - ஒகையோவில் ஒகையோ ஆற்றிற்கு மேலே செல்லும் வெள்ளிப் பாலம் உடைந்து வீழ்ந்ததில் 46 பேர் கொல்லப்பட்டனர்.
- 1970 - சோவியத் ஒன்றியத்தின் வெனேரா 7 விண்கலம் வெள்ளி கோளின் மேற்பரப்பில் மெதுவாக இறங்கிய முதலாவது கலமாகும். இதுவே வேறொரு கோளின் மீது இறங்கிய முதலாவது விண்கலமாகும்.
- 1978 - மக்கள் சீனக் குடியரசை அங்கீகரிப்பதாகவும் தாய்வானுடனான உறவுகளைத் துண்டிப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.
- 1994 - இணைய உலாவி நெட்ஸ்கேப் நவிகேட்டர் 1.0 வெளியிடப்பட்டது.
- 1995 - ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் "அப்துல் ரவூஃப்" என்பவர் தீக்குளித்து இறந்தார்.
- 1997 - தஜிகிஸ்தான் விமானம் ஒன்று ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா விமானநிலையத்திற்கு அருகில் வீழ்ந்து நொருங்கியதில் 85 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - தென் கிழக்கு ஆசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்கும் உடன்படிக்கை பாங்கொக்கில் கையெழுத்திடப்பட்டது.
- 2001 - பீசாவின் சாயும் கோபுரம் 11 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.
- 2006 - கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இனம் தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 37 - நீரோ மன்னன், ரோமப் பேரரசன் (இ. 68)
- 1832 - அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ்சுப் பொறியியலாளர் (இ. 1923)
- 1852 - ஹென்றி பெக்கெரல், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (இ. 1908)
- 1936 - சோ. ந. கந்தசாமி, தமிழறிஞர்
- 1945 - வினு சக்ரவர்த்தி தமிழ் திரைப்பட நடிகர்.
- 1971 - ஜீவ் மில்க்கா சிங், இந்திய கோல்ஃப் விளையாட்டு வீரர்

### இறப்புகள்

- 1675 - ஜொஹான்னெஸ் வெர்மீர், நெதர்லாந்து நாட்டு ஓவியர் ஆவார் (பி. 1632)
- 1950 - சர்தார் வல்லபாய் பட்டேல், இந்திய அரசியல் தலைவர் (பி. 1875)
- 1966 - வால்ட் டிஸ்னி, கார்ட்டூன் ஓவியர் (பி. 1901)

## வால்ட் டிஸ்னி



வால்ட் டிஸ்னி டிசெம்பர் 5, 1901, டிசம்பர் ஆம் ஆண்டு பிறந்தார். இவர் உலகப் புகழ் பெற்ற ஓவியர். மிக முக்கிய மான கார்ட்டூன் ஓவியர். மிக்கி மௌஸ். டொனால்ட்டக், ஸில்லி சிம் பொனிஸ் போன்றவற்றை உருவாக்கியவர். திரைப் பட இயக்குனராகவும் தயாரிப்பாளராக வும் பணிபுரிந்தவர். வால்ட் டிஸ்னி தயாரிப்பு நிறுவத்தின் இணை-நிறுவன ரான டிஸ்னி உலகின் புகழ்பெற்ற திரைப் பட தயாரிப்பாளர் ஆவார்.

இருபதாவது நூற்றாண்டின் கேளிக்கை உலகில் தன் தாக்கதிர்காக பெயர்ப்பெற்றவர் டிஸ்னி. மேலும் பல வணிக நோக்குடைய பூங்கா வடிவமைப்பு மற்றும் அசைப்படம் எடுப்பதில் வல்லுனரும் கூட. அவரும் அவரின் பணியாளர்களும் இணைந்து உருவாக்கியது தான் மிக்கி மௌஸ் போன்ற கற்பனை கதாபாத்திரங்கள். இவர் 59 ஒஸ்கார் விருதுக்கான நியமனங்களும் மற்றும் இருபத்தாறு ஒஸ்கார் வென்றுள் ளார், இதில் ஒரே ஆண்டில் நான்கு வென்றது ஓர் உலகசாதனை . இதனால் இவரே மற்றவரை விட அதிக நியமனங்களும், விருதுகளும் பெற்றார். ஏழு எம்மி விருதுகளும் வென்றார். இவர் தான் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அமைந்துள்ள டிஸ்னி லாந்து மற்றும் வால்ட் டிஸ்னி உலக உல்லாச நகரம் பொழுதுபோக்கு பூங்காக்கள், ஜப்பான், பிரான்ஸ் மற்றும் ஹாங்காங் போன்ற பூங்காக்களின் பெயர்க் காரணியும் ஆவார்.

புளோரிடாவில் தன் கனவு திட்டபணியான வால்ட் டிஸ்னி உலக உல்லாச நகரம் திறப்புக்கு சில வருடங்கள் முன்னரே 1966-ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி டிஸ்னி நுரையீரல் புற்றுநோயால் இறந்தார்.

# இலங்கைக்கு வழங்கவுள்ள நிதி குறித்து விளக்கம் தேவை

## தமிழர்களுக்கான நாடாளுமன்றக்குழு பிரித்தானிய அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையின் இராணுவ மீளமைப்புக்காக வழங்கப்படப் போகும் நிதி குறித்து விளக்கம் ஒன்றை தமிழர்களுக்கான பிரித்தானிய நாடாளுமன்றத்தின் அனைத்துக்கட்சி குழு கோரியுள்ளது. பிரித்தானிய பிரதி வெளியுறவு அமைச்சர் ஹூகோஸ்வைரியிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இலங்கையின் இராணுவத்தை மீளமைப்பு செய்ய 6.6 மில்லியன் பவுண்ட்ஸ்களை வழங்க அண்மையில் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் உறுதியளித்துள்ளார்.


எனினும் இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படவுள்ளது என்பது குறித்து விளக்கம் தேவை என்று நாடாளுமன்றக் குழு கோரியுள்ளது.

ஏற்கனவே போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவம் ஒன்றுக்கு வழங்கப்படப் போகும் நிதி குறித்தும் இதில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஜெனிவா யோசனைகளை இன்னும் இலங்கை அரசாங்கம் உரிய வகையில் செயற்படுத்தவில்லை என்பது குறித்தும் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற குழு ஹூகோஸ்வைரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் ராய்ன். ஜோன் மான், ஸ்டீபன் பௌன்ட், ஸ்டீவ் ரீட், வெஸ் ஸ்ரீட்டிங் மற்றும் ஸ்டீபன் டிம்ஸ் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (இ-10)

# தனியார் மருத்துவ பல்கலையுடன் பேச்சுவார்த்தை கிடையாது-ராஜித



மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படமாட்டாது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவப் பல்கலைக்கழகம் தொடர்பில் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியம் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் தனியார் மருத்துவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரச வைத்தியசாலை களில் பயிற்சிக்கான அனுமதி வழங்கப்படக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையே மாலபே தனியார் மருத்துவப் பல்கலைக்கழக மாணவர்களின் பயிற்சிக்கு ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதி பெற்றுக்கொடுப்பதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன முயற்சி செய்வதாகவும், அதற்கு ஏதுவான வகையில் அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளதாகவும் செய்திகள் பரவியிருந்தன. எனினும் அமைச்சர். ராஜித சேனாரத்ன இதனை மறுத்துள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கொன்றுக்குப் பதிலளிப்பது தொடர்பாகவே கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மருத்துவக்குழு அதிகாரிகள் மட்டுமே குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாலபே தனியார் மருத்துவப் பல்கலைக்கழக பிரதிநிதிகள் யாரும் இக் கலந்துரையாடலில் பங்கேற்கப்போவதில்லை என்றும், அவர்களுடன் கலந்துரையாடும் தேவை இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# முக்கிய வி.ஐ.பிக்களின் விமானப்பயண கட்டண நிலுவைகளை அவசரமாகச் செலுத்தியது யார்?

முக்கிய வி.ஐ.பி. குடும்பமொன்றின் உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட விமானப் பயணங்களுக்கான கட்டண நிலுவை, அவசர அவசரமாக செலுத்தப்பட்டுள்ளது. உள்ளக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பயணங்களுக்காக இலங்கை விமானப் படையினருக்கு குறித்த குடும்பத்தின் சிலர் பெருந்தொகை நிலுவையை செலுத்த வேண்டியிருந்தது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இந்த முக்கிய வி.ஐ.பி. குடும்பத்தினர் இவ்வாறு ஹெலிகொப்டர்களின் மூலம் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பயணங்களுக்காக இலங்கை விமானப் படையினருக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த இலட்சக் கணக்கான ரூபா பணம் திடீரென செலுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை எவ்வாறு யார் செலுத்தினார் என்பது குறித்து விமானப்படையினர் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானப் படைக்கு நிலுவை செலுத்தப்படாமை குறித்து, பாரிய நிதி மோசடிகள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாக செலுத்தப்படாதிருந்த நிலுவைப் பணம் திடீரென செலுத்தப்பட்டுள்ளது

நிலுவைப் பணம் செலுத்தப்பட்டுள்ளதாக விமானப்படையினர் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

எனினும், யார் எவ்வாறு எப்போது செலுத்தினார்கள் என்பது பற்றிய விபரங்களை விமானப் படையினர், ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இன்று ஒரு தகவல்

## மண்பானை மகத்துவம்

"எங்க அம்மா ஒரு மண்குடம் வாங்கிக் கொடுத்தார்! அதை எடுத்துக் கொண்டுபோய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவர் அதை ஒரு பொன்குடமாக மாற்றிவிட்டார்!" என்றார் ஒருவர்.

"எப்படி அது?" என்று கேட்டேன். "ஒன்றுமில்லை! கீழே போட்டு உடைத்துவிட்டார்!" என்றார்.

"அப்படியானால், அது எப்படி பொன்குடமாக மாறும்?" என்றேன்.

"நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம்! மருமகள் உடைத்தால் பொன்குடம்! என்று. இது மருமகள் உடைத்தது. அதுதான் பொன் குடம்!" விளக்கம் சொன்னார் அவர்.

மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட இந்தக் காலத்தில் மண்குடம்-பெண்குடம் மாதிரித்தான். மண்பானையில் அவ்வளவு மகத்துவம் இருக்கிறது.

தண்ணீரை சுத்தமாக்கி குடிப்பதற்கு இப்பொழுது பலபேர் "வோட்டர் பில்டர்" உபயோகப்படுத்துகிறார்கள். அதே மாதிரி தண்ணீரைக் குளிர்ச்சியாக வைக்க பிரிட்ஜ் உபயோகப்படுத்துகிறார்கள்.

இந்த இரு செயல்களையும் செலவே இல்லாமல் செய்து கொடுப்பது தான் மண்பானை! உலோகப் பாத்திரங்களில் நீர் ஊற்றி வைத்திருந்தால் அதில் கிருமிகள் அதிகமாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் மண்பானையில் நீர் ஊற்றி வைத்தால் அப்படி ஆவதில்லை. நீரிலுள்ள கிருமிகளையெல்லாம் உறிஞ்சி விடுவதால் குடிநீர் சுத்தமாகி விடுகிறது.

அந்தக் காலத்திலேயே நமது முன்னோர்கள் இதை நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள். மண்பானை என்பது ஒரு தலைசிறந்த "வோட்டர் பில்டர்" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஐதராபாத்தில் உள்ள உணவு ஆராய்ச்சிக் கழகம் இதைக் கண்டுபிடித்திருக்கிறது. இதற்கு பின்பும் நாம் சும்மா இருக்கலாமா? உடனே போய் ஒரு மண்பானை வாங்கிக் கொண்டு வந்து விட வேண்டியது தானே!

முதலில் பானையை எடுத்துக் தட்டிப்பாருங்கள்! வெண்கலப் பாத்திரத்தை தட்டுவது மாதிரி சத்தம் கேட்டால் அது நல்லபானை.

பானைக்கு வெளிப்பக்கம் கறுப்புத் திட்டாக தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். பானை நன்றாக வெந்திருக்கிறது என்று அர்த்தம். வேறு ஒன்றுமில்லை. சிலது சாம்பல் பூத்து, சொரசொரப்பாக இருக்கும். அது வேண்டாம் வெளிப்பாகத்தில் இருப்பதை போன்று உள்பக்கமும் கறுப்புத் திட்டு இருந்தால் அதை வாங்க வேண்டாம். கொஞ்ச நாளில் உடைந்து விடும்.

புதுப்பானையில் தண்ணீரை ஊற்றியவுடன் "உஸ்" என்ற சத்தம் கேட்கும் பானையில் களிமண்ணுடன் கலந்திருக்கும் மணல் நீரை உறிஞ்சும் சத்தம் தான் அது. பானைக்கு வெளிப்பக்கமோ, உள்பக்கமோ சீமெந்து பூசியிருந்தால் வேண்டாம். அதனால் உஷ்ண காற்று உள்ளேயே தங்கி விடும். தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது.

என்னதான் இருந்தாலும் செலவில்லாமல் கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கும் மண்பானைத் தண்ணீருக்கு ஈடு எதுவுமில்லை. உடனடியாக உண்மையாக தாகத்தை தணிப்பது அதுதான்!

ஒரு பெரிய சங்கீத வித்துவான் கடம் வாசிப்பார். ஒரு கச்சேரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அதற்கு முதல் மனைவியைக் கூப்பிட்டு "உன்கையால் 'ஜில்' என்று தண்ணி கொண்டு வந்துகொடு குடித்து விட்டுப் போகிறேன்" என்றார்.

அந்த அம்மாவும் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிக் குடித்தார். வெயிலுக்கு இதமாக இருந்தது.

"ஆகா! மண் பானைத் தண்ணியா? கால மறிந்து நடப்பதில் உன்னை எவரும் மிஞ்ச முடியாது! ரொம்ப தாங்ஸ்" என்றார்.

"உங்களுக்குத்தான் தாங்ஸ் சொல்ல வேண்டும்" என்றார் அந்த அம்மா.

"ஏன்?" என்று கேட்டார் இவர்.

"நேற்று, இன்று ஒரு தகவல் கேட்டேன். இன்றைக்கு நம் வீட்டில் மண் பானையாக உபயோகப்படுத்துவதே உங்கள் 'கடம்'தான்! ரொம்ப தாங்ஸ்" என்றாராம் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

78

## "அபூர்வ சகோதரர்கள்" அபார வெற்றி

...பிறகு பம்பாயில் நடந்த குதிரைப் பந்தயத்தில் அந்தக் குதிரையை கலந்துகொள்ளச் செய்தார். அதன் மீதுநிறைய பணத்தைக் கட்டினார்.

தோற்ற குதிரையை வாங்கி ஓட விடுவதுடன் அதன்மீது நிறைய பணமும் கட்டியிருக்கிறார் வாசன். என்று பலரும் கேலி செய்தார்கள்.

ஆனால் அந்தப் பந்தயத்தில் வாசன் குதிரைதான் முதலாவதாக வந்தது. அவருக்கு நிறைய பணம் கிடைத்தது.

எல்லோரும் அதிசயப்பட்டார்கள்.

இதன்பிறகு படத்தயாரிப்பில் தீவிரமான இறங்கி விடவே குதிரைப் பந்தயத்துக்கு போவதை அடியோடு நிறுத்திவிட்டார் வாசன்.

ஜெமினி தயாரித்த அபூர்வ சகோதரர்கள் படம் மாபெரும் வெற்றி பெற்றது. இந்தப் படத்தில் எம்.கே.ராதா இரட்டை வேடத்தில் அற்புதமாக நடித்தார்.

ஒட்டிக்கொண்டு பிறந்த இரட்டைக் குழந்தைகள், தனித்தனியாக பிரிக்கப்படுகின்றன. மூத்தவன் அழுதால் இளையவனும் அழுவான்!

மூத்தவனின் உணர்ச்சிகள் இளையவனுக்கு வருவதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.


எதிரியைப் பழிவாங்க ஒன்றுசேரும் இந்த சகோதரர்கள் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ள நேரிடுகிறது. காரணம் காதல்!

மூத்த சகோதரன் காதல் வயப்படும்போது இளையவனுக்கு காதல் உணர்ச்சி ஏற்படுகிறது. இரு சகோதரர்களும் விரோதிகளாக மாறுகிறார்கள்.

அலெக்சாண்டர் டூமாஸ் எழுதிய கார்சிகன் பிரதர்ஸ் என்ற ஆங்கில நாவலைத் தழுவி உருவாக்கப்பட்ட கதை அபூர்வ சகோதரர்கள். (கமலஹாசன் பிற்காலத்தில் எடுத்த அபூர்வ சகோதரர்கள் படத்துக்கும் ஜெமினியின் அபூர்வ சகோதரர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை)

### ராதாவின் அற்புத நடிப்பு

அபூர்வ சகோதரர்களுக்கான கதை- வசனத்தை, ஜெமினி கதை இலாகா தயாரித்தது. சந்திரலேகாவை டைரக்ட் செய்வதாக இருந்து கருத்து வேற்றுமையால் விலகிச் சென்று ஆச்சார்யாவை அழைத்து அபூர்வ சகோதரர்கள் டைரக்ஷன் பொறுப்பை ஒப்படைத்தார் வாசன். (மங்கம்மா சபதத்தை டைரக்ட் செய்தவர் ஆச்சர்யா)



ஜெமினியின் நிரந்தர நடிகரான எம்.கே.ராதா இரட்டை வேடத்தில் நடித்தார். கதாநாயகி பி.பானுமதி. வில்லனாக நாகேந்திரராவ் நடித்தார்.

சண்டைக் காட்சிகளை ஸ்டண்ட் சோமு, சியாம் சுந்தர் ஆகியோர் அமைத்தனர்.

ராஜேஸ்வரராவ், எம்.டி. பார்த்தசாரதி, ஆர்.வைத்தியநாதன் ஆகியோர் இசை அமைத்தனர்.

ஜெமினியின் முந்திய படமான சந்திரலேகா நாலைந்து ஆண்டுகள் தயாரிப்பில் இருந்தது. ஆனால் அபூர்வ சகோதரர்கள், மூன்றே மாதங்களில் தயாராகிவிட்டது.

1949 அக்டோபர் 21 ஆம் திகதி ரிலீஸ் ஆன அபூர்வ சகோதரர்கள், மெகா ஹிட் படமாக அமைந்தது. எம்.கே.ராதாவின் இரட்டை வேட நடிப்பு புதிய பரிணாமத்தை புதிய சிகரத்தைத் தொட்டது.

இதற்கு நிகராக யாராலும் நடிக்க முடியாது என்று அப்போது பத்திரிகைகள் ஒருமனதாக எழுதின.

(பிற்காலத்தில் இரட்டை வேட நடிப்பில் முத்திரை பதித்த எம்.ஜி.ஆர்.....,

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 345

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...மழையில் இருந்து விலகி இருக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறோம்.

காற்று பலமாக வீசும் பொழுது வீட்டிற்குள் இருக்கக் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறோம்.

மிருகங்களிடமிருந்து விலகி நிற்கக் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறோம்.

நான் சொல்கிறேன்.. இந்த பூமியில் பிரபஞ்ச இருப்புத் தன்மையே உங்களுடைய ஒரே சிநேகிதம்.

இந்த பூமியை உணர்ந்து நடப்பது எவ்வளவு அற்புதமான விடயம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நான் என் சிறுவயதில் கல்லூரி நாட்களைத் தவிர, ஒருபோதும் செருப்பை அணிந்ததே கிடையாது. கல்லூரி நாட்களில்கூட அவர்களது விதிமுறைகள் அவ்வாறு இருந்ததால் அணிந்துகொண்டேன்.

வீட்டிலோ அல்லது பள்ளியிலோ அல்லது அலைந்து திரிந்த நாட்களிலோ நான் வெறுமனே வெறும் காலுடன் நடப்பதுதான் வழக்கம்.

இப்பொழுது ஆசிரமத்திலும் பல சமயங்களில் நான் வெறும் காலுடன்தான் நடக்கிறேன்.

ஆனால், என்னைச் சுற்றியுள்ளவர்கள் அன்பினால் கால்கள் புண்ணாகி விடும் என்று சொல்லி செருப்பை அணிவித்து விடுகிறார்கள். நான் அவர்களிடம் கேட்பேன்.



வெறுமனே செருப்பின்றி குறுக்கும் நெடுக்கும் அலைந்த என்னுடைய கால்கள் இப்பொழுது எவ்வாறு புண்ணாகிவிட முடியும்? என்று!

இவற்றையெல்லாம் செய்வதன் மூலம் நீங்கள் உங்களை இயற்கையிலிருந்து முழுமையாக துண்டித்துக் கொண்டு விடுகிறீர்கள்.

பலர் என்னிடம் கேட்கிறார்கள். ஸ்வாமிஜி. பல வருடங்கள் கரடு முரடான பிரதேசங்களில் அலைந்து திரிந்தும் எவ்வாறு உங்கள் பாதங்கள் இவ்வளவு மிருதுவாகவும் வெடிப்பின்றியும் இருக்கிறது! என்று. நான் இப்பொழுது சொல்கிறேன்... நான் ஒருபோதும் என்னை பிரபஞ்ச இருப்புத் தன்மைக்கு அந்நியமாக உணர்ந்ததில்லை.

அதனால்தான் அதுவே உண்மையான காரணம். நான் எப்பொழுதும் என்னை பிரபஞ்ச இருப்புத் தன்மையின் பகுதியாகத்தான் எண்ணுகிறேன். நான் எப்பொழுதும் என்னை இயற்கையைச் சேர்ந்தவனாகத்தான் எண்ணுகிறேன்.

அதனால்தான் நான் ஒரு கவலையுமின்றி எதைப் பற்றிய அச்சமுமின்றி அலைந்து திரிவது வழக்கம்.

வெறுமனே கற்பனை பண்ணிப் பாருங்கள்...

இருண்ட காட்டில் நீங்கள் தனியே கொடிய வன விலங்குகளுடன் உணவின்றி அடுத்தவேளை உணவு எங்கே கிடைக்கும் என்று தெரியாமல் உறங்கக்கூட இடமின்றி வானமே கூரையாக!

எவ்வாறு நீங்கள் இருப்பீர்கள்? முழுவதும் பயத்துடன் இல்லையா?

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

## வாழும் கலைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வாழும் கலை அமைப்பின் வாழும் கலைப்பயிற்சி நாளைய தினம் ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தியாவின் வாழும் கலை ஆச்சிரமத்தில் இருந்து வருகை தந்த ஆசிரியர்களால் இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் 13 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண இருபாலாரும் கலந்து கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் வாழும் கலை அமைப்பு அறிவித்துள்ளது. (இ-5)

# பேஸ்புக் அலுவலகம் மீது மர்மக்கும்பல் தாக்குதல்!

## சுவரில் டிஸ்லைக் வாசகம் பதிவு

(கொழும்பு)

ஜேர்மனியில் உள்ள பேஸ்புக் அலுவலகத்தை மர்ம கும்பல் அடித்து நொறுக்கியதோடு அல்லாமல் "பேஸ்புக் டிஸ்லைக்" என்ற வாசகத்தை சுவற்றில் எழுதி சென்றனர். ஜேர்மனியின் ஹாம்பர்க் நகரில் பேஸ்புக் அலுவலகம் செயற்படுகிறது. இங்கு நேற்றுமுன்தினம் (ஞாயிறு) இரவு கறுப்பு உடையணிந்த சுமார் 20 நபர்கள் நுழைந்து அலுவலக ஜன்னல்களை சூறையாடியதாக புலனாய்வு பொலிஸார் தெரிவித்தனர்.

அதோடு, பேஸ்புக் பனர்களை மறைக்கும்படியாக கறுப்பு மை ஊற்றியும் சுவற்றில் "பேஸ்புக் டிஸ்லைக்" என்று எழுதியதாக அந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தனர்.

இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் ஊழியர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று அலுவலக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மத அடிப்படைத் தன்மையைத் தாண்டி அனைவரும் உலவும் இல்லமாக பேஸ் புக் திகழ்கிறது. இங்கு முஸ்லிம்களுக்கு எப்போதுமே இடமுண்டு என்று பேஸ்புக் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்க் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவில் முஸ்லிம் குடியேற்றத்துக்கு முழுமையாக தடை விதிக்க வேண்டும் என்ற குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் டோனால்டு டிரம்ப்பின் பேச்சைத் தொடர்ந்து மார்க் இவ்வாறு கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# விடுதலையை கோரி நளினி மனு தாக்கல்



(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான நளினி அவரது கணவர் முருகன் மற்றும் சாந்தன், பேரறிவாளன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், ஆகியோருக்கு தூக்கு தண்டனை அளிக்கப்பட்டது.

பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. அவர்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். நளினி ஆயுள் தண்டனை கைதியாக வேலூர் பெண்கள் சிறையில் உள்ளார்.

அவர்களை விடுதலை செய்வது குறித்த அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மத்திய அரசுக்குத்தான் உள்ளது என்று இந்திய உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பு கூறியது. இதனால் விடுதலையை எதிர்பார்த்திருந்த அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவரது சட்டத்தரணிகள் ராதா கிருஷ்ணன், புகழேந்தி, ஆகியோர் வேலூர் சிறையில் நளினியை சந்தித்து பேசினர். பின்னர் அவர்கள் தெரிவிக்கையில்,

20 ஆண்டுகளுக்கு மேல் ஆயுள் தண்டனை அனுபவித்தவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்புச் சட்டம் 161 இன் படி விடுதலையை தடுக்க முடியாது என கூறப்பட்டுள்ளது.

இதன்படி நளினியை விடுதலை செய்ய தமிழக அரசு மற்றும் ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது.

குற்றவியல் நடைமுறை சட்டம் 432 இன் கீழ் தமிழக அரசு முயற்சி செய்தால் ஆளுநர் மூலமாக நளினியை விடுதலை செய்ய முடியும். அதன் அடிப்படையில் தன்னை விடுதலை செய்யக் கோரி நளினி உயர் நீதிமன்றத்தில் புதிய ரிட்மனு தாக்கல் செய்ய உள்ளார் என அவர் மேலும் தெரிவித்தனர். (இ-10)

உயரதிகாரியைத் தாக்கிய

# பொலிஸ் உத்தியோகத்தர் தற்காலிகமாக பணி நீக்கம்

உயரதிகாரியொருவரைத் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். கல்கிஸ்சை பொலிஸில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கல்கிஸ்சை பொலிஸில் பணி யாற்றிய களுபத்திரணகே என்ற பொலிஸ் உத்தியோகத்தரே தனது மேலதிகாரியுடனான வாக்குவாதத்தின் போது அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும், அதனையடுத்து நேற்றுக் காலை முதல் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

கல்கிஸ்சை பொலிஸில் சிறுகுற்றங்கள் தொடர்பான பிரிவின் பொறுப்பதிகாரியே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)



மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூன் அப்துல் கயூமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன டுபாய் விமானத்தில் வைத்து நேற்று சந்தித்துள்ளார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 575

Search for people, places and things | Nagendram Home

மதீசன்

கோழிப் பிரியாணியில கோழி முட்டை வைக்கிறப்போ, ஆட்டுப் பிரியாணியில சின்னதா ஒரு ஆட்டுக்குட்டி வைக்குறது தானே நியாயம்!?

துவே துவேனி



அழகேஸ்வரன்



நதீபன்




கமல்



சர்மிளா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கை கழுவப்படுவார்களா மூத்த ராணுவ அதிகாரிகள்?



இராணுவ உயரதிகாரிகள் விடயத்தில், தீர்க்கமான முடிவை எடுப்பதில், தற்போதைய அரசாங்கம் கடுமையான நெருக்கடி ஒன்றை எதிர்கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் போர் நடந்த காலத்தில், அரசாங்கம் எதிர்கொண்டதை விடவும் சிக்கலான நிலையை இப்போதைய அரசாங்கம் எதிர்கொண்டிருக்கிறது.

உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் நியமன விடயத்தில் முன்னர் இராணுவ மட்டத்தில் தான், சலசலப்புகளையும் எதிர்ப்புகளையும் முன்னைய அரசாங்கங்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

இப்போது, இத்தகைய நியமன விடயங்களில், புற அழுத்தங்களையும் அரசாங்கம் சந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக மனித உரிமைகள் சார்ந்த விடயங்களில் அரசாங்கம் இத்தகைய புற அழுத்தங்களை சந்திக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேவேளை, திடீரென வீங்கிப் பருத்த இராணுவத்தின் தாக்கத்தை இப்போதுதான் இலங்கை உணரவும் தொடங்கியிருக்கிறது. இதனால் இராணுவத்தின் உயர்மட்ட நியமனங்கள் சிக்கலானதாக மாறி வருவதுடன், அவ்வப்போது சர்ச்சைகளையும் ஏற்படுத்தி வருகிறது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இராணுவத் தளபதி நியமனத்தில் அதிகம் சர்ச்சைகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கவில்லை. ஏனென்றால், அவர் அதிகளவில் போர் நடவடிக்கைகளில் முன்னிலை நட்சத்திரத் தளபதியாக இருந்திருக்கவில்லை.

ஆனால், இராணுவத் தலைமை அதிகாரியாக **மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ** நியமிக்கப்பட்ட போது, கடுமையான விமர்சனங்களை சர்வதேச அளவில் சந்திக்க நேரிட்டது.

இறுதிப் போரில் பங்கெடுத்த 57 ஆவது பிரிவுக்குத் தலைமை தாங்கியவர் அவர்.

பெரியதம்பனை, பெரிய பண்டிவிரிச்சானில் தொடங்கி, முள்ளிவாய்க்கால் வரை அவர் இறுதிக் கட்டப் போரில், 57 ஆவது பிரிவின கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்களுக்கு இவரும் பொறுப்பாக்கப்பட வேணடியவர் என்ற குற்றச்சாட்டு, பரவலாகவே எழுப்பப்பட்டு வருகிறது.

இதனை அடிப்படையாக வைத்து சுவிட்சர்லாந்து நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது. அதில் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ"க்குப் பாதகமான தீர்ப்பும் அறிவிக்கப்பட்டது.

எனவேதான், இத்தகைய ஒருவரை இராணுவத்தின் உயர் பதவிக்கு நியமிப்பது பொருத்தமற்றது என்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன.

இந்தநிலையில், இலங்கை இராணுவம் இப்போது முக்கியமான காலகட்டம் ஒன்றுக்குள் நுழைந்திருக்கிறது.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விசாரணைப் பொறிமுறை ஒன்றை எப்படியாவது எதிர்கொண்டாக வேண்டியது இந்தக் காலகட்டத்தில் முக்கியமானதொரு விடயம்.

அதேவேளை, போரின் இறுதிக் கட்டத்தில் முக்கிய பங்காற்றிய- வெற்றியைத் தீர்மானிப்பதில் கருவிகளாகச் செயற்பட்ட அதிகாரிகளை உயர் பதவிகளுக்கு நியமிப்பதில் சிக்கலகளையும் அது எதிர்கொண்டுள்ளது.

தற்போது இராணுவத்தில் உள்ள மூத்த அதிகாரிகள் வரிசையிலுள்ள பெரும்பாலானோர், போர் முனையில் படைப் பிரிவுகளை வழி நடத்தியவர்களாகவே இருக்கின்றனர்.

இப்படியான நிலையில், போர் முனைப் பணிக்காக அவர்களை கௌரவிப்பதா- அல்லது போர்க் குற்றங்களுக்காக அவர்களை விசாரணை செய்வதா என்ற கேள்வி அரசாங்கத்துக்குள் எழுந்திருக்கிறது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த இரண்டையும் செய்ய வேண்டிய நிலைதான் இருக்கிறது.

ஏனென்றால், போர்க்குற்ற விசாரணையை நடத்தாது போனால், சர்வதேச சமூகம் கழுத்தைப் பிடித்து நெரிக்கும்.

போர்முனையில் முக்கிய பங்காற்றிய அதிகாரிகளை தட்டிக்கழித்தால், அவர்கள் மட்டுமன்றி, சிங்கள மக்களும், சிங்கள அரசியல்வாதிகளும் வெறுப்படைவார்கள்.

இராணுவத்தினர் மத்தியில் இத்தகைய வெறுப்பு ஏற்படுகிறதோ இல்லையோ, அவர்களை அந்த நிலைக்கு கொண்டு செல்ல மகிந்த ராஜபக்ஷ அணி தயாராகவே இருக்கிறது.

ஏற்கனவே, பாராளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ, இறுதிப் போரில் முக்கிய பணியாற்றிய இராணுவ அதிகாரிகள் பலரை அரசாங்கம் ஓய்வில் அனுப்பப் போவதாக விசனம் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு செய்யக்கூடாதென்றும், போர்க்குற்ற விசாரணை நடக்கவுள்ள சூழலில், அது அவரகளைப் பாதுகாப்பற்ற நிலைக்குள் தள்ளிவிடும் என்றும், அவர்களுக்கு நிறுவன ரீதியான பாதுகாப்புக் கிடைக்காது போகும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இராணுவ சேவையில் இருக்கும் படை அதிகாரிகள், போர்க்குற்ற விசாரணையை எதிர்கொண்டால் அவர்களைக் காப்பாற்ற அரசாங்கம் துணை நிற்கும் என்பதைதான் மகிந்த ராஜபக்ஷவின் கருத்து எடுத்துக் காட்டியது.

இதேபோன்ற கருத்துக்கள் அரசாங்க தரப்பில் இருந்தும் வெளியாகியிருந்தன.

இதனால் போர்க்குற்ற விசாரணைகளின் நம்பகத்தன்மை, நடுநிலைமை குறித்த சந்தேகங்கள் இருப்பது இயல்பே.

மகிந்த ராஜபக்ஷ கூறியது போன்று, அரசாங்கம், பல மூத்த படை அதிகாரிகளை ஓய்வில் அனுப்பத் திட்டமிட்டுள்ளது உண்மையே. அதற்குத் தனியே போர்க்குற்ற விசாரணை மட்டும் காரணமல்ல.

வீங்கிப் பருத்துப் போயிருக்கும் இராணுவக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தும் தேவையும் அதற்கு ஒரு காரணம்.

மேஜர் ஜெனரல் பதவியில் உள்ள இராணுவ அதிகாரிகள் 55 வயதில் ஓய்வுபெற வேண்டும் என்பது இராணுவ சட்டம்: இந்தச் சட்டம் கடந்த காலங்களில் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அரசியல் செல்வாக்குப் பெற்ற இராணுவ அதிகாரிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், நட்சத்திரத் தளபதிகளாக இருப்பவரகள் போர்முனைக்கு தேவைப் பட்டதாலும், அனுபவம் மிக்க அதிகாரிகளின் சேவை இராணுவத்துக்கும் தேவைப்பட்டதாலும், பல தளபதிகள், 62 வயது வரைகூட இராணுவத்துக்குள் நின்றுபிடித்தனர்.

மேஜர் ஜெனரல்கள் பலரும் 55 வயதில் ஓய்வுபெறத் தவறியதால், கடந்த காலங்களில், பிரிகேடியர், கேர்ணல், லெப். கேணல் போன்ற பதவிகளிலிருந்து அதிகாரிகள், மேல் வரிசைக்கு வர முடியாமல், ஓய்வுபெற நேரிட்டது.

இது இராணுவ அதிகாரிகள் மத்தியில் விரக்தியையும், விசனத்தையும் நீண்டகாலமாகவே ஏற்படுத்தி வந்தது.

இந்தநிலைக்கு முடிவுகட்டவும், இராணுவத்தை இளம் இரத்தம் கொண்டதாகப் பேணவும், 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்ற முடிவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

முக்கிய தேவைகள் இருந்தால மட்டும், மேஜர் ஜெனரல்களுக்கு 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு அளிக்கப்படும் என்று அவர் கூறியிருக்கிறார். இதுவும் தற்போது அதிகம் பேசப்படும், இராணுவ மறுசீரமைப்புத் திட்டங்களில் ஒன்றுதான்.

இதற்கமைய, 2015 டிசெம்பருக்கும், 2016 டிசெம்பருக்கும் இடைப்பட்ட ஒரு ஆண்டு காலத்துக்குள், கிட்டத்தட்ட 25 மேஜர் ஜெனரல்கள், 55 வயதை எட்டி ஓய்வுபெற வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு ஓய்வுபெற வேண்டிய இராணுவ அதிகாரிகளில், இறுதிக்கட்டப் போரில் முக்கியமான பிரிவுகளுக்குத் தலைமை தாங்கியவர்களும் அடங்கியுள்ளனர்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் வரும் 25 ஆம் திகதியுடனும், மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த அடுத்த ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதியுடனும், மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன அடுத்த ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதியுடனும், மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா அடுத்த ஆண்டு மே 04 ஆம் திகதியுடனும் ஓய்வுபெற வேண்டியிருக்கும்.

மேஜர் ஜெனரல்களை 55 வயதில் ஓய்வுபெற வைக்கும் திட்டத்தை, இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம், அரசாங்கமும் சில சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். இறுதிப்போர் தொடர்பான குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ள அதிகாரிகளை, உயர் பதவிகளுக்கு அண்ட விடாமல் தடுக்க முடியும்.

அது, குற்றம்சாட்டப்பட்டவர்களின் சார்பாக அரசாங்கம் செயற்படுகிறது என்ற கருத்து ஏற்படுவதை தடுக்கவும், சர்வதேச அழுத்தங்களிலிருந்து பாதுகாப்புத் தேடவும் அரசாங்கத்துக்கு உதவும்.

ஆனால், இந்த விவகாரத்தை, வைத்து உசுப்பேற்றும் மகிந்த ராஜபக்ஷ அணியினர், 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்கி அவர்களுக்கு போர்க்குற்ற விசாரணையிலிருந்து நிறுவன ரீதியான பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியுள்ளமையானது அரசாங்கத்துக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் நாசூக்காக கையாண்ட விடயத்தை, மகிந்த ராஜபக்ஷ குழப்பிவிட்டார்.

இந்தநிலையில், 55 வயதில் ஓய்வுபெற வைக்கும் திட்டத்தை அரசாங்கம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தினால், அது போர்க்குற்ற விசாரணையை எதிர்கொள்ளும் படையினரை அரசாங்கம் கையை விட்டு விட்டது என்ற குற்றச்சாட்டை எதிர்கொள்ள நேரிடும்.

அதேவேளை. அவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கினால், போர்க்குற்ற விசாரணையிலிருந்து பாதுகாப்பளிக்கிறது என்ற கருத்தை ஏற்படுத்தும். இந்தநிலையில், வரும் 25 ஆம் திகதி என்பது முக்கியமான ஒரு நாளாக இருக்கப் போகிறது.

ஏனென்றால் அதுதான் பெரும் சர்ச்சைகளில் சிக்கியுள்ள மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஓய்வுபெற வேண்டிய நாள்.

அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாமல் ஓய்வுபெற வைக்கப்படுவார் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதேவேளை, அடுத்த இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் நியமிக்கப்படவுள்ளதாக்வும் சில செய்திகள் வெளியாகின. இதில் எது உண்மை என்பதை இந்த ஆண்டின் இறுதி வாரமே தீர்மானிப்பதாக அமையும்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் விடயத்தில் எடுக்கப் போகும், முடிவு எத்தகையதாக இருந்தாலும், அது அரசாங்கத்துக்கு விமர்சன ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

**சுபத்ரா**

## தேசிய உற்பத்தி திறன் விருது

# இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றுள்ளது

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தேசிய உற்பத்தி திறன் விருது போட்டியில் திணைக்களங்கள் பிரிவில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இரண்டாமிடம் பெற்றுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முதற்தடவையாக இப்போட்டியில் பங்குபற்றி சகல அலுவலர்களினதும் ஒன்றுபட்ட கடின உழைப்பு மூலம் முதற்தடவையிலேயே தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு முப்பது ஆண்டுகள் நிறைவினை கொண்டாடவுள்ள இவ்வேளையில் இவ்விருது திணைக்களத்தின் எதிர்கால செயற்பாடுகளிற்கு ஊக்கத்தை வழங்குகின்றது. மேலும் திணைக்களம் வாடிக்கையாளருக்கான சேவைத் தரத்தை மேம்படுத்தி ISO சர்வதேச தரச் சான்றிதழை பெறுவதற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளை மேற் கொண்டுள்ளது.

அலுவலர் அர்ப்பணிப்பு, தலைமைத்துவம், அலுவலக முகாமை, பொதுமக்கள் பட்டயம் அமுலாக்கம், சேவை வழங்கல் எனப் பல்வேறு விடயங்கள் பரிசீலிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டன. இதனடிப்படையிலேயே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றுள்ளது.

தேசிய உற்பத்தி திறன் விருது வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (இ

## தெனியாயவில் சடலம் மீட்பு

தெனியாய ஊறுபொக்க மேரந்தெனிய பகுதியில் கிணறில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஊறுபொக்க பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து நேற்று மாலை 6.00 மணியளவில் சடலம் கிணற்றில் இருந்து மீட்கபபட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அப்பிரதேசத்தை சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையாகிய 50 வயதுடைய யக்காவிட சுசந்த என்பவராவார்.

தண்ணீர் வராததால் கிணற்றை பிரதேசவாசி ஒருவர் அவதானித்த போதே சடலம் கிணற்றில் கிடப்பது தெரிய வந்துள்ளது. (இ-10)

# செய்தித் துளிகள்

## 33 கைதி மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றம்

(கொழும்பு)

தற்போது நடைபெறும் ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 33 சிறைக் கைதிகள் தோற்றி வருவதாக சிறைச்சாலை திணைகளம் தெரிவித்துள்ளது.

இக் கைதிகள் பரீட்சை எழுதும் பிரதான நிலையம் கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

புலிச் சந்தேக நபர்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 தமிழ் மாணவர்கள் இங்கு தமிழ் மொழியில் பரீட்சை எழுதுகின்றனர். களுத்துறை சிறைச்சாலையில் 7 மாணவர்களும், வட்டரக்க திறந்த வெளிச் சிறைச்சாலையின் 11 மாணவர்களும் இம்முறை பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

பதுளை சிறைச்சாலையன் கைதி மாணவர் ஒரு வர நீதிமன்ற உத்தரவின் பேரில் அப்பகுதி பாடசாலை ஒன்றில் பரீட்சை எழுதுவதாக சிறைச்சாலை திணைகளம் தெரிவித்துள்ளது. (இ-10)

## கொழும்பின் வர்த்தக நகராக போட்சிட்டி விளங்கும்-ஆளுநர்

“போட்சிட்டி” இன்னும் 10 வருட காலப்பகுதியில் கொழும்பின் வர்த்தக நகராக விளங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் இதனை தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் 150வது நிறைவு நிகழ்வில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், கொழும்பின் போட்சிட்டி கொழும்பையும் இலங்கையையும் சர்வதேசத்துடன் இணைக்கும் சங்கிலியாக விளங்கும் என்று தெரிவித்தார்.

இந்தநிலையில் தற்போது குறித்த போட்சிட்டி அமைந்துள்ள நிலத்தில் உரிமை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனவே இது தொடர்பில் அரசாங்கம் விரைவில் சட்டமூலம் ஒன்றை கொண்டு வரும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-10)

## தடயம் பட்டாவுக்கு தடைவிதிப்பு

தடயம் பட்டா என்று பெயரிடப்பட்டுள்ள சோயா மீட், தொலைக்காட்சி விளம்பரத்துக்கு கொட்டுவ நீதவான் நீதிமன்றத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொலைக்காட்சி விளம்பரத்தில் பொலிஸ் அனுமதியின்றி, பொலிஸ் சீருடையில் இருவர் நடிக்கின்றனர். பொலிஸ் சீருடையை முறைகேடான முறையில் பயன்படுத்தல் தொடரபில், டிசெம்பர் மாதம 2 ஆம் திகதியன்று பொலிஸ் ஊடகப பேச்சாளரினால் கோட்டை கொட்டுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடரபிலான விசாரணைகள் நிறைவடையும் வரையிலும் அந்த விளம்பரத்தை ஒளிபரப்பவேண்டாம் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## கிழக்கு பல்கலையின் துணைவேந்தர் யார்?

### ஜனாதிபதியின் கையில் முடிவு

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை கூட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வெற்றிடத்திற்கு கிழக்கு பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களால் மூவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

பேரவை உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் அடிப்படையில் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம் முதலாவதாகவும் கலாநிதி சந்திரா மகேந்திரநாதன் இரண்டாவது இடத்திலும் கலாநிதி பி.சிவராஜா மூன்றாவது இடத்திலும் முன்மொழியப்பட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களின் வாக்களிப்பு முடிவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் பின்னர் துணைவேந்தர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது பற்றி ஜனாதிபதியினால் முடிவெடுக்கப்படும். (இ

## சட்டவிரோத கருக்கலைப்புக்கு உடந்தை! வைத்தியருடன் பொலிஸாரும் கைதானார்

சட்டவிரோத கருக்கலைப்பு சம்பவம் ஒன்று தொடர்பாக மருத்துவருக்கு உடந்தையாக செயற்பட்ட இரண்டு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பிரதேசத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

தெற்கு அதிவேகப் பாதையின் பாணந்துறையை அண்மித்து அமைந்திருக்கும் கெலனிகம பொலிஸ் சோதனைச் சாவடியில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தமக்கு பழக்கமான திருமணமாகாத 24 வயது யுவதியொருவர் கர்ப்பமுற்றிருந்த நிலையில், அறிமுகமான மருத்துவர் ஒரு வரிடம் அழைத்துசென்று கருக்கலைப்புக்கு உடந்தையாக செயற்பட்டுள்ளனர்.

இதுகுறித்த தகவல் வெளியான நிலையில் இரண்டு பொலிஸாரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-10)

## பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படும்

இலங்கையில் இனி வரும் காலங்களில் பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என உள்நாட்டு பால்மா இறக்கு மதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகளவான வரி மற்றும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது.

வருடமொன்றுக்கு 5800 தொன் பால்மா தேவைப்படுகின்றது. இந்நிலையில் 50,000 தொன் பால்மா இறக்குமதி செய்யப்படுவதோடு ஏனையவை உள்ளூர் தயாரிப்புகளாக உள்ளன.

பால்மா தட்டுப்பாடு தொடர்பானகலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு நிதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டபோதும் அவரிடம் இருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்காவிடில் வேறு வழியின்றி இறக்குமதியை நிறுத்த வேண்டும். இல்லாவிடில் டைக்கிங் தொழிற்சாலையை மூட வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவித்தனர். இல்லையெனில் பாரிய நட்டம் ஏற்படும் என தெரிவித் தனர். (இ


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா:53செவ் 8 ல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/2627 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 52செவ் 8 ல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:NAITA/தாதி<br>தொ.இ: G/3601 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 11செவ் 2 ல்<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்:BIT/அரசதொழில்<br>தொ.இ: B/2651 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 25செவ் 1 ல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BSCIT/ஆசிரியர்<br>தொ.இ: G/3610 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 09<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:QS/புடுணை<br>தொ.இ: B/2700 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 18சூரிசெவ் 12 ல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/கணக்காளர்<br>தொ.இ: G/3612 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 23செவ் 7 ல்<br>உயரம்: 5’6’’<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/2707 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32செவ் 12 ல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3618 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )


## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் 650 கிராம் கஞ்சாவுடன் 45 வயதுடைய நபரொருவரை, நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாறை விசேட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை விசேட போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து, அக்கரைப்பற்று இலங்கை போக்குவரத்து சாலைக்கு அருகாமையில குறித்த நபர் கஞ்சாவை எடுத்து வந்த போது விசேட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் சுற்றிவளைத்து கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 650 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை, அக்கரைபற்று நீதிமன்றத்தில் ஆஜரபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## நாலக உள்ளிட்ட இருவருக்கு மறியல்

நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின முன்னாள் தலைவர் நாலக கொடஹேவா, உட்பட மூவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.



குறித்த நபர்கள், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் கடந்த 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற 5 மில்லியன் ரூபாய் மோசடி தொடர்பிலேயே கைது செய்யப்பட்டு நேற்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கபபட்டிருந்தனர். இந நிலையிலேயே அவர்களது விளக்கமறியல் நேற்று மீண்டும் நீடிக்கபபட்டுள்ளது. (இ-10)

# 24.6 சதவீதமானோரிடம் கணனி

நாட்டில் 24.6 சதவீத குடித்தனங்கள் ஒரு மேசைக் கணினி அல்லது மடிக்கணனியைக் கொண்டிருப்பதுடன் 67 சதவீதமான குடித்தனங்கள் கடந்த ஐந்தாண்டினுள் (2010 -2014) தமது முதலாவது கணனியை கொள்வனவு செய்துள்ளனர் என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்க தெரிவித்துள்ளார்.

கணனி அறிவு அளவீடு 2015 இனை அடிப்படையாகக் கொண்டு, தொகை மதிப்பு மற்றும் புள்ளி வபரத்திணைக்களம்மேற்கொண்ட 2015 இன் முதல் அரையாண்டுக்குரிய வயது 5 - 69 இற்கு இடைப்பட்ட நபர்களின் கணனி அறிவு மற்றும் குடித்தனங்களின் பண்புகள் தொடர்பான புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வருடம் பூராகவும் நடத்தப்படும் இம்மாதிரி அளவீடானது 25,000 குடித்தனங்களில் தொடர்ச்சியாக 12 மாதங்கள் மேற்கொள்ளப்பட்டது.

கணனியைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளும் ஆற்றல் "கணினி அறிவு" என வரையறுக்கப்படுகிறது. ஆண்களின்கணனி அறிவானது (28.7%), பெண்களின் கணினி அறிவைவிட (25.7%) அதிகமாகக் காணப்படுகிறது.

மாகாணங்களுக்கிடையே உச்சமட்ட கணனி அறிவு மேல் மாகாணத்தில் (38.3%) காணப்படுவதுடன் குறைந்தளவானது (12.8%) கிழக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளது. (இ-10)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 14.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.03 | 145.26 |
| பவுண்ட் | பிரிட்டன் | 213.50 | 221.42 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.72 | 160.12 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.23 | 148.41 |
| டொலர் | கனடா | 101.86 | 106.27 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.21 | 105.13 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.37 | 103.39 |
| ரூபா | இந்தியா | 2.1337 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.0223 |
| குவைத் | டினார் | 472.4527 |
| ஓமான் | ரியால் | 372.1745 |
| கட்டார் | ரியால் | 39.3480 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.1906 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.0090 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 130 | 140-200 | 140 | 130 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 65 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 900 | 550 | 500 | 700 | 600 | 800 |
| தக்காளி | 220 | 200 | 150 | 200-240 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 15-30 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 160 | 100 | 80 | 160 | 100 |
| கரட் | 180 | 200 | — | 200-320 | 280 | 200 |
| பூசணி | 60 | 40 | 30-40 | 50 | 60 | 40 |
| புடோல் | 120 | 100 | 80 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 120 | 100 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 85 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 300-400 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 90 | 160 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 120 | 70 |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 260-320 | 240 | 250 |
| லீக்ஸ் | 150 | 160 | 140 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | — | — | — | 200 | 150 |
| கறிமிளகாய் | 300 | — | — | 350 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 400 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | 200 | 200 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 100 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 30 | 50 | — | 40 |
| தேசிக்காய் | 150 | 120-160 | 100 | 200 | 160 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 20-40 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | 180 | 250 | 180 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 160 | — | — | — | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 70 | 120 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 30 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | — | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | 60 | 40 | 50 | 80 | 40 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## தமிழீழத்துக்கு ஆதரவாக அமெரிக்காவில் உலகத் தமிழர் மாநாடு 53

....அமிர்தலிங்கம்

இலங்கை தமிழர் விடுதலை முன்னணி தலைவரான அமிர்தலிங்கம் கூறியதாவது:-

இலங்கை அரசுடன் நாங்கள் பேச்சுவார்த்தை தொடங்கியதன் நோக்கம், இலங்கையில் ரத்தக்களரி நிற்க வேண்டும்; பயந்து வாழும் தமிழ் மக்களுக்கு நிம்மதியைத் தரவேண்டும்; மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை அதிகமாக்கி, தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான்.

தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் வெற்றி பெற்றோம். தமிழ் ஈழக் கோரிக்கைக்கு ஆதரவாகத்தான், எங்களைப் பாராளு மன்றத்துக்கு மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். எனவே, தமிழ் ஈழக் கோரிக்கையை நாங்கள் கைவிடவோ, ஒத்திவைக்கவோ மாட்டோம்.

நாங்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்று அரசாங்கம் விரும்பியது. ஆனால் நாங்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. தமிழ் ஈழம்தான் எங்கள் லட்சியம் என்று உறுதியாகக் கூறிவிட்டோம்.

உலகின் பல பாகங்களில் இருந்து இங்கு வந்து கூடியிருக்கிறோம். இலங்கைத் தமிழர்கள் மீது வெளிநாடுகள் வெறும் அனுதாபம் தெரிவித்தால் போதாது. தமிழ் ஈழத்தை ஒன்றிரண்டு நாடுகளாவது அங்கீகரிக்க வேண்டும். அதற்கு நாம் பாடுபடவேண்டும்.

இவ்வாறு அமிர்தலிங்கம் கூறினார்.

பழ.நெடுமாறன்

தமிழகத்திலிருந்து சென்று மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய காமராஜ் காங்கிரஸ் தலைவர் பழ.நெடுமாறன் கூறியதாவது:-


தமிழ் ஈழம் அமைய வேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. உலகம்



இரா.சனார்த்தனம்

முழுவதிலும் உள்ள தமிழர்கள் தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களை இனப்படுகொலை செய்வதில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. சர்வதேச நிர்ப்பந்தம்



பழ.நெடுமாறன்

ஏற்பட்டதால் இலங்கை அரசு பணியும். அதற்கு நாம் பாடுபட வேண்டும்.

தமிழ்நாட்டில் 41/2 கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். இதுதவிர 32 நாடுகளில் தமிழர்கள் சிதறிக் கிடக்கிறார்கள்.

மொத்த தமிழர்கள் எண்ணிக்கை 9 கோடி. இந்த 9 கோடி தமிழர்கிளன் ஆதரவையும் ஒன்றுதிரட்ட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள், கட்சி வேறுபாடுகளை மறந்து சுதந்திர தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களை ஆதரிக்குமாறு மத்திய அரசைத் தமிழர்கள் ஒன்றுபட்டு நிர்ப்பந்திக்க வேண்டும்.

இவ்வாறு பழ.நெடுமாறன் கூறினார்.

இரா.சனார்த்தனம்

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம் பேசுகையில் இலங்கைத் தமிழர்கள் தங்கள் வரலாற்றை அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக யாழ்ப்பாணம் நூல் நிலையத்தையே சிங்களவர்கள் எரித்துவிட்டார்கள். கடவுளிடம் சென்று தமிழர்கள் முறையிடுகிறார்கள் என்பதற்காக கோவில்களை எல்லாம் கொளுத்துகிறார்கள். இதற்கு கொடுமைகளுக்கெல்லாம் தீர்வு தமிழ் ஈழம்தான் என்றார்.

இலங்கைத் தமிழர் தலைவர்களில் ஒருவரான ஈழவேந்தன் பேசுகையில் வெள்ளையர், போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் சுமார் 200 ஆண்டுகள் இலங்கையை ஆண்டனர்.

அப்போது கூட அவர்கள் தமிழ் சமுதாயத்தை அழிக்க முற்படவில்லை. ஆனால் 33 ஆண்டுகால சிங்களவர் ஆட்சியில் தமிழ் சமுதாயம் அழிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்.


அருகோ

தமிழ் ஈழ தோழமைக் கழகத்தின் தலைவரான அரு.கோபாலன் (அருகோ) பேசுகையில், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்க வேண்டும். இலங்கைப் பிரச்சினை தீர ஒரே வழி தமிழீழம்தான் என்று குறிப்பிட்டார்.

தங்கபாலு

தமிழக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான கே.வி. தங்கபாலு பேசுகையில் உலகின் எந்த மூலையில் எந்த ஒரு சமுதாயமும் ஒடுக்கப்பட்டாலும் அதை இந்தியா ஒருபோதும் அனுமதித்ததில்லை. இலங்கைத் தமிழர்கள் நசுக்கப்படுவதை இந்தியா பார்த்துக்கொண்டிராது என்றார்.

இலங்கைத் தமிழர் தலைவர்களில் ஒருவரான மு.ந.சிவசிதம்பரம் பேசுகையில் இலங்கைத் தமிழர்கள் வாழ வேண்டுமானால் தமிழ் ஈழத்தைத் தவிர மாற்று வழியில்லை என்றார். (தொடரும்)



உலகத் தமிழர் மாநாட்டில் ஏற்றப்பட்ட தமிழ் ஈழக்கொடி

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம். – பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அரசின் மாயமான்கள் துள்ளி வரலாம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி நாம் அனைவரும் பேசித் கொள்கின்றோம். அதேநேரம் தமிழ் மக்கள் வேறுவிதமான கஷ்டங்களை அனுபவித்தால் இனப்பிரச்சினை ஒன்று இருப்பதாக அவர்கள் உணர மாட்டார்கள் என்ற அடிப்படையில், இனப்பிரச்சினைக்கான தீர்வை வலுக்குறைப்புச் செய்வதில் அரசு தீவிரமாக உள்ளது.

அதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தை நலினப்படுத்தும் வகையில் புதுப்புதுக் குழப்பங்களைக் கொண்டு வருவதிலும் அரசு தீவிரமாக உள்ளது.

இந்த இராஜதந்திரம் இன்று நேற்று அல்ல நீண்டகாலமாக இலங்கை ஆட்சியாளர்களால் பிரயோகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

எந்தையும் தாயும் அவர் முந்தையரும் வாழ்ந்த நிலத்தில் இருந்து எங்களைத் துரத்துவது; 20 ஆண்டுகளுக்கு மேலாக அதை படைத்தரப்பின் கையில் வைத்திருப்பது; பின்னர் மீள்குடியேற்றம் என்ற பெயரில், எல்லாம் அழிக்கப்பட்ட எங்கள் மண்ணை வெறுமையாக எங்களிடம் ஒப்படைப்பது. இதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்படுவதாக காட்டுவது என்ற தொடர் நாடகத்துக்கு இங்கு குறைவே இல்லை.

ஆழ்கடலில் மீன்பிடித்து வந்த எங்கள் கடற்தொழிலாளர்களை கடலுக்குச் செல்லாதே என்று தடுப்பது. ஐயா! கடற்தொழிலாளர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன என்று நாம் கெஞ்ச, மேலாடை எதுவுமின்றி கோவணத்துடன் மட்டும் கடலுக்குச் சென்று தொழில் செய்யலாம். ஆழ்கடலை எட்டியும் பார்க்கக்கூடாது எனக் கண்டிப்பான உத்தரவு பிறப்பிப்பது உட்பட,

இருந்ததை இல்லாமல் செய்வது; இல்லாமல் செய்ததை தந்தது போல காட்டுவது போன்ற திருக்கூத்துக்கள் நம் மண்ணில் அரங்கேறியவண்ணம் உள்ளன.

ஆக, தாமே உருவாக்கிய பிரச்சினையை தமிழர்களின் பிரச்சினையாகக் காட்டி அதை தீர்த்து வைப்பது போல பாசாங்கு செய்கின்ற இராஜதந்திரத்தையே இலங்கை அரசுகள் தொழிலாகக் கொண்டதால், இன்னமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்துக்குக் கிட்டவும் இலங்கை ஆட்சியாளர்கள் வரவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பதில் எங்களிடம் ஏதேனும் தீர்வு வரைபுகள் உண்டா? என்றால் அதற்கான விடை இல்லை என்பதாகவே இருக்கும்.

அப்படியானால் இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வாக சில மாயமான்களை ஏவி விடும். மாயமானே! நிஜமானது என்று நம்புகின்றவர்கள் நம்மிடம் இருந்தால் முடிவு அசோக வனச் சிறையாகவே இருக்கும். சிறை மீட்க இராமபூமி மைந்தர்கள் வரவே மாட்டார்கள்.

ஆகையால் இலங்கை அரசு ஏவி விடுகின்ற புதுப்புது தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்ற அதேநேரம், எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன? என்பதை அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் ஒன்று கூடி வரையறை செய்து, பொது மக்களின் பார்வைக்கு அதனைச் சமர்ப்பித்து-அங்கீகாரம் பெற்ற ஒரு முழுமையான தீர்வு வரைபை நாம் தயார் செய்ய வேண்டும்.

அதன் பின்னர் சாட்சாத் ஈஸ்வரன் வந்தாலும் அதுவே எங்களுக்கான தீர்வு என்பதை உறுதி படக் கூற முடியும்.

இதற்கான ஏற்பாடுகளை புத்திஜீவிகளும் சிவில் சமூக அமைப்புகளும் செய்வது காலத்தின் கட்டாய பணியாகும்.

# பட்ஜெட் 3ஆம் வாசிப்பு வாக்கெடுப்பில் ரெலோ அமைப்பு பங்கேற்காது?

## செல்வம் எம்.பி உறுதி

(மட்டக்களப்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத வரை வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று அக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரெலோவின் மட்டக்களப்பு மாவட்ட பொதுக்கூட்டத்தை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது தமிழ்த தேசியக் கூட்டமைப்பு அதற்கு ஆதரவளித்தது. அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கே இந்த ஆதரவை வழங்கினோம். அரசாங்கம் தமிழர்களுக்கு எதனையும் வழங்கமாட்டார்கள் என்ற நிலைவரும் போது, சர்வதேச சமூகத்திடம் நியாயமான கோரிக்கையினை முறையிடும் நிலையினை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே அதனை ஆதரித்தோம்.

ஆனால், தமிழ் அரசியல் கைதிகளின விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக கப்படாவிட்டால் மூன்றாவது வாசிப்பில நடுநிலை வகிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை பொதுக்குழ கூட்டத்தில் ரெலோ எடுத்துள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடமும் கூறியுள்ளோம். இதனால் வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் ரெலோ வாக்களிக்காது என்றார். (எ-12)

## இராணுவ அதிகாரிக்கு எதிராக வழக்கு!

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்காக ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் பொய் சாட்சி கூறிய ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரலுக்கு எதிராக வழக்கு தாக்கல் செயயப்பட்டுள்ளது.

பாரிய ஊழல்,மோசடிகள் குறித்து விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் பொது முகாமையாளரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தரவுக்கு எதிராகவே கறுவாத்தோட்டம் பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு தொடர்ந்துள்ளனர்.(எ-11)

## அமைச்சர் மனோவுடன் தூதுவர் டேவிட் சந்திப்பு



(கொழும்பு)

தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசனை, இலங்கைக்கான ஐரோப்பிய யூனியன் தூதுவர் டேவிட் டெலி சந்தித்து உரையாடியுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பு தேசிய கலந்துரையாடல் அமைச்சில் நடைபெற்றது. தூதுவருடன் ஐரோப்பிய யூனியனின் தெற்காசியாவுக்கான தலைமை அதிகாரி ஹான்ஸ் பார்ன ஹாமர், ஐரோப்பிய யூனியனின் அபிவிருத்திக்கான தலைமை அதிகாரி லிபுஸ் சொக்போவா ஆகியோரும் சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

இனாங்களுக்கு மத்தியில் தேசிய சக வாழ்வு, மும்மொழி கொள்கை அடிப்படையில் மொழியுரிமையை உறுதிப்படுத்துவது மற்றும் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சுக்கான உத்தேச ஐரோப்பிய யூனியனின் உதவிகள் ஆகியவை பற்றி கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (எ-11)

# 23 இலங்கை அகதிகள் இன்று நாடு திரும்பவுள்ளனர்

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிபபு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் வழிகாட்டலுடனும் 23 இலங்கை தமிழ் அகதிகள் தமிழ் நாடு இந்தியாவிலிருந்து இன்று 15-ம் திகதி இலங்கையை வந்த டையவுள்ளதாக அமைச்சின் செயலாளர் வே. சிவ ஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75 அமெரிக்க டொலர்களும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும், உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப் படுகின்றது எனஅமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (இ-10)

# சீருடை வழங்கலுக்கான வழங்குநர்களை பதிதல்

06.12.2015ஆம் திகதிய விளம்பரத்தில் பாடசாலைகளில் கூப்பன் அட்டையிலான சீருடைத்துணி வழங்கலுக்காக குறிப்பிட்ட வழங்குநர்களுக்கு மேலதிகமாக பின்வரும் வழங்குநர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ, 51, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம், திருமாவன் பான்சி புடைவையகம், கே.கே. எஸ். வீதி கோண்டாவில், மலர் ரெக்ஸ்ரைல்ஸ், இல.18, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்;நியூ சீமாட்டி, 129, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வலி.கிழக்கு தென்பகுதி, ப.நோ. கூ.சங்கம், நீர்வேலி; சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்., இல.158, மின்சார நிலைய வீதி, நவீன சந்தை , யாழ்ப்பாணம்; தருசன் ரெக்ஸ், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்; வேணுகா ரெக்ஸ், இல. 199, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்; கலைவாணி ஆடையகம்,இல.151, நவீன சந்தை, யாழ்ப்பாணம்; நல்லூர் ப.நோ. கூ.சங்கம், ஆடியபாதம் வீதி, திரு நெல்வேலி; தனம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், இல.22A, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்; ஆல் சிலோன் டிஸ்டி பியூட்டர்ஸ், இல.212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்; இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ், இல.105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்; துளசி பான்சி மல்ரி சென்ரர், பருத்தித்துறை வீதி,அச்சுவேலி பஸ் நிலையம்; காவேரி சில்க்ஸ் இல.48, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்; ஜீசஸ் தையல் நிலையம், ஆவரங்கால், புத்தூர்; லைடன் புடைவை நிலையம், இல. 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்; முருகன் ரெக்ஸ்ரைல்ஸ், இல.06, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்; பாலகிருஸ்ணன் தையலகம், பிரதான வீதி , அச்சுவேலி என யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எப்போதும் மிக உயர்ந்ததையே தேடு. ஏனெனில் மிக உயர்ந்ததில்தான் நித்தியமான பேரானந்தம் உள்ளது. நான் வேட்டையாட வேண்டுமானால் காண்டாமிருகத்தை வேட்டையாடுவேன். கொள்ளையடிக்க வேண்டுமானால் அரசனின் பொக்கிஷத்தைக் கொள்ளையடிப்பேன். எப்போதும் உயர்ந்ததையே தேடு.

ஆசைகள் பெருகப்பெருக இன்பத்தின் ஆற்றலும் வளர்கிறது. அதனுடன் கூடவே துன்பத்தின் ஆற்றலும் வளர்கிறது.

நீயே எங்கள் தந்தை, நீயே எங்கள் தாய், நீயே எங்கள் அன்பு நண்பன், உலகின் சுமையை நீயே தாங்குவாய். எங்கள் வாழ்க்கையின் சுமையை நாங்கள் தாங்கிக்கொள்ள எங்களுக்கு உதவுவாய். நீயே எங்கள் நண்பன். எங்கள் அன்பன். எங்கள் தலைவன். நீயே நாங்கள்.

கடவுள் ஒருவரே என்று நாங்கள் நம்புகிறோம். அவர் நம் எல்லோருக்கும் தந்தை. அவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர், எல்லையற்ற அன்புடன் அவர் தமது குழந்தைகளைக் காப்பாற்றுகிறார். வழி நடத்துகிறார்.

யாருடைய நம்பிக்கையையும் குலைக்காதீர்கள். இதில் மிகவும் கவனமாக இருங்கள். ஏனெனில் மதம் என்பது கொள்கைகளில் இல்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறு இருக்கிறோம், எவ்வாறு ஆகிக்கொண்டிருக்கிறோம் என்பதில்தான் மதம் உள்ளது; அனுபூதியில்தான் மதம் உள்ளது.

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்
# இலங்கை போராடி தோல்வி




நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டியில், நியூசிலாந்து அணி, 122 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இப்போட்டியில் தோல்வியடைந்த போதிலும், இளைய அணியாகக் களமிறங்கிய இலங்கை, சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்தியது. டுனேடினில் இடம்பெற்ற இப்போட்டியில், 3 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களுடன் நேற்றைய 5ஆவது நாளை ஆரம்பித்த இலங்கை அணி, 282 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

50.1 ஓவர்களுடன் நேற்றைய நாளை ஆரம்பித்த அவ்வணி, 20.1 ஓவர்களுக்கு விக்கெட் எதனையும் இழக்காததோடு, 3 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்கள் என்ற பலமான நிலையில் காணப்பட்டது. ஆனால், 71 ஆவது ஓவரின் 3 ஆவது பந்தில், நீல் வக்னரின் பந்தொன்றை ஆடாமல் அப்படியே விட முயன்ற அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்க, அதுவரை சிறப்பாக ஆடிவந்த டினேஷ் சந்திமால், 16 பந்துகளின் பின்னர் ஆட்டமிழந்து, இலங்கையின் நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இறுதியில், 95.2 ஓவர்களில், இலங்கையின் அனைத்து விக்கெட்டுகளும் வீழ்த்தப்பட்டன. துடுப்பாட்டத்தில் டினேஷ் சந்திமால் 58, குசால் மென்டிஸ் 46, கித்துருவன் விதானகே 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில், டிம் சௌதி 3 விக்கெட்டுகளையும் ட்ரெண்ட் போல்ற், மிற்சல் சான்ட்னெர், நீல் வக்னர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, மார்ட்டின் கப்டிலின் 156, கேன் வில்லியம்ஸனின் 88, பிரென்டன் மக்கலத்தின் 75 ஓட்டங்களின் துணையோடு 431 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், நுவான் பிரதீப் 4, சுரங்க லக்மால், துஷ்மந்த சமீர இருவரும் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, திமுத் கருணாரத்னவின் 84, டினேஷ் சந்திமாலின் 83 ஓட்டங்களின் துணையோடு 294 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் டிம் சௌதி, நீல் வக்னர் இருவரும் தலா 3, ட்ரென்ட் போல்ற், மிற்சல் சான்ட்னெர் இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் 3 ஆவது இனிங்ஸில், டொம் லேதமின் ஆட்டமிழக்காத 109, கேன் வில்லியம்ஸனின் 71, மார்ட்டின் கப்டிலின் 46 ஓட்டங்களின் துணையோடு, 3 விக்கெட்டுகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்று, இலங்கை அணிக்கு 405 ஓட்டங்களை அவ்வணி இலக்காக வழங்கியிருந்தது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, நியூசிலாந்து அணியில் மார்ட்டின் கப்டில் தெரிவானார். (க)



## காதலியை கரம்பிடித்தார் இந்தியாவின் ரோஹித்



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா தனது காதலி ரித்திகா சாஜ் தேவை மணந்துள்ளார்.

இவர்களது திருமணம் நேற்று முன்தினம் மும்பையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடந்தது. வரவேற்பு நிகழ்ச்சியை தொடர்ந்து இவர்களது திருமணம் நடைபெற்றது.

இவர்களது திருமணத்திற்கு சச்சின் தனது மனைவி அஞ்சலியுடனும், டோனி தனது மனைவி சாக்சியுடனும் வந்திருந்தனர். அதே போல், யுவராஜ் சிங் தனது காதலி ஹசல் கீச்சுடன் வந்திருந்தார்.


சமீபத்தில் இந்திய சுழற் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் தனது நீண்ட நாள் தோழியான கீதா பாஸ்ராவை திருமணம் செய்தார். தற்போது புதுமாப்பிள்ளை வரிசையில் ரோஹித்தும் இணைந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நிட்டா மற்றும் முகேஷ் அம்பானி மும்பை அணியின் வீரர்கள் மற்றும் புதுமாப்பிள்ளைகளான ரோஹித்சர்மா, ஹர்பஜன சிங்கிற்கு அவர்களது இல்லத்தில் விருந்தளித்தனர். (க)

## சாமுவேல்ஸ்சுக்கு தடை

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் ஓல்-ரவுணடரும், சுழற்பந்து வீச்சாளருமான சாமுவேல்ஸ், கடந்த மாதம் இலங்கைக்கு எதிரான டெஸ்டின் போது சந்தேகம் அளிக்கும் வகையில் பந்து வீசிய புகாரில் சிக்கினார். இது போன்ற சர்ச்சையில் 3 ஆவது முறையாக சிக்கிய அவரது பந்து வீச்சு, அவுஸ்திரேலியாவில் உள்ள பரிசோதனை மையத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இதில் அவரது பந்து வீச்சு விதிமுறைக்கு புறம்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதால, அவர் ஓராண்டு பந்து வீச ஐ.சி.சி. நேற்று முன்தினம் தடை விதித்தது. (க)



## போராடி வென்றது கம்பர்மலை யங்கம்பன்ஸ்



றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டி கலைமதி வி.கழக மைதானத்தில் நடைபெற்றது. பரபரப்பான அரையிறுதிப்போட்டியில் முழு நேரப்பந்தை தன்வசப்படுத்தி வைத்திருந்தது றேஞ்சர்ஸ் வி.கழகம். முதலாவது பாதியாட்டத்தில் றேஞ்சர்ஸ் அணியின் சக வீரர் வேகத்துடனான கோல் ஒன்றை போட்டார். இரண்டாவது பாதியாட்டத்திலும் றேஞ்சர்ஸ் அணியின் வேகத்தை கட்டுப்படுத்த தடுமாறியது யங்கம்பன்ஸ் அணி. தக்க தருணத்தில் அணியை மீண்டெடுத்தார் யங்கம்பன்ஸ் அணியின் முன்கள வீரர் நிறோஜன். நேரமுடிவில் போட்டி 1.1 என்ற அடிப்படையில் சமநிலையில் முடிந்தது.

வெற்றியை தீர்மானிப்பதற்கு சமநிலை தண்ட உதை வழங்கப்பட்டது. இதிலும் இரண்டு அணிகளும் போராடியது இப்போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். கோல் காப்பாளர் மகிந்தன் போட்டியில் திகில் வெற்றியை பெற்று இறுதிக்குதகுதி பெற்றது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி. (கு)

# ஊரதீவு - இறுப்பிட்டி வீதியூடான போக்குவரத்து முற்றாகத்தடை

## வீதியை கவனிப்பது யார்? மக்கள் கேள்வி



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஊரதீவு – இறுப்பிட்டி வீதியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த கனமழை காரணமாகவே இப்பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

புங்குடுதீவு ஊரதீவில் இருந்து ஆரம்பிக்கும் இவ்வீதி சுமார் 5 கிலோமீற்றர் நீளம் கொண்டது. முடிவிடத்தில் கழுதைப்பிட்டி துறைமுகம் காணப்படுகின்றது.

இவ்வீதி புனரமைக்கப்பட்டு சுமார் 60 வருடங்களுக்கு மேலாகின்றது. இவ்வீதி அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஊரதீவு சனசமூக நிலையத்துக்கு முன்பாக வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது.

வீதிக்கு குறுக்காக சுமார் 20 மீற்றர் வரையிலான பகுதி வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. இதனால் இவ்வீதியூடாக போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

கேரதீவு மற்றும் இறுப்பிட்டி பகுதியில் இருந்து பிற இடங்களுக்குச் செல்லும் மக்கள் இவ்வீதியூடாகவே பயணம் செய்ய முடியும். இப்பாதை தடைப்பட்டுள்ளதால் சுமார் 7 கிலோ மீற்றர் வரை சுற்றியே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாகாணசபைக்கு சொந்தமான இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள போதும் எவரும் அதனைத் திருத்த முன்வரவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-1)

# இறம்பொடையில் நீராடிய இருவர் நீரில் மூழ்கிப் பலி

(கொழும்பு)

இறம்பொடை ஓயாவில் நீராடச் சென்ற பெண்கள் இருவர் நீரில் அடித்துச் சென்றுள்ள சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக கொத்மலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது. இவ்வாறு இறந்தவர்கள் ஆர்.எஜ்.டி.தக்சலா தீபானி குணபால வயது 26 இவர் ஒரு ஆசிரியராவார், டி.நிர்மலா மானெல் ஜெயரத்ன வயது 33 இவர் தாதி ஒருவராவார் இவர்கள் இருவருமே நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் சிறிய கிலேத்தேவ முகுனு வட்டவல அலாவத்தை புத்தளம் என்ற விலாசத்தைத் கொண்டவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. புத்தளம் அலாவத்த பகுதியில் இருந்து நுவரெலியாவிற்கு சுற்றுலா பிரயாணிகளாக வந்த ஒரு குழுவினர் வரும் வழியில் இறம்பொடை ஓயாவில் நீராடச் சென்றுள்ளனர். குறித்த குழுவினரில் அநேகமானவர்கள் நீராடிய பின்பு வெளியேறியுள்ள நிலையில் அடித்துச் செல்லப்பட்ட இருவரும் நீண்ட நேரமாக நீராடிக் கொண்டிருந்துள்ளனர்.

இதன் போது திடீரென ஆற்றின் நீர் மட்டம் அதிகரித்துள்ள நிலையில் இவர்கள் இருவருக்கும் நீரிற்குள் இருந்து வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவருடன் வருகை தந்த அனைவரும் இவர்களை காப்பாற்ற பெரும் முயற்சி செய்துள்ள போதும் நீரின் வேகம் அதிகமாக காணப்பட்டதன் காரணமாக இவர்களை காப்பாற்ற முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## எரிபொருட்களின்...

வடையக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பெரல் மசகு எண்ணெயின் விலை 102 அமெரிக்க டொலர்களிலிருந்து 46 டொலராக குறைவடைந்துள்ளது இந்த விலை வீழ்ச்சியின் நன்மைகள் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

இதன் போது எரிபொருள் விலை நிர்ணயம் தொடர்பிலான பொறிமுறைமை ஒன்று விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் விரைவில் எரிபொருளுக்கான விலைகள் குறைவடையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடன் அடிப்படையில் எரிபொருள் கொள்வனவு செய்யப்படுவதனால் உலக சந்தை விலை நலன்களை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் விரைவில் இந்த முறைமையில் மாற்றம் கொண்டு வரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-11)

## 10 ஆயிரம் ரூபாய்...

விரைவில் அறிமுகம் செய்யப்படும். 2 ஆயிரம் ரூபாய் அடிப்படை வேதனமாக சேர்க்கப்படும்.

தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் பிரதமர் பாராளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

தமக்குள்ள அதிகாரத்தை நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மாத்திரமே பயன்படுத்துவதாகவும் சுய தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்துவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் ஊழியர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் ஓய்வூதியம் இல்லாது செய்யப்படுவதாகவும், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பன வெவ்வேறாக பேணப்படும் எனவும் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் இவை ஒன்றும் இடமபெறமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர்களின் நிதியை இதற்குப் பிறகு எவரும் கையாள முடியாத வகையில் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும்.

என்னால் செய்ய முடியாது என்றால் அதிகாரத்தை கைவிடத் தயார். 2016இல் இணைத்துக்கொள்ளப்படுகின்ற அரச ஊழியர்களுக்கு அவர்களின் ஓய்வூதியத் திட்டம் செயற்படுத்தப்பட்டே நியமனம் வழங்கப்படும்.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டம் உரிய முறையில் பேணப்படாமல் அரசாங்கம் பிரசித்தி பெற்றுக்கொள்வதற்காக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையால் அவை குறித்து கவனம் செலுத்தப்படும் என்பதோடு அவர்களின் ஓய்வூதியம் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

நிதியுடன் கூடிய ஓய்வூதியம் வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகவும் அது குறித்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்வாதார கொடுப்பனவை அடிப்படை சம்பளத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள முன்னெடுக்கப்படும். 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2 ஆயிரம் ரூபாய் சேர்த்துக்கொள்ளப்படும். ஏனையவை தவணை முறையில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பள நிலுவை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தேசிய சம்பள ஆணைக்குழு உருவாக்கப்படும் எனவும் பிரதமர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் துறை ஊழியர்களுக்கு 5 நாள் வேலை மற்றும் 2 ஆயிரத்து 500 ரூபாய் சம்பள உயர்வு என்பன உரிய முறையில் முனனெடுக்கப்படும் என்பதோடு, தொழிற்சங்கங்களும் நிறுவுநர்களும் கலந்துரையாடி தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் தனியார்துறை ஊழியர்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, ஜனவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில வழங்கப்பட்டுள்ள சலுகைகள் என்பவற்றை பிரதமர் மீண்டும் நினைவு கூர்ந்தார். (எ-11)

## சுஸ்மா விரைவில்...

னுக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

இதன் போது, இலங்கையுடனான உறவுகள் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், தாம் பாகிஸ்தானுடன் மட்டுமன்றி, இலங்கை உள்ளிட்ட பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடனும் பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவித்தார்.

ஒவ்வொரு வகையான பேச்சுக்களும், ஒவ்வொரு மட்டத்தில் நடக்கிறது. தமிழ் மீனவர்களின் பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக நாம் பிரச்சினை எழுப்பியுள்ளோம்.

கூட்டுக் குழுக் கூட்டம் தயாராகியுள்ளது. நான் இலங்கைக்கு செல்லவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், அவர் எப்போது பயணம் மேற்கொள்கிறார் என்ற விபரத்தை வெளியிடவில்லை. (எ-11)

## மகிந்தவின் சொத்...

யிருப்பதாகவும் இவர்கள் அங்கு ஆலோசனைகளைப் பெறுவதுடன், மகிந்த ராஜபக்ஷ இந்தியாவில் மேற்கொண்ட வர்த்தக இணக்கப்பாடுகள் குறித்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் நிதிமோசடி விசாரணைப்பிரிவின் தலைவரான பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்கார, குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைவர் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனிவிரத்ன ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். (எ-11)

## இராணுவ அதிகா...

பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சாட்சியத்தின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

எனது அண்ணாவான பேரம்பலநாதன் பிரதீபன் (வயது36) விடுதலைப்புலிகள் இயக்கத்தில் 19 வருடங்களாக இருந்தவர். கடந்த 2009 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 17 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் வட்டுவாகலில் இராணுவத்திடம் சரணடைந்தார். பின்னர் அவரைப் பற்றிய தகவல் எவையும் எமக்கு கிடைக்கவில்லை.

கடந்த 2010 ஆம் ஆண்டு சனல் 4 ஊடகத்தில் இறுதியுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட ஒருதொகுதியினர் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருப்பது போன்ற புகைப்படம் வெளியாகியிருந்தது. அதில் எனது அண்ணனை கண்டேன் அவர் உயிருடன் இருந்தார். அவருடன் எமது உறவினர்கள் சிலரும இருந்தனர்.

மற்றுமொரு புகைப்படத்தில் இராணுவத்தினர் எனது அண்ணனுடன் இருப்பவரை அழைத்துவரும் போது எடுக்கப்பட்ட புகைப்படமும் உள்ளது. அவரும் எனது உறவினர்களில் ஒருவர். அவரை அழைத்துவரும் இராணுவ அதிகாரியை விசாரணை செய்தால் எனது அண்ணாவை பற்றிய தகவலை பெற்றுக் கொள்ளமுடியும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 17 ஆம் திகதி இணையத்தளம் ஒன்றில் இராணுவத்திடம் சரணடைந்தவர்களுடைய விபரம் வெளியாகியிருந்தது. அதிலும் எனது அண்ணாவின் பெயர் உள்ளது. அவரை தேடி பூசா தடுப்புமுகாம் மற்றும் வெலிக்கட, மகசீன் சிறைச்சாலைகளுக்கு சென்றேன். அங்கு அவரைப் பற்றிய தகவல் எவையும் கிடைக்கவில்லை.

அனைத்து இடங்களிலும் முறைப்பாடு செய்துள்ளேன். தற்போது எனது அண்ணா இராணுவத்திடம் உயிருடன் இருந்த ஆதாரத்தையும் பெற்று உங்களிடம் கையளித்துள்ளேன். இனியும் தாமதிக்காமல் உரிய இராணுவ அதிகாரியை அழைத்து விசாரணை செய்து எனது அண்ணாவை பற்றிய தகவலை பெற்று என்னிடம் அவரை மீட்டுத்தாருங்கள் என கண்ணீருடன் மிக உருக்கமாக விசாரணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை இறுதிக்கட்ட போரில் இடம் பெற்ற படுகொலைகள் தொடர்பில் சனல் 4 வெளியிட்டிருந்த காணொளியில் தனது கணவன் கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதாக மற்றொரு பெண் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளார்.

எனினும் தனது பெயர் விபரங்கள் ஊடகங்களில் வெளிவருவதனை அவர் விரும்பாததனால் அவர் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை. பருத்தித்துறையை சேர்ந்த அவர் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்று வன்னியில் குடியமர்ந்துள்ளார்.

அங்கு நடைபெற்ற போரின் காரணமாக இராணுவ பிரதேசத்தை நோக்கி நாங்கள் சென்றோம். எங்களுடன் எமது குடும்பமும் வந்தது, எங்களில் சிலர் போரின் போது படுகாயமும் அடைந்தனர். இதனால் நாங்கள் ஒவ்வொருவராக சிதறிவிட்டோம். பின்பு சிலரை இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திலும், சிலரை இராணுவ முகாம்களிலும் கண்டோம்.

எனினும் எனது கணவரை காணவில்லை எனது கணவரினை சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய காணொளியில் கண்டேன். அதன பின்னர் எனது கணவனை காணவில்லை என அந்த பெண் கூறினார் இது தொடர்பிலும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக கூறியு ள்ளதாக தெரிவிக்கும் அந்த பெண், சனல் 4 வெளியிட்ட காணொளி உண்மையானதே என்றும் கூறினார். (எ-4-9)

# வேலைநிறுத்த போராட்...

மேலும் அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கமும் வேலை நிறுத்தத்தைக் கைவிடத் தீர்மானித் துள்ளதாக, அதன் தலைவர் சமன் ரத்னப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் வங்கி சேவைகள் சங்கம் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ள நடவடிககை எடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது. (முன்னர் வந்த செய்தி உள்ளே) (எ-11)

# அமெரிக்காவுக்குச் செல்ல...

பொன்சேகா இரண்டு வாரங்களுக்கு முன்னர், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நுழைவிசைவுக்கு விண்ணப்பித்திருந்தார்.

எனினும், இதுவரை அமெரிக்கத் தூதரகத்திடம் இருந்து பதில் வரவில்லை என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில், இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம் பெற்றதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளதை தொடர்புபடுத்தியே அமெரிக்க இராஜாங்கத் திணைக் களம் அவரது நுழைவிசைவு விண்ணப்பத்தை நிறுத்தி வைத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க நுழைவிசைவு வழங்க கொழும்பிலுள்ள தூதரகம் சரத் பொன்சேகாவுக்கு மறுப்பதற்கு வேறு காரணங்கள் இல்லை என்றும், அந்த தகவல்கள் கூறுகின்றன.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கடந்த ஐந்து ஆண்டுகளாக அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ளவில்லை. இதனால் அவரது கிறீன் அட்டையும் காலாவதியாகியுள்ளது.

அமெரிக்காவில் வசிக்கும் தனது மகள்களைப் பார்க்கவும், அங்குள்ள இலங்கையர்களைச் சந்திக்கவுமே, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நுழைவிசைவுக்கு விண்ணப்பித்திருந்தார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு நுழைவிசைவு பெற்றுக் கொடுப்பதற்கு, அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம், இராஜாங்கத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, சரத் பொன்சேகாவின் நுழைவிசைவு விண்ணப்பத்தை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளதாக, அவரது கட்சியின் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (எ-11)

# நஷ்டஈடு வழங்குவதிலேயே...

கடத்திச் சென்றதாக தாய் ஒருவர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம்அளித்துள்ளார். காணாமல போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் 4ஆம் நாள் அமர்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

அங்கு சாட்சியமளித்த தாயார், வல்வெட்டித்துறை தம்பசிட்டி பகுதியைச்சேர்ந்த ஜி.கிருபாகரன் 22 வயதில் கடத்திச் செல்லப்பட்டார். 2007 மார்ச் 04 ஆம் திகதி கம்பர்மலைப் பகுதியில் வைத்து வல்வெட்டித்துறை இராணுவத்தினர் கடத்திச் சென்றுள்ளனர். கம்பர்மலைப் பகுதியில் தோட்ட வேலைக்குச் சென்று மதியம் சாப்பிட்டு விட்டு இளைப்பாறிக் கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் எனது மகனையும், அவருடன் தோட்ட வேலை செய்த மற்றைய இரு இளைஞர்களையும் கடத்திச் சென்றுள்ளார்கள்.

அந்த இடத்தில் சென்றவர்கள் என்னிடம் இராணுவத்தினர் பிடித்துச் சென்றதாக சொன்னார்கள். நாங்கள் வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் போய் விசாரித்த போது அவர்கள் பிடிக்கவில்லை என்று சொன்னார்கள். எனக்கு கண் தெரியாது.

நான் கொழும்புக்கு போகவில்லை. ஆனால், பொலிஸ் நிலையம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழு உள்ளிட்ட பல இடங்களில் முறைப்பாடு பதிவு செய்துவிட்டேன்.

ஆனால் நான் கொழும்பிற்கு செல்லவில்லை. எனக்கு ஒரு உதவியும் வேண்டாம்.

என்னை எனது பிள்ளை தான் பார்க்க வேண்டும். எனது பிள்ளையை கண்டுபிடித்துத் தருமாறு கேட்டார்.

மேலதிக விசாரணைமேற் கொண்டு அதன்பின்னர் பதில் தருவதாக ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். (எ-4)

# நேற்றைய விசார...

பதி ஆணைக்குழுவின் 4 ஆம் நாள் விசாரணைகள் நேற்றையதினம் பருத்தித்துறை பிரதேசசெயலகத்தில் நடைபெற்றன.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட 271 பேர் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு அதில் வருகை தந்த 158 பேருக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

அத்துடன் 61 புதிய முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட்டு அதில் ஒரு முறைப்பாடு விசாரணைக்குட்படுத்தப்பட்டது.

மொத்தமாக 159 பேர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு அவர்களுடைய சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (எ-9)

# 'தீக்குளிப்போம்'....

பிள்ளைகளை விடுவிக்காமல் மறைத்து வைத்துள்ளீர்கள் எனவும் அந்த தாய் ஆணைக் குழுவினரிடம் கேட்டுள்ளார்.

பதினொரு வருடங்களுக்கு முன்னர் தனது முதலாவது மகனான சதாசிவம் குமரன் என்பவர் சிதம்பரா விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது சுட்டுக்கொலை செய்யப்பட்டதாகவும்,

அதன் பின்னர் தனது இரண்டாவது மகனான சதாசிவம் வசீகரன் என்பவர் 2006 ஆம் ஆண்டு மே மாதம் இருபத்து ஆறாம் திகதி புறாப்பொறுக்கி குஞ்சர் கடையில் வைத்து இராணுவம் பிடித்து காணாமல் போனதாகவும், தனக்கு நேர்ந்த இழப்புக்களை விபரித்தார் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியை சேர்ந்த அந்த தாய், நான் எனது மகனை கடந்த பத்து வருடங்களாக தேடி வருகின்றேன்.

நூற்றுக்கணக்கானவிசாரணைகள், சாட்சியங்கள் என பதிகின்றீர்கள். இதுவரை எங்களுக்கு நீங்கள் தந்த முடிவு என்ன? வெறும் அழுகை தானே? கடந்த அரசில் இருந்தவர்கள் தான் கெட்டவர்கள் என்றால் இப்போதும் உள்ளவர்கள் கெட்டவர்களாக தானே உள்ளனர்.

பதவிக்கு வரமுன்னர் எல்லாம் செய்வதாக கூறினார்கள. அவர்கள் வரவேண்டும் என நாங்களும் விரும்பி வாக்களித்தோம், எமது பிள்ளைகளை மீட்டுத்தருவாரகள் என்ற நம்பிக்கையில் வாக்களித்தோம், இப்போது எங்களை ஏமாற்றிக் கொண்டு உள்ளார்கள், நீங்கள் எழுதும்எழுத்து உண்மையானால் எங்களது மகன்களை கண்டு பிடித்து தாருங்கள் என கையெடுத்து கும்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரியிடம் போய் சொல்லுங்கள், எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு கிடைக்கா விட்டால், நாம் இருப்பதில் பலனில்லை என்று, எனக்கு இப்போது மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். அவர்களை எவ்வாறு கரை சேர்ப்பது? என விரக்தியுடன் அந்த தாய் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கூறினார். (எ-4)



சாமியே சரணம் ஐயப்பா
ஈழத்து சபரிமலை
சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்
இறுவெட்டு வெளியீட்டு அழைப்பு
இடம் : தேவஸ்தான மண்டபம்
காலம் : இன்று 15-12-2015 (செவ்வாய்)
பஞ்சமூர்த்தி குமரன் நாதஸ்வரத்தில் வாசித்த
சபரீச நாதம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சபரீச ஐயப்ப தேவஸ்தானம்
(2789)

இவ் விடுமுறைக்காலத்தில் உங்கள் உறவினர், நண்பர்களை பார்வையிட
VISIT VISA
15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
STUDENT VISA – SPOUSE VISA – WORK VISA
DEPENDANT VISA – SKILLED MIGRATION
(C-2970)
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 077 36 16 798 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 05 - 1931
உதிர்வு 07 - 12 - 2013
அமரர் கணபதிப்பிள்ளை வில்வலிங்கம்
15-12-2015
குடும்பத்தின் ஒளி விளக்காய் - அன்பின் இருப்பிடமாய் நற்பண்புகளுடன் நல் வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே உங்கள் நினைவுடன் என்றும் வாழ்கிறோம்.
99, திருநகர் வடக்கு, கிளிநொச்சி.
(2768)
குடும்பத்தினர்

COMBINED MATHEMATICS
புதிய அலகுகள் ஆரம்பம்
★ 2016 Batch
தொகையீட்டின் பிரயோகம் (9.30 - 11.30 AM)
★ 2017 Batch
ஒரு தளவிசைகள் (11.30 - 1.30 )
ஆரம்பம் : 19.12.2015 சனி
By :- S.S Senthilraj B.Sc, PGDE
NEW SCIENCE WORLD VICTORY MUST
NEW SCIENCE WORLD
NAVALAR ROAD - BROWN ROAD Junction, JAFFNA.
(C-2967)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
சிவஸ்ரீ சதாசிவம் ஐயர் தில்லைநாதன் ஐயா

எமது கிராமத்தைச் சேர்ந்தவரும் மூத்த சைவக்குருவுமாகிய சிவஸ்ரீ சதாசிவம் ஐயர் தில்லைநாதன் ஐயா அவர்கள் கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெறும் கௌரவிப்பு விழாவில் கலாபூஷண விருது பெறுவதையிட்டு மனமகிழ்வுடன் பாராட்டுவதோடு அரசடி விநாயகரின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
அரசடிப் பிள்ளையார் ஆலயம்
நாயன்மார்கட்டு, நல்லூர்.
(2788)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.